


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் **www.puratchiperiyarmuzhakkam.com** திருவள்ளுவர் ஆண்டு 2038 மே 3, 2007 புரட்சி 4 முழக்கம் 73 **விலை : ரூ.2.50**


## பெரியார் தொண்டர்களை 'தேச விரோதிகளாக' அறிவித்த கலைஞர் அரசுக்கு உயர்நீதிமன்றம் பதிலடி

# தேசியப் பாதுகாப்புச் சட்டம் ரத்து

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கலைஞர் ஆட்சியில் சிறையில் அடைக்கப்பட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் லட்சியத் தோழர்கள் ஏழு பேரையும் உயர்நீதிமன்றம் விடுதலை செய்தது. கலைஞர் ஆட்சி இவர்கள் மீது பிறப்பித்த தேசியப் பாதுகாப்புச் சட்டம் செல்லாது என்று, கடந்த ஏப்ரல் 26, 27 தேதிகளில் உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' தீர்ப்பளித்தது. மூத்த வழக்கறிஞரும், கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, கழக வழக்கறிஞர் இளங்கோவன் ஆகியோர் இந்த வழக்கில், தோழர்கள் சார்பில் வாதாடினர். சென்னை சிறையில் அடைக்கப்பட்டிருந்த கழகத் தோழர் எஸ்.குமரன், நீதிமன்றத் தீர்ப்பினையொட்டி, ஏப்.20 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார். ஏற்கெனவே, இவர் மீது காவல்துறை, கிரிமினல் சட்டப் பிரிவுகளின் கீழ் தொடர்ந்திருந்த வழக்கில், இவருக்கு பிணை கிடைத்திருந்ததால், உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஏனைய தோழர்கள் மீது ரத்து செய்து, உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தாலும், ஏற்கனவே அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள கிரிமினல் வழக்குத் தொடர்பாக, பிணை பெறப்பட வேண்டியிருப்பதால், உயர்நீதிமன்றத் தீர்ப்பினையொட்டி இவர்கள் உடனடியாக விடுதலையாக முடியவில்லை. வியாழக்கிழமை - பெரம்பலூர் மாவட்டத் தோழர்கள் இலக்குமணன், தாமோதரன் ஆகியோர் விடுதலையானார்கள். கோவை சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஈரோடு மாவட்டக் கழகத் தோழர்கள் இராம.இளங்கோவன், குமரகுருபரன், முருகானந்தம், அர்ச்சுனன் ஆகியோர் மீதான பிணை மனு, வெள்ளிக் கிழமை விசாரணைக்கு வருகிறது.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தினை எதிர்த்து இராம. இளங்கோவன் சார்பாக அவரது துணைவியார் நாத்திக ராணியும், குமரகுருபரன் சார்பாக அவரது துணைவியார் ஜோதியும், இராம. முருகானந்தம் சார்பாக அவரது தாயார் புஷ்பாவும், அர்ச்சுணன் சார்பாக அவரது துணைவியார் ரஞ்சிதாமணியும், லெட்சுமணன் சார்பாக அவரது நண்பர் சாக்ரடீசும் தாமோதரன் சார்பாக அவரது சகோதரர் இளங்கோவனும் மற்றும் குமரன் சார்பாக அவரது துணைவியார் கவுரி குமரனும் கழக வழக்கறிஞர்கள் வி. இளங்கோவன் மற்றும் எம்.செந்தில் குமார் மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 'ஆட்கொணர்வு' மனுக்களை தாக்கல் செய்தனர்.

வழக்கறிஞர் வி. இளங்கோவனின் வாதத்தை ஏற்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா மற்றும் கே.மோகன்ராம் ஆகியோர் 'ஆட் கொணர்வு' மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு மத்திய மாநில அரசுகளுக்கு 11.2.2007 அன்று தாக்கீது அனுப்ப உத்தரவிட்டனர்.

பெரும் பரபரப்புடனும், ஆவலுடனும் எதிர்பார்க்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த 7 வழக்குகளில் இலட்சுமணன், தாமோதரன் மற்றும் குமரன் ஆகிய மூவரின் வழக்குகளை மட்டும் 26.4.2006 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா மற்றும் ஜே.ஏ.கே.சம்பத் குமார் ஆகியோர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர்.

பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினரும், சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான எஸ்.துரைசாமி ஆஜராகி அவர்கள் மீது போட்ட வழக்குகளுக்கு தேசிய பாதுகாப்பு சட்டம் பொருந்தாது என்றும், பூணூல் அறுத்ததாக சொல்லப்பட்டதாலேயே தேசத்திற்கு என்ன பங்கம் ஏற்பட்டுவிட்டது என்றும் வாதிட்டார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதாடினார். தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் போட்டது சரிதான் என்றும் இச்சம்பவத்தினால் இந்திய தேசத்திற்கு ஊறு ஏற்பட்டது என்றும், மாநில அரசின் சார்பில் அரசு வழக்கறிஞர் பாபுமுத்து மீரானும் மத்திய அரசின் சார்பில் வழக்கறிஞர் குமரேசனும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களை வெளியே விட்டால் தொடர்ந்து இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும், இதனால் மத்திய மாநில அரசுகளுக்கு பேரிடர் ஏற்படும் என்றும் வாதிட்டனர். வழக்கறிஞர் துரைசாமியின் வாதத்தை ஏற்று நீதிபதிகள் மூவரையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் அடைத்தது செல்லாது என்றும், உடனடியாக தேசிய பாதுகாப்புச் சட்டத்திலிருந்து இலட்சுமணன், தாமோதரன் மற்றும் குமரன் ஆகியோரை விடுவிக்க வேண்டும் என்றும் 26.4.2007 அன்று உத்தரவிட்டனர்.

அதே போன்று ஈரோடு மாவட்ட கழகத் தோழர்கள் சார்பாக தாக்கல் செய்த ஆட் கொணர்வு மனுக்கள் நீதிபதி பி.கே. மிஸ்ரா மற்றும் ஆர். சுதாகர் ஆகியோர் முன்னிலையில் 27.4.2007 அன்று விசாரணைக்கு வந்தது. இம்முறை ஜே.எ.கே. சம்பத் குமாருக்கு பதிலாக நீதிபதி ஆர். சுதாகர், நீதிபதி பி.கே.மிஸ்ராவுடன் விசாரணையில் அமர்ந்தார். வழக்கறிஞர் துரைசாமி மற்றும் வழக்கறிஞர் இளங்கோவன் பல்வேறு முன் தீர்ப்புகளை எடுத்துக்காட்டி, தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தது செல்லாது என வாதிட்டனர். வழக்கம் போல் மத்திய மாநில அரசு வழக்கறிஞர்கள் கடுமையாக ஆட்சேபம் செய்தனர். ஆனால் நீதிபதி பி.கே. மிஸ்ரா மற்றும் ஆர். சுதாகர் ஆகியோர் அடங்கிய அமர்வு, கழகத்தினர் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தது தவறானது என்றும், ஆவணங்களை சரியாக ஆராயாமல் தேசிய பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டுள்ளது என்றும் தீர்ப்பளித்து உடனடியாக நால்வரையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விடுவிக்க உத்தரவிட்டனர்.

கடந்த டிசம்பர் 7 ஆம் தேதி கைது செய்யப்பட்டு, அய்ந்து மாத சிறைவாசத்துக்குப் பிறகு தோழர்கள் விடுதலையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. பெரியார் சிலையில் கை வைத்தால் தமிழ்நாடு பொறுக்காது என்பதை, பெரியார் திராவிடர் கழகம், வரலாற்றில் பதிவு செய்து - இந்த மகத்தான 'விலை'யைத் தந்துள்ளது.

வழக்கில் - வாதாடி - தோழர்கள் விடுதலைக்குக் காரணமான வழக்கறிஞர் துரைசாமி, இளங்கோவனுக்கு, சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள், சால்வை அணிவித்துப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

**– நமது செய்தியாளர்.**


**மேலும் செய்திகள் 2 ஆம் பக்கம்**


## மே 19 இல் தஞ்சையில் சாதி ஒழிப்பு மாநாடு! தயாராவீர்!

1957 இல் சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுக்குத் தீயிட்டு, 3000 கருஞ்சட்டைப் படையினர், 6 மாதம் முதல் 3 ஆண்டு வரை சிறையில் வாடிய தியாக வரலாற்றுக்கு இது, 50 ஆம் ஆண்டு!

சிறையிலே இறந்தவர்கள் இருவர். சிறைக்குள் மெல்ல மெல்ல மரணத்தைச் சந்தித்து, விடுதலையான சில நாள்களிலே மரணத்தைத் தழுவியோர் 20க்கும் மேல்.

அந்தக் கருப்பு மெழுகுவர்த்திகளை நினைவுகூர்ந்து, அவர்கள் தியாகத்தின் மீது உறுதி எடுத்து - சாதி ஒழிப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தஞ்சையில் கூடுகிறது, பெரியார் திராவிடர் கழகத்தின் இளைஞர் பட்டாளம்.

- சாதி ஒழிப்புக் கிளர்ச்சியில் பங்கேற்ற மூத்த போராளிகள் பங்கேற்கிறார்கள்!
- கருத்தரங்கம் – பொது மாநாடு – எழுச்சிப் பேரணி!
- மத்திய அமைச்சர் ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன்
- சமூக ஆய்வாளர் முனைவர் பி.டி.சத்யபால் (ஆந்திர பல்கலைக்கழகம்)
- உ.பி.யில் பெரியார் வழியில் வீறு நடை போட்டு, உ.பி.யை கலக்கி வரும் 'சூத்ரா' அமைப்பின் முன்னணித் தலைவர்கள்!
- நாகை எஸ்.எஸ். பாட்சா, அழகிய பெரியவன், புனித பாண்டியன், வெண்ணிலா மற்றும் சாதி ஒழிப்பு சிந்தனையாளர்கள் பங்கேற்கிறார்கள்.
- பள்ளத்தூர் நாவலரசன் – தங்கம் குழுவினரின் இசை நிகழ்ச்சி.

♦ கொள்கைக்காக - வாழ்ந்து வழிகாட்டிய நமது மூதாதையர்களை நினைவு கூர்வோம்.

♦ அவர்கள் விட்டுச் சென்ற பாதையில் தடம் பதிப்போம்.

♦ இளம் தலைமுறை பெரியாரியத்தை உயர்த்திப் பிடிக்கக் கிளம்பிவிட்டது என்பதை பறைசாற்றுவோம்!

**தோழர்களே, தஞ்சைக்கு திரளுவீர்!**

(நிகழ்ச்சியின் முழு விவரம் பின்னர்)

## கலைஞரே, இதுதான் உங்கள் 'நீதி'யோ!

"திராவிடர் கழகத்தைப் பொறுத்த வரை - நாங்கள் எதிர் நடவடிக்கை களில் இறங்குவதென்றால், திட்டமிட்டு, தீர்மானம் போட்டு, காவல் துறைக்குத் தகவல் கொடுத்து முறைப்படித்தான் செய்வோம்"

*– இது திருவாளர் கி.வீரமணி விடுத்த அறிக்கை. எப்போது? ஸ்ரீரங்கத்தில் பெரியார் சிலை உடைக்கப்பட்ட போது, பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கொதித் தெழுந்து, பார்ப்பனர்களின் பூணூல் களை அறுத்தபோது, பெரியார் திராவிடர் கழகத்தினரைக் காட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடு, விடுத்த அறிக்கை.*

"பெரியார் சிலையை உடைத்த வர்கள் மீதும், அதற்குப் போட்டி யாக, சில கடவுளர் படங்களை உடைத்தவர்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இரு சாராரும் கைது செய்யப் பட்டுள்ளனர். இன்னும் சொல்லப் போனால், வீரமணி குறிப்பிட் டிருப்பதைப் போல், கடவுளர் படங்களை எரித்தவர்கள் திராவிடர் கழகத்தினர் அல்ல. அவர்கள் பெரியார் திராவிடர் கழகம் என்ற வேறு ஓர் அமைப்பைச் சார்ந்தவர்கள்"

*– இது தமிழக முதல்வர் கலைஞர் அப்போது அளித்த பேட்டி!*

*இப்போது – முத்துப்பேட்டையில் மீண்டும் பெரியார் சிலை உடைக்கப் பட்டதைத் தொடர்ந்து, தஞ்சையில் பார்ப்பனர்களின் பூணூல் அறுக்கப் பட்டது. நெய்வேலியில் வில்லுடை யான் பட்டு முருகன் கோயிலுக்குள் அர்ச்சகப் பார்ப்பனரின் பூணூல் அறுக்கப்பட்டுள்ளது, அர்ச்சகர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.*

*இந்தத் தாக்குதலை நடத்தியவர் கள் திராவிடர் கழகத்தினர்.*

*இது தொடர்பாக வீரமணி தலைமை யிலான திராவிடர் கழகத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*


*பெரியார் திராவிடர் கழகத்தினர் மீது, இதே "குற்றத்துக்காக" – தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டு – பார்ப்பனர்களை குளிர வைத்த தமிழக முதல்வர் கலைஞர், இப்போது, தனது 'அரசவைப் பாராட்டுரையாளர்' கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதற்காக, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட முன்வரவில்லை. எதையும் தீர்மானம் போட்டுத்தான் செய்வோம் என்று 'வீராப்பு' பேசிய வீரமணியார் களின் முகத்திரையும் இதில் கிழிந்து தொங்குகிறது.*

*தேசியப் பாதுகாப்புச் சட்டம் யார் மீதும் பாயக் கூடாது என்பதே எங்கள் நிலை. ஆனாலும், 'குலத்துக்கு ஒரு நீதி' கூறும் 'வர்ணாஸ்ரமத்தை'ப் போல் – 'புகழ் பாடிகளுக்கு' ஒரு 'நீதி' யையும், 'கொள்கையாளர்களுக்கு' ஒரு 'நீதி'யையும் பின்பற்றும் தமிழக முதல்வரின் இரட்டை வேடத்தை – தமிழின உணர்வாளர்களின் சிந்தனைக்கு முன் வைக்கிறோம்!*

# கழக வழக்கறிஞர்கள் முன் வைத்த வாதங்கள்

நீதிமன்றத்தின் முன் கழகத் தோழர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி மற்றும் வி. இளங்கோவன் ஆகியோர் முன் வைத்த வாதங்கள்.

- தங்கள் முன் உள்ள ஆவணங்களைச் சரிவர ஆராயாமல் இயந்திரத்தனமாக ஈரோடு மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர்களாலும் சென்னை மாநகர காவல்துறை ஆணையராலும் கழகத்தின் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது தவறு.
- தேசிய பாது காப்பு சட்டத்தில் கைது செய்யக்கூடிய அளவிற்கு தேச பாதுகாப்பு விரோத நடவடிக்கை களிலும், பொது அமைதிக்கும் பங்கம் ஏற்படும் வகையிலும் கழகத்தினர் நடந்து கொண்டார்கள் என்பதற்கு ஆதாரங்கள் ஏதும் இல்லை.
- தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டாலும் கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் அடங்கிய தொகுப்புகளை குறிப்பிட்ட காலத்திற்குள் கைதி களுக்கு வழங்காமலிருந்தது அவர்களின் உரிமையை பாதிப்பதாகும். இதனால் மத்திய மாநில அரசுகளுக்கு தடுப்புக் காவல் ஆணையை எதிர்த்த விரைவாக முறையீடு செய்து கொள்ளும் உரிமையானது மறுக்கப்பட்டுள்ளது.
- கழகத்தினர் தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதற்கு ஆதாரமேதுமில்லை.
- பூணூல் அறுத்த சம்பவம் தேச விரோதம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு பங்கமா ? பூணூல் என்ன தேசத்தின் புனித நூலா ?
- ஈரோடு மாவட்ட கழகத் தோழர்களுக்கு எதிராக போடப்பட்ட முந்தைய வழக்குகள் அனைத்தும் அதாவது 17.3.2006 அன்று நடைபெற்ற விசுவ இந்து பரிசத் மாநாட்டை எதிர்த்து ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தது, இரண்டாவதாக 26.5.2006 அன்று டெல்லியில் வேலை நிறுத்தம் செய்து வரும் உயர் சாதி பார்ப்பன மாணவர்களைக் கண்டித்து ஈரோடு தலைமை தபால் நிலையம் முன்பாக இராம.இளங்கோவன் மற்றும் 38 நபர்களும் கோஷம் எழுப்பி தர்ணா போராட்டம் செய்தது. மூன்றாவதாக 22.11.2006 அன்று ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பாக இடஒதுக்கீடு தொடர்பாக வீரப்பமொய்லி தாக்கல் செய்த அறிக்கையினை எரித்து போராட்டம் நடத்தியது ஆகிய 3 வழக்குகளும் சட்டப்பிரிவு 151 குற்ற விசாரணை முறை சட்டத்தில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எந்தவிதமான தேச விரோத நடவடிக்கைகளிலும் இதற்கு முன் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை என்றும், ஆனால் ஈரோடு மாவட்ட ஆட்சியர் தன் உத்தரவில் ஏற்கனவே இவர்கள் பொது அமைதி மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகமான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளார்கள் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளது வேண்டுமென்றே இவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டம் பிரிவு 3(2)ன் கீழ் கைது செய்யத் தான்.



- தடுப்புக் காவல் உத்தரவில் சாதி, மத, இன உணர்வு களை தூண்டும் பொருட்டு கழகத்தினர் செயல்பட்டுள்ளனர் என்பதற்கு ஆதாரம் ஏதும் வழங்கப்படவில்லை.
- தனிப்பட்ட சொத்தை சேதப்படுத்தினர் என்பதற்கு தான் போலீசார் ஆவணங்களை காட்டியுள்ளனரே தவிர பொதுச் சொத்தை சேதப்படுத்தியதாக கழகத்தினர் மீது எந்தவிதமான சாட்சியங்களும் இல்லை.
- உயர் அதிகாரிகள் மற்றும் ஆளும் அரசியல் கட்சியினர் உத்தரவின்படி வேண்டுமென்றே ஒரு சிலரை திருப்திப்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்புச் சட்டம் கழகத்தின் மீது போடப்பட்டுள்ளது.
- பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் லெட்சுமணன், தாமோதரன் ஆகியோரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தது 17.12.2006. ஆனால் அவர்கள் இருவரையும் 15.12.2006 அன்றே தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்துவிட்டதாக பெரம்பலூர் நீதித் துறை நடுவரிடம் தெரிவித்துள்ளது பொய்யானது, ஏற்கனவே திட்டமிட்ட ஒன்று.
- லெட்சுமணன் மற்றும் தாமோதரன் ஆகியோர் எந்த சூழ்நிலையிலும் போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை. அதற்குண்டான ஆவண ஆதாரமே இல்லாதபோது பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இருவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக தமது உத்தரவில் சொல்லிருப்பது கற்பனையானதாகும், வேண்டுமென்றே சொல்லப்பட்டதாகும். தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகச் சொல்லியுள்ளார்.
- சென்னை மாவட்ட கழகத் தோழர் குமரன் ஜாமீனில் வெளிவந்து உயர்நீதிமன்ற உத்தரவுபடி அசோக் நகர் காவல் நிலையத்தில் தினமும் காலையில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கும்போது நிபந்தனைக் காலம் முடிவதற்கு முன்பே குமரன் இது போன்றே தேசவிரோத நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடலாம் என்று கூறி எந்தவிதமான ஆதாரமுமில்லாமல் அவரை தடுப்புக் காவலில் வைத்தது தவறானதாகும்.
- சென்னை மாநகர ஆணையருக்கு தமிழ் படித்து எழுத வராது. அப்படி இருக்கும்போது அவர் எப்படி ஒரே நாளில் நூற்றுக் கணக்கான தமிழிலுள்ள ஆவணங்களைப் படித்து புரிந்து கொண்டு ஒரே நாளில் குமரன் மீது தமிழில் உத்தரவு பிறப்பித்திருக்க முடியும்.
- சென்னை மாநகர ஆணையர் தம் உத்தரவில் குமரன் பெட்ரோல் குண்டுகளை வீசியுள்ளதாக கூறியுள்ளார். ஆனால் எந்தவிதமான சாட்சியோ, ஆவணமோ குமரன் சொல்லப்பட்டதாகச் சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்திலே குமரன் தான் பெட்ரோல் குண்டுகளை எரிந்தார் என்பதற்கு ஆதாரமில்லை. ஆகவே கற்பனையாக உள்ள சம்பவங்களைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் அடைத்தது செல்லாததாகும்.
- தேசிய பாதுகாப்புச் சட்டம் என்றாலே பிரிவு 3(1) அல்லது 3(2)-ல் தான் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க முடியும். ஆனால், குமரனுக்கு மட்டும் பிரிவு 10 இன் கீழ் சென்னை மாநகர ஆணையர் உத்தரவு பிறப்பித்துள்ளதென்பது யாரோ எழுதிக் கொடுத்து அதில் ஆணையர் கையொப்பமிட்டதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டத்தை சரிவர பரிசீலிக்காமல் போடப்பட்ட உத்தரவாகும். ●

# தேசிய பாதுகாப்புச் சட்டம் எவர் மீதும் பாயக்கூடாது!

## ஈரோடு பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் முழக்கம்

*தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கழகத் தோழர்களை சிறைப்படுத்தியுள்ள தமிழக அரசைக் கண்டித்து 19.3.07 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய கருத்தாழம் மிக்க உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி:*

**1980**க்கு முன்பு ஒரு கலைஞர் இருந்தார், கொஞ்சம் கொள்கையுடன் இருந்தார். இப்போது அதையும் முற்றும், முழுவதுமாகவே விட்டுவிட்டதாகவே தோன்றுகிறது.

நீங்கள் கேட்கலாம், 'தேர்தல் காலத்தில் கலைஞரை ஆதரித்தீர்களே' என்று! ஜனநாயகத்தில் தேர்தலில் நிற்பவர்களில் யார் சிறந்தவர்கள் என்றுதான் வாக்களிக்க முடியும். அந்த வகையில் இன்றும்கூட 'கலைஞரா - ஜெயலலிதாவா' என்றால், கலைஞர் பக்கம் தான் நிற்போம். அதில் ஒன்றும் வேறுபாடு இல்லை. ஆனால் நீங்கள் கலைஞராக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பித்தான் இந்தக் கோரிக்கைகளை வைக்கிறோம்.

பார்ப்பானுக்குக்கூடத் தெரிகிறது! சுஜாதாகூட 'அயோத்தியா மண்டபம்' என்ற ஒரு கதை எழுதினான். அதில் ஒரு பார்ப்பான் மகன் பிற்படுத்தப்பட்டப் பெண்ணை திருமணம் செய்ய ஒப்புக் கொள்ளாமல், உருட்டுக் கட்டை அடி விழுந்த பிறகுதான் நானும் உன் கூட வருகிறேன் என்று கூறுகிறான். உருட்டுக் கட்டையில் அடித்தால்தான் பார்ப்பனர்கள் சாதி மறுப்புத் திருமணத்தைக்கூட ஏற்றுக் கொள்வார்கள் என்று சுஜாதாவுக்குப் புரிந்திருக்கிறது.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தியதைக் கண்டித்து 16.3.2007 நடந்த போராட்டத்தில் நாங்கள் எழுப்பிய முழக்கத்தில் **"ஜெயா போட்டது பொடா! கலைஞர் போட்டது என்.எஸ்.ஏ.! கொடியில், பெயரில் சிறு மாற்றம். கொள்கையில் இருவரும் ஒரே மட்டம்!"** என்று முழக்கம் எழுப்பினோம்.

'இருவருக்கும் வேறுபாடு இல்லையே' என்ற ஆதங்கத்தில் நாங்கள் எழுப்பிய குரல் உங்கள் காதுகளுக்கும் போக வேண்டும் - இல்லை என்றால் உளவுத் துறை வழியாகக் கேட்க வேண்டும் என்ற விருப்பத்தோடுதான் இவற்றைப் பதிவு செய்கிறோம்.

### காவல்துறையில் குளறுபடிகள்

தமிழக காவல்துறைத் தலைவர் ஈரோடு நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அறிக்கை விடுகிறார். அவர் சொல்லும்போதே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவர்களைக் கைது செய்யவுள்ளோம் என்று பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கிறார். எப்படி சொல்ல முடிகிறது?

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் ஒருவரைக் கைது செய்ய மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பரிந்துரைக்க வேண்டும். அதை ஏற்றுக் கொண்டு மாவட்ட ஆட்சியர் ஆணை பிறப்பிக்க வேண்டும். அது தற்காலிகமானதே. 12 நாட்களுக்குத்தான் மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம். சட்டத் துறைக்கு சென்று சட்டத்துறை ஏற்றுக் கொண்டால்தான் 12 நாட்களுக்கு மேல் வழக்கு நீடிக்கும். சட்டத்துறை பார்த்திருக்கும் அல்லவா? இந்த வழக்கு உங்களிடமும் வந்திருக்குமல்லவா? "பூணூலை அறுத்தது குற்றம்" என்று எழுதியிருப்பதை நீங்களும் பார்த்துவிட்டு, 'ஆமாம், ஆமாம்!' என்று கூறி விட்டீர்களா?

ஈரோடு மாவட்டத் தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் ஏன் பாய்ந்தது என்று மாவட்ட ஆட்சியர் போட்ட அறிவிப்பு, "தடுப்புக் காவல் ஆணை" என்ற பெயரில் வெளியிடப்பட்டது. அதில், தோழர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, 'இவர்களது கீழ்க்கண்ட கேடான நடவடிக்கைகள் ஏற்கனவே கண்காணிப்புக்கு வந்தது,

1) 17.3.2000 அன்று விசுவ இந்து பரிசத் மாநாட்டை எதிர்த்து ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது;

2) 26.5.06 அன்று டெல்லியில் வேலை நிறுத்தம் செய்து வரும் உயர்சாதி பார்ப்பன மாணவர்களைக் கண்டித்து ஈரோடு தலைமை தபால் நிலையம் முன்பு இராம. இளங்கோவன் மற்றும் 38 பேர் கோஷம் எழுப்பி போராட்டம் நடத்தியது;

3) 22.11.06 அன்று ஈரோட்டில், ஈரோடு காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட ஈரோடு நகராட்சி அலுவலகம் முன்பு இராம. இளங்கோவன் மற்றும் 32பேர் இடஒதுக்கீடு தொடர்பாக வீரப்ப மொய்லி கொடுத்த அறிக்கையை எரிக்க முயன்றது;

4) பூணூல் அறுத்தது.

கலைஞர் அவர்களே நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். மாவட்ட ஆட்சியர் போட்டால் விட்டு விடலாம். சட்டத் துறைக்கு வருகிறது. சட்ட அமைச்சர் பார்க்கிறார். வி.எச்.பி. மாநாட்டை எதிர்த்தது தேச விரோதம்! இடஒதுக்கீட்டைப் பறிக்கும் பார்ப்பன மாணவர்களைக் கண்டிப்பது தேச விரோதம்! 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ள பிற்பட்ட மக்களுக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை படிப்படியாகத்தான் அமல்படுத்த வேண்டுமென்ற வீரப்பமொய்லியின் அறிக்கையை எரிக்க முயன்றது தேச விரோதம்! - என்று கலைஞர் ஆட்சி ஏற்றுக் கொண்டுவிட்டது என்பது தானே பொருள்?

சட்டத்துறைக்கு வந்து நீங்கள் உறுதிப்படுத்தியதால் தானே இன்னும் எங்களது தோழர்கள் சிறைக்குள் இருக்கிறார்கள்? வழக்கமாக திரைப்படத்தில் தான் 100 நாள் கொண்டாடுவார்கள். இப்போது, சிறையில் இருப்போருக்கு 100 நாள் கொண்டாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஏன் வந்தது.

சட்டத்துறை மாவட்ட ஆட்சியர் சொன்னதை ஏற்றுக் கொண்டது. பின்னர் வழக்கு அறிவுரைக் கழகத்திற்குச் சென்றது. அங்கு மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் வழக்கை உறுதிசெய்தார்கள். அதற்காக நாங்கள் உயர்நீதிமன்றத்தை அணுகிய போது வேண்டுமென்றே ஆறு வாரகால அவகாசம் வேண்டுமென்று ஏன் கேட்கிறீர்கள்?

ஏனென்றால் பெரியார் சிலையை உடைத்த இந்து மக்கள் கட்சியினர் மீது இன்னம் வழக்குப் பதியவில்லை. நீங்கள் சமத்துவப் பெரியார் அல்லவா? அவனுக்கு முன்பு அறிக்கையைக் கொடுத்தால் நாங்கள் உடனே வெளியில் வந்து விடுவோம். அதனால் தள்ளிப் போடுகிறீர்கள். அறிவுரைக் கழகம் பரிசிலித்த செய்தியை நீதிமன்றம் முன்பு எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு ஆறுவாரம் அவகாசம் தேவையா? சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரியை பிணையில் விடுவதற்கு ஞாயிற்றுக்கிழமை கூட நீதிமன்றம் கூடிப் பேசுகிறது. நம் தோழர்களுக்கு மேலும் ஆறு வாரம் தேவைப்படுகிறது என்று சொன்னால் உங்கள் எண்ணத்தை எப்படிப் புரிந்து கொள்வது?

"பிணையில் விடப்பட்டால் அவர்கள் தொடர்ந்து பொது அமைதி மற்றும் தேசப் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயல்படுவார்கள் என்றும், தற்போது நடைமுறையில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள், அவரது சட்டவிரோத செயல்முறைகளை முழுமையாகக் கட்டுப்படுத்தி, பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் செயல்களிலிருந்து அவரை தடை செய்ய முடியாது என நான் கருதுவதால், மேற்படியாரை பொது அமைதி மற்றும் தேசப் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தும் எந்தவித செயல்களிலும் ஈடுபடாமல் இருக்க, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செயவதாக" - கூறுகிறார்

ஈரோட்டுத் தோழர்களாவது நான்கு முறை குற்றம் செய்தவர்களாகக் கூறப்பட்டவர்கள். ஆனால், பெரம்பலூர் தோழர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? தோழர்களால் மிரட்டப்பட்டதாகக் கூறப்பட்டவர் கொடுத்த புகாரில்,

"என்னை இரு நபர்கள் வழி மறித்து கீழே இறங்கச் சொல்லி, நீ என்னடா பெரிய அய்யர்? பார்ப்பான் என்றால் பெரிய உயர்ந்த சாதியா? நீங்கள் என்னடா விவசாய வேலை செய்துதான் சாப்பிடுகிறீர்களா? உங்களை வெட்டிக் காலி செய்தால்தான் எங்கள் தலைவர் பெரியாரின் கொள்கைகள் நாட்டுக்குத் தெரியும் - என்று சொல்லி என் கழுத்தில் இருந்த ருத்ராட்சக் கொட்டை மற்றும் பூணூல் இவற்றை அறுத்துக் கீழே போட்டு காலால் மிதித்தார்கள்" - இதுதான் அவர்கள் கொடுத்த புகார்! அவர்கள் செய்தது இதுதான். இதை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார்.

"இவர்கள் ரமேஷ் 'அய்யரை' ஜாதிப் பெயர் சொல்லித் திட்டினார்கள்" என்கிறார். அவரது பெயரே அய்யர் தான். மேலும் பூணூலை அறுத்தார்களாம்." - இவைகள் எல்லாம் மக்கள் மத்தியில் பாதுகாப்பு இன்மையையும், பயங்கரவாதத்தையும் தோற்றுவித்துவிட்டது(!). அதனால் பெரம்பலூரில் மட்டுமல்ல, புணூல் அறுத்ததால் ஒட்டு மொத்த தமிழ்நாடு முழுவதும் பீதியும், குழப்பமும் உண்டாகிவிட்டது - என்கிறார் மாவட்ட ஆட்சியர் தனது தடுப்புக் காவல் ஆணையில்.

பாதிக்கப்பட்டவர் கொடுத்த புகாரே, சாதி சொல்லித் திட்டி, பூணூலை அறுத்து, ருத்ராட்சக் கொட்டையை காலில் போட்டு



மிதித்தது என்பது தான். இதற்கே தேசியப் பாதுகாப்புச் சட்டம் போடப்படுகிறது என்றால், இதை ஒரு சட்ட அமைச்சகமும், அரசும் ஏற்றுக் கொள்கிறது என்றால், அந்தக் கேடுகெட்ட அரசு குறித்து நாம் என்ன நினைக்க முடியும்?

நீங்கள் யாருக்காக ஆள்கிறீர்கள்? பெரியார் பேரைச் சொல்ல வேண்டும். பெரியார் என்ற முத்திரை வேண்டும். ஆனால், அதற்கான வேலை நடக்கக் கூடாது. அதற்கு, வீரமணி பொருத்தமானவர் என்று உங்களுக்குத் தெரிகிறது, வைத்திருக்கிறீர்கள்! இவனிடம் வைத்துக் கொண்டால் பெரியார் பெயரைச் சொல்வதுடன், அதை நடைமுறைப்படுத்தக் கேட்பான். அவர் சிக்கல் இல்லாதவர். பெரியார் என்ற முத்திரை போதும். பெரியார் கொள்கையை வற்புறுத்தத் தேவையில்லை என்று நினைக்கிறவர்! அதனால் அருகில் அவரை வைத்திருக்கிறீர்கள்.

விடுதலைப் புலிகள் என்று சொன்னாலே 'இந்து' ஏட்டுக்குப் பிடிக்காது. எந்த வெளிநாட்டு சிவில் விருதுகளையும், நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அரசியல் சட்டம் கூறுகிறது. 'இந்து' ராமுக்கு இலங்கை அரசு 'சிறீலங்கா ரத்னா' என்ற நாட்டின் மிக உயர்ந்த விருதைக் கொடுக்கிறது என்றால், என்னென்ன சேவைகளை அந்த நாட்டுக்கு அவர் செய்திருக்க வேண்டும்?

அவன் எழுதுகிறான், அந்த ஏடு எழுதுகிறது என்பதற்காக, சைக்கிள் 'பால்ஸ்' எடுத்துச் சென்றார்கள் என்பதற்கு - 'புலிகள் ஆயுதம் கடத்தியதாக' எழுதுகிறான் என்பதற்காக தேசப் பாதுகாப்புச் சட்டம் போடுகிறீர்கள். எவ்வளவு மோசமாக நமது அரசு தமிழர் குரலுக்கு அக்கரைக் காட்டாமல், பார்ப்பனர் குரலுக்கு செவி சாய்க்கிறது என்கிறபோது நமக்கு வேதனை இன்னும் அதிகமாகிறது. நம் தோழர்கள் உள்ளே இருப்பதற்காக மட்டும் இதைச் சொல்லவில்லை. வீரப்பனைப் பார்த்தேயிராத ஒருவருக்கு உயர்நிதிமன்றம் தூக்குத் தண்டனை அளித்த சம்பவங்கள் எல்லாம் இங்கு நடைபெற்றிருக்கின்றன.

*1991*-ல் என்னை இதே தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்து உள்ளே வைத்திருந்தார்கள். அப்போது விடுதலைப் புலிகளுக்கு வண்டி ஏற்பாடு செய்து, பணம் மூன்று லட்சம் கொடுத்து, அவர்களை காரில் ஏற்றி சென்னைக்கு மருத்துவத்திற்கு அனுப்பியதாக குற்றச்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# குரலிசைக் கலைஞர் து. முருகையன் மரணம்

விடுதலைக் குரல் கலைக்குழுவின் குரலிசைக் கலைஞர் தோழர் து. முருகையன் 10.4.2007 விடியற்காலை 3.50 மணியளவில் கடலூர் அரசுப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 4.15 மணியளவில் மரணமடைந்தார் என்ற துயரமான செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். புதுவையில் பிறந்த - உயர் பட்டப் படிப்பை கடும் எதிர் நீச்சலில் படித்து முடித்த முருகையன், தான் மரணம் அடையும் சில மணி நேரங்களுக்கு முன்னர் வரை தலித் மக்களின் விடுதலைப் பாடல்களைப் பாடி வந்தார்.

முருகையன் பாடிய பாமர மக்களின் பாட்டு காற்றில் அலையலையாய் மிதந்து கொண்டிருக்கிறது.

34 ஆம் வயதிலேயே முடிவெய்திய குரலிசைக் கலைஞருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

## நன்னன் அண்ணல் நினைவுப் பரிசுப் போட்டி

தி.பி. 2039 ஆம் ஆண்டுக்குரிய சிறுகதைப் போட்டிக்கு வழக்கப்படி உருவாக்கள் பத்தாயிரம், ஆறாயிரம், நாலாயிரம் என மூன்று பரிசுகள் வழங்கப் படும் என்பதை உவப்புடன் தெரிவிக் கிறோம். போட்டியிற் கலந்து கொள்ள விரும்புவோர் கி.பி.10.7.2007-க்குள் பதிவு செய்து கொள்க. அதற்கு, அவர்கள் தம் விருப்பத்தைத் தெரிவிக்கும்போது அதனுடன் தமது முகவரி எழுதிய அஞ்சல் உறையையும் இணைத்து அனுப்பினால் போட்டி பற்றிய விதிமுறைகள் அவர்களுக்கு அனுப்பப்படும்.

**"நன்னன் குடி"**
**22அ, முதல் தெரு,**
**அரங்கராசபுரம், சைதாப்பேட்டை, சென்னை-600 015.**

**மா. நன்னன்**
(நன்னன் குடி சார்பாக)

## கோபி – ல. கள்ளிப்பட்டியில் பெரியார் படிப்பகம் திறப்பு

ஈரோடு மாவட்டம் கோபி நகரை அடுத்த ல.கள்ளிப்பட்டியில், கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட பெரியார் படிப்பகத்தை 11.2.2007 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி தலைமை வகித்தார். கோபி நகரத் தலைவர் நாகப்பன், மாவட்டத் துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடத்துனர் நாகப்பன் கடும் முயற்சியினால் உருவாக்கப்பட்ட இந்தப் படிப்பகத்தில் பெரியார், அண்ணா, காமராசர் உள்ளிட்ட தமிழகத் தலைவர்களைப் பற்றிய நூல்கள், இயக்க வெளியீடுகள், அறிவியல் நூல்கள், தினசரி செய்தித் தாள்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியிலுள்ள மாணவர்களும், பொது மக்களும் பெரிதும் பயன்பெறும் வகையில் முதன்மைச்சாலையில் இப் படிப்பகம் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

ஈரோடு மாவட்ட ப.க. தலைவர் ஆசிரியர் காளியண்ணன், ப.க. செயலர் நேதா ஆசைத்தம்பி, மாவட்ட அமைப் பாளர்கள் துரை. சண்முகம், புதுரோடு சிதம்பரம் மாணவரணி அமைப்பாளர் முகிலன், மகளிரணியைச் சேர்ந்த கண்ணகி, கமலம், பெரியார் தொழிற்சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் திரளாக விழாவில் கலந்து கொண்டனர்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

சாட்டு. புலிகளே ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகக் கூறினார்கள். அதற்காக தேசியப் பாதுகாப்புச் சட்டம்! ஆனால் வேடிக்கை என்னவென்றால், அந்த வண்டியை காவல் துறை பிடித்த நாளில் நான் சேலம் மத்திய சிறையில் இருக் கிறேன். தி.மு.க. ஆட்சியைக் கலைத்த போது என்னை முன்னெச்சரிக்கையாகக் கைது செய்து அடைத்து விட்டார்கள். ஆனால், சிறையில் இருந்த நான், உதவிய தாக வழக்கு போடப்பட்டு மூன்றரை மாதங்கள் சிறையில் இருந்தேன்.

இதுபோல பொய் வழக்கு என்பது காவல்துறை சாதாரணமாகப் போடும். ஆனால், அப்போது அறிவுரைக் கழகத் தின் நீதிபதியாக இருந்தவர் உண்மை யிலேயே நீதிமானாக இருந்ததால், போட்ட வழக்கு தவறு என்று நீக்கி விட்டார்கள். வெளியில் வந்தோம். இல்லை யென்றால், உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுத்தான் வெளியில் வந்திருக்க வேண்டும்.

இப்படி காவல்துறை வழக்குப் போடு வதும், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதும், அதை அவர்கள் எப்படி வாங்குகிறார்கள் என்பதும் யாருக்கும் தெரியாதது அல்ல! அதை வைத்துக் கொண்டு பொய் வழக்குப் போடுவதும், அதை ஏற்றுக் கொண்டு அரசு நடவடிக்கைகள் எடுப்பதும் என்ன நியாயம்?

சட்டத் துறைக்குப் போன பின்பு, அறிவுரைக் கழகத்திற்குச் சென்ற பின்புகூட அரசுக்குத் தெரிந்திருக்காதா? என்ற ஆதங்கம் தான் எங்களைச் சொல்ல வைக்கிறது. அதனால் இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கூறுவது என்னவென்றால்...

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை நமக்குப் போட்டது மட்டுமல்ல, இந்து மக்கள் கட்சி, புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுபவர்கள் - ஆகியோர் மீதும் போட்டதையும் கண்டிக்கிறோம்.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஒரு ஜனநாயக நாட்டில், ஜனநாயக சிந்தனை உள்ள யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத சட்டம். அதை தேவையற்றுப் பல்வேறு வகைகளில் பயன்படுத்து வதையும் கண்டிக்கிறோம்.

அதிலும், குறிப்பாக பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை சிறைப் படுத்தியுள்ளதையும் இதன் காரண மாகவே எதிர்க்கிறோம்.

மனித உரிமையை ஏற்றுக் கொண்ட வர்கள், மனிதாபிமானத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் - தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்னும் ஆள் தூக்கிச் சட்டம், நமது நாட்டில் இருக்கக் கூடாது என்ற எதிர்ப்புக் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டும் - இவ்வாறு கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை நிகழ்த்தினார்.

**தொகுப்பு – 'கதிர்'**

# சிந்திக்காமல் எடுத்த முடிவு: உயர்நீதிமன்றம்

- தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்த 7 பேரின் வழக்குகளையும் ஒரே சமயத்தில் விசாரித்து விடுதலை செய்தது. சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றிலேயே இதுவே முதன் முறையாகும்.
- வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான பி.கே.மிஸ்ரா ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்தவராவர். இது போன்று நிறைய வழக்குகளில் அவர் அரசுக்கு எதிராக தீர்ப்பளித் துள்ளார். வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பான "நுழைவு தேர்வு இரத்து செய்து தமிழக அரசு சட்டமியற்றியது செல்லும்" என்று தீர்ப்பளித்தவரும் இவரே. 2006 இல் நடைபெற்ற சென்னை மாநகராட்சி தேர்தலில் 99 வார்டுகளில் முறைகேடு நடந்துள்ளது என்று தீர்ப்பளித்த நீதிபதிகளில் இவரும் ஒருவர்.
- லெட்சுமணன், தாமோதரன் மற்றும் குமரனுக்கு எதிராக போட்ட தேசிய பாதுகாப்பு சட்டம் செல்லாது என நீதிபதி பி.கே. மிஸ்ராவுடன் இணைந்து தீர்ப்பளித்த நீதிபதி ஜே.எ.கே.சம்பத் குமார் தேசிய பாதுகாப்பு சட்ட வழக்கில் கொடுத்த கடைசி தீர்ப்பு இதுதான். ஏனென்றால் அடுத்த நாள் அவர் ஓய்வு பெற்றார்.
- ஈரோடு மாவட்ட கழகத் தோழர்கள் இராம. இளங்கோவன் உள்ளிட்ட நால்வரின் வழக்கு 27.4.07 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது. அன்றுதான் அந்த ஆண்டின் கடைசி வேலை நாளாகும். அடுத்த நாள் உயர்நீதி மன்றத்திற்கு கோடை விடுமுறை ஆரம்பம்.
- கைது செய்யப்பட்ட 7 பேர்களின் ஹேப்பியஸ் கார்பஸ் மனுவிற்கு மத்திய அரசினாலோ, மாநில அரசினாலோ பதில் மனு ஏதும் தடுப்புக்காவல் கைதிகளுக்கு வழக்கு முடியும் வரை வழங்கப்படவில்லை.
- மாநில அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் பிறப்பித்த உத்திரவினை உறுதி செய்வதற்கு முன் கைதிகள் அனைவரும் அறிவுரைக் குழுமம் முன் நிறுத்தப்படுவர். அறிவுரைக் குழுமத் தில் 3 ஓய்வுப் பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். கழகத்தின் சார்பாக துணைத் தலைவர் ஆனூர் செகதீச னும், சென்னை மாவட்ட பொறுப் பாளர் கேசவனும் அறிவுரைக் குழுமத் தில் கழகத்திற்கு ஆதரவாக வாதிட்ட னர்.
- ஆனூர் செகதீசன் அறிவுரைக் குழு மத்திடம் பூணூல் தான் தேசத்தை பாது காக்கிறதா? பூணூலை அறுத்தால் தேசவிரோதம் ஆகிவிடுமா? என்று வாதிட்டது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளிவந்த பெரியார் எழுதிய கட்டுரையை அறிவுரைக் குழுமத்தின் பார்வைக்கு ஆனூரார் கொண்டு வந்தார்.
- சென்னை மாநகர ஆணையர் தவறான சட்டப் பிரிவில் குமரனை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அடைத்தது, 'சரியா சிந்திக்காமல் எடுத்த முடிவு' என்று கூறி தீர்ப்பளித்து நீதிமன்றம் குமரனை விடுவித்துள்ளது.
- ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு விழிப் புணர்வு இல்லை என்று கூறி இராம. இளங்கோவன் உள்ளிட்ட நால்வரை யும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் அடைத்தது செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் விடுவித்துள்ளது.
- லெட்சுமணன், தாமோதரன் ஆகியோரை பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அடைத்தது ஏற்கனவே திட்டமிட்ட ஒன்று என்று கூறி இருவரையும் உயர்நீதிமன்றம் விடுவித்துள்ளது.
- 7 வழக்குகளுக்கும் ஒரே நீதிபதியே. அதாவது நீதிபதி பி.கே. மிஸ்ராவே தீர்ப்பளித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.
- தேசிய பாதுகாப்பு சட்டத்தில் 7 பேரும் விடுதலை அடைந்தாலும் சென்னை மாவட்ட கழகத் தோழர் குமரன் தவிர மற்ற 6 பேரும் ஜாமீன் மனு அந்தந்த மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து ஜாமீனில் வெளிவர உத்திரவு பெற்றால் மட்டுமே சிறையி லிருந்து வெளிவர முடியும். குமரனுக்கு ஏற்கெனவே சென்னை உயர்நீதி மன்றம் ஜாமீன் வழங்கியுள்ளதால் அவர் 28.4.2007 மாலை சென்னை மத்திய சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டார்.
- உயர்நீதிமன்ற தீர்ப்பு கலைஞர் அரசின் முகத்தில் கரிப்பூச்சாகும். பார்ப்பனரை மகிழ்விக்க கலைஞர் எடுத்த நடவடிக்கைக்கு பதிலடியாகவே இத் தீர்ப்பு வந்துள்ளது. ●


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
போன்: 2451 2857, 2461 6233
periyarmulakkam@yahoo.com

**சந்தா அனுப்பும் தோழர்களுக்கு**
பணவிடை மூலம் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு, சந்தா அனுப்பும் தோழர்கள் - பண விடையின் அடிப்பகுதியில் தவறாமல் முகவரியை எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்!
**- நிர்வாகி**
'புரட்சிப் பெரியார் முழக்கம்'

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 5th May 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 மே 10, 2007 புரட்சி 4 முழக்கம் 74 விலை : ரூ.2.50


## சிறைக்குள்ளே 18 போராளிகள் உயிர்ப்பலியான வீரவரலாற்றை நினைவு கூர....

# தஞ்சை மாநாட்டுக்கு திரளுவீர்!

*1957 – நவம். 27! சாதி ஒழிப்பு வரலாற்றில் புதிய அத்தியாயத்தைப் பதிவு செய்த நாள். பெரியார் ஆணையை ஏற்று - 10,000 கருஞ்சட்டைத் தோழர்கள், சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவை தீயிட்டுக் கொளுத்தினர்; 300 பேர் கைது செய்யப்பட்டு சிறையேகினர். பிணையில் வெளிவரவில்லை. 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை ஏற்றனர். சிறையில் கிரிமினல் கைதிகளாகவே நடத்தப்பட்டு, சொல்ல முடியாத துயரங்களை சந்தித்தனர். பெரியார் இயக்கம் நடத்திய அந்த போராட்டத்தின் 50 ஆம் ஆண்டு இது. மூத்த தலைமுறையினரின் தியாகங்களை நினைவு கூர்ந்து, பெரியார் திராவிடர் கழகம் மே 19–ல் தஞ்சையில் சாதி ஒழிப்பு மாநாடு நடத்துகிறது. தமிழகம் முழுதும் தோழர்கள் மாநாட்டுக்கு தயாராகி வருகிறார்கள். அந்த போராட்ட வரலாற்றில் தியாக தீபங்களாகிப் போன கருப்பு மெழுகுவர்த்திகளின் லட்சிய உறுதியை வரலாற்றிலிருந்து பதிவு செய்கிறார், நம் பெரியார் குடும்பத்தின் மூத்த சகோதரர் திருச்சி செல்வேந்திரன். தோழர் இளவேனில் நடத்திய 'குடியரசு' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையை பொள்ளாச்சி பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் சிறு நூலாக வெளியிட்டுள்ளனர். அதிலிருந்து ஒரு பகுதி:*

போராட்ட நாளில் குறித்தபடியே போராட்டம் சென்னை தொடங்கி, கன்னியாகுமரி வரையில் நடை பெற்றது. குறிக்கப்பட்ட 26.11.1957 இல் பத்தாயிரம் கருஞ்சட்டைத் தொண்டர் கள் சட்டப் பிரிவுகள் அச்சடிக்கப்பட்ட தாளைக் கொளுத்தினார்கள். அவர்களில் 2884 பேர்கள் கைது செய்யப்பட்டதாய் டெல்லி பாராளு மன்றத்தில் 4.12.1957 இல் அறிவிக்கப் பட்டது. ஆனால், சிறை ஆவணங் களின்படி 3000 பேர் கைதாகிச் சிறையில் இருந்தனர்.

இந்தக் கட்டுரைக்கான சில குறிப்புகளைக் கொடுத்த - இப்போது எழுபத்தைந்து வயதாகும் திரு.து.மா. பெரியசாமி போன்றவர்கள் மூன்று மாதம் தொடங்கி பல ஆயிரக் கணக்கான தொண்டர்களுக்கு மூன் றாண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டது. நீதிமன்றத் தில் யாரும் எதிர் வழக்காடவில்லை! 'கொளுத்தப்பட்டது அரசியல் சட்ட நூலல்ல. அதன் பிரிவுகள் சில எழுதப்பட்ட ஒரு தாள் தான். இது தேசிய அவமதிப் பாகாது' என்று வாதாடி இருந்தால் அனைவருமே தண்டனையின்றித் தப்பி இருப்பார்கள்.

இந்த மூன்று மாதம் தொடங்கி மூன்றாண்டுகள் வரை இருந்த தண்டணைக் காலத்தில் திராவிடர் கழகத் தோழர்களில் பலர் காட்டிய மன உறுதியும் - அஞ்சாமையும் - தியாகமும் - மகத்தானது. மறக்க முடியாதது. ஆனால், மறைக்கப்பட்டது. தோழர் இளவேனிலின் 'குடியரசு' இதழ் இவைகளை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிக் கொணர வாய்ப்பளித்தது சரித்திரத்தின் நன்றிக் குரியது.

**சிறைக் கொடுமை!**

இந்தப் போராட்டத்தில் கலந்து சிறைப்பட்ட ஒருவர்கூட அரசியல் கைதியைப் போல் நடத்தப்படவில்லை. கீழான சமூகக் குற்றங்களைச் செய்த கைதிகளைப் போலவே அரைக்கால் சட்டை, அரைக்கைச் சட்டை, சட்டையில் வில்லை என்ற முறையில் அவமானப்படுத்தப்பட்டனர். மற்ற கிரிமினல் கைதிகளைப் போலவே தோட்ட வேலை, சமையற்கட்டு சாமான் கழுவுதல் போன்ற பணிகளில் அமர்த்தப்பட்டனர். சிறையின் உணவும், சீதோஷ்ணமும், போதிய தண்ணீர் வசதி இல்லாமையினாலும், அலட்சியமான மருத்துவ கவனிப்பினாலும் பலர் நோய்வாய்ப்பட்டனர். ஐந்து பேர் சிறையிலேயே இறந்தனர்.

சிறையிலேயே கடுமையாய் நோய்வாய்ப்பட்டு, இனிப் பிழைக்க வாய்ப்பில்லை என்று தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே பழியிலிருந்து தப்பிக்கத் தமிழக அரசால் விடுதலை செய்யப்பட்டவர்கள் பதிமூன்று பேர் விடுதலையான ஒரே வாரத்திற்குள் இறந்தனர். அவர்களும் கொல்லப்பட்டவர்கள் பட்டியலில்தான் வருவார்கள். சாதி ஒழிப்புப் போருக்குத் திராவிடர் கழகம் கொடுத்த களப்பலி மொத்தம் பதினெட்டு பேர். இந்தச் சட்டம், மன்றத்தில் வந்த போதும் சரி - மூன்றாண்டு தண்டனை விதிக்கப்பட்ட போதும் சரி - ஒருவர் பின் ஒருவராய் பதினெட்டு பேர் செத்த போதும் சரி - பச்சைத் தமிழர் காமராசர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. 'அமைதியாய் இருந்து டெல்லிக்கு நல்ல பிள்ளையாகிவிட்டார் நம்மை பலி கொடுத்து' எனத் திராவிடர் கழகத்திலிருந்த தீவிர காமராஜ் பற்றாளர்கள் பலர் முனகினார்கள்.

வெளியில் இருக்கும்போது சரிகை வேட்டி - பட்டுச் சட்டை, விலை உயர்ந்த பூட்சுகள் என்ற தோரணையில் உடையணியும் திராவிடர் கழகத்தின் மூத்த பெரும் தலைவர்களில் ஒருவரும், பெரியாரின் பேரன்பிற்குப் பாத்திரமானவரும், பல நூறு ஏக்கர் நிலங்களுக்கு உரிமையுடைய பெரு நில உடைமையாளர்களான நீடாமங்கலம் ஆறுமுகம், சிதம்பரம் கிருஷ்ணசாமி, ஆனைமலை நரசிம்மன் (பெரியாரின் சம்பந்தி) போன்றவர்கள் அரைக்கால் சட்டையுடன் இருந்தது மட்டுமல்ல - சிறையில் கூட்டுதல், புல் பிடுங்குதல், பாத்திரம் கழுவுதல் போன்ற வேலைகள் செய்யும்படி கொடுமைப்படுத்தப்பட்டனர்.

வேலூர் திருநாவுக்கரசு, திருச்சி வீரப்பா போன்றவர்கள் வருமானவரி செலுத்துமளவு வசதி மிக்க வியாபாரிகள். அவர்கள் வயதைக் கூட கருத்தில் கொள்ளாமல் சிறை அதிகாரிகளுக்கு எடுபிடி வேலை செய்யும் ஏவலர்களாய் (ஆர்டர்லி) அமர்த்தி வேலை வாங்கப்பட்டனர்.

இந்த இரண்டு பேருடைய ஒரு நாளைய வியாபார வருமானம் தான் அந்தச் சிறை அதிகாரிகளின் ஒரு மாதச் சம்பளம் என்பது ஒரு வேடிக்கைச் செய்தி!

'தந்தை பெரியார் சிந்தனைகள்' என்ற வரலாற்றுப் பெருமை மிக்க நூலொன்றைத் தொகுத்தளித்த நல்ல படிப்பாளியும், சிந்தனையாளருமான வே.ஆனைமுத்து சிறை நூலகரின் பணியாளராக (ஆர்டர்லி) வேலை வாங்கப்பட்டார்.

**மண்மேடான மண வாழ்க்கை**

திருச்சியைச் சேர்ந்த இன்னொரு தீவிரத் தொண்டன் ஓராண்டுத் தண்டனை பெற்ற மாணிக்கம்! திருமணமான ஒரே வாரத்தில் போராட்டத்தில் கலந்து கொண்டு தண்டனை அடைந்தார். அடுத்தடுத்த நேர் காணல்கள் - இளம் மனைவியின் கண்ணீர். திருமணமாகி ஒரே வாரம்! மாணிக்கத்தின் மனதில் சலனம்!

ஆனாலும், தன்னை திடப்படுத்திக் கொண்ட மாணிக்கம் - கோழையாய் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மனைவியுடன் மண வாழ்க்கை வாழ்வதைவிட வீரனாகச் செத்துப் போவதே மேல் என்ற தன் முடிவை மனைவியிடம் - 'நான் விடுதலையாகி வரும் வரையில் என்னைப் பார்க்க வராதே. என் மனம் சலனப்பட்டு நான் வெளியே வரக் கூடாது. மனதைக் கல்லாக்கிக் கொள். போய் வா' என்றார்.

மாணிக்கம் சொன்னபடியே அவருடைய மனம் கல்லாகத்தான் ஆகிவிட்டது. கணவன் லட்சிய வெறியோடு

2 ஆம் பக்கம்

## மீண்டும் கொளுத்துவேன்!

*திருச்சி வாளாடியைச் சேர்ந்தவன் சிறுவன் பெரியசாமி. அவனுடைய தாய்க்கு ஒரே மகன். பதினெட்டு வயதுகூட நிறையாத (16 வயது) பெரியசாமி தீவிரமான கருஞ்சட்டைத் தொண்டன். பெரியாரின் கூட்டங்கள் எங்கு நடந்தாலும், தவறாமல் கலந்து கொள்ளும் போர் வீரன். பெரியாரின் ஆணையை ஏற்று அவனும் சட்ட நகலை எரித்தான். இரண்டாண்டகள் கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்ட அவன் பதினெட்டு வயதிற்கு உட்பட்டவன் ஆனதால் தூத்துக்குடி தட்டப்பாறை சிறுவர் சிறையில் அடைக்கப்பட்டான். ஏழ்மையின் காரணமாய் நெடுந்தொலைவு பயணம்செய்ய வசதியில்லாத அவனுடைய தாய், அவனைக் கடைசி வரையில் உயிரோடு பார்க்கவே இல்லை.*

*ஒருநாள் தட்டப்பாறை சிறையில் பார்வையிட வந்தார் தமிழக கவர்னர் விஷ்ணுராம் மேதி. எல்லோரையும் கேட்டதைப் போலவே பெரியசாமியையும் கவர்னர் விசாரித்தார். பெரியாரின் தொண்டன், அவர் ஆணை கேட்டுப் போராடிச் சிறுவர் சிறைக்கு வந்த ஒரே அரசியல் கைதி என்ற முறையில் அவனிடம் பெருமதிப்புக் காட்டிய கவர்னர் மேதி, 'உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன். இனிமேல் இது போன்ற காரியம் செய்ய மாட்டாயல்லவா' என்றார்.*

*மொழி பெயர்ப்பாளர் மூலம் உரையாடல் நடைபெற்றது. சட்ட எரிப்பிற்கான காரணத்தைக் கவர்னரிடம் தெளிவாய் விளக்கிய பெரியசாமி, 'வெளியே அனுப்பினால் மீண்டும் கொளுத்துவேன்' என்றான்.*

*கவர்னர் மேதி அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார். பெரியசாமியைத் தட்டிக் கொடுத்த கவர்னர் 'கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக' என அவருடைய நம்பிக்கைப்படிக் கூறிச் சென்றார்.*

*கவர்னர் சொன்னபடியே கடவுளின் ஆசீர்வாதம் வெகு விரைவிலேயே பெரியசாமிக்குக் கிடைத்தது. கடுமையான கோடைக்காலம் – பழக்கமில்லாத புழு புழுத்த சோளக்கஞ்சி – இரண்டும் ஒப்புக் கொள்ளாமல் பெரியசாமிக்கு வயிற்றுக் கடுப்பில் தொடங்கி – சரியான மருத்துவ வசதி இல்லாமல் ரத்தம் ரத்தமாய் பேதியாகிப் பெரியசாமி நினைவு தடுமாறலானான். சிறை அதிகாரிகள், 'விடுதலை செய்கிறோம். வெளியே போகிறாயா?' என்று கேட்க, மௌனமாய்க் கையை அசைத்து மறுத்து விட்டான். சில மணி நேரம் தான்; இறந்து போனான். அந்த இளம் போராளிக்கு திருச்சி – லால்குடி சாலையில் இன்றும் ஒரு நினைவுச் சின்னம் இருக்கிறது.*

## தலித் மாணவர்கள் மீது வெறுப்பைக் கக்கும் பார்ப்பன இயக்குனர் வேணுகோபால்

இடஒதுக்கீட்டுக்கு எதிராக செயல்பட்டு வந்த புதுடில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்தின் இயக்குனரான பார்ப்பனர் வேணு கோபாலின் சாதிவெறி அம்பலமாகியுள்ளது. மத்திய மருத்துவத்துறை அமைச்சர் டாக்டர் அன்பு மணி, வேணுகோபால் மிரட்டலுக்கு அஞ்சாது உறுதியுடன் சமூகநீதிக்காகப் போராடி வருகிறார். டாக்டர் வேணுகோபாலின் முறைகேடுகளுக்காக பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், உச்சநீதிமன்றத்தின் மூலம், தடையை தற்காலிகமாக நீக்கிக் கொண்டு, பணியில் தொடர்ந்து வருகிறார் வேணுகோபால். இவரது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 'ஏ.அய்.அய்.எம்.எஸ்.' மருத்துவக் கழகத்தில் தான் 27 சதவித இட ஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டம், தீவிரமாக நடந்தது. இந்த நிறுவனத்தில் பயிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் திட்டமிட்டு, அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாக்கப்படுவது, இப்போது அம்பலமாகி வருகிறது. இந்த நிறுவனத்திலிருந்து வந்த புகார்களை விசாரிக்க, மத்திய அமைச்சர் அன்புமணி, மத்திய பல்கலை நிதி உதவிக் குழுவின் தலைவர் பேராசிரியர் எஸ்.கே. தோரட் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார். மாணவர்களிடம் நேரடி விசாரணை நடத்திய குழு தனது விசாரணை அறிக்கையை மத்திய அமைச்சர் அன்புமணியிடம் கடந்த சனிக்கிழமை (மே 5, 2007) வழங்கியது. அதில், "இடஒதுக்கீட்டுக்கு எதிரான போராட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியதில் இயக்குனர் வேணுகோபாலுக்கு பெரும் பங்கு உண்டு" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவமதிப்புக்கும், அலைகழிப்புக்கும் உள்ளாக்கப் பட்டதாக, தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்கள் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

பாடம் நடத்தும் ஆசிரியர்கள், தங்களை வேற்றுமைப்படுத்தியதாக - 72 சதவீத மாணவர்கள், சாட்சியமளித்துள்ளனர். "ஏனைய மாணவர்களிடம் காட்டிய அக்கறையையோ, ஆதரவையோ எங்களிடம் காட்டவில்லை. இதனால் நாங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளானோம். இதனால் எங்களுடைய படிப்பும் பாதிப்புக்குள்ளானது" என்று தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கூறினர். நாங்கள் நன்றாக தேர்வு எழுதியிருந்தும், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கவில்லை" என்று 88 சதவீத மாணவர்களும் எங்களின் சாதியைப் பார்த்து, திட்டமிட்டே மதிப்பெண்களைக் குறைத்தார்கள் என்று 84 சதவீத மாணவர்களும், குழுவிடம் தெரிவித்துள்ளனர். பார்ப்பன ஆதிக்கக் கோட்டையாக செயல்பட்டு வரும் ஏ.அய்.அய்.எம்.எஸ். இப்போது மக்கள் மன்றத்தில் அம்பலமாகத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. மருத்துவர் அன்புமணியின் உறுதியான நடவடிக்கையைப் பாராட்ட வேண்டும்.

## மாநாட்டில் பெரியார் நூல்கள் விற்பனைக்கு வருகின்றன

1. திராவிட ஆரியர்
2. கிராமங்கள் ஒழிய வேண்டும்.
3. தமிழர்கள் இந்துக்களா ?
4. மதம் மாறினால் குற்றமா ?
5. அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் - ஏன் ?
6. சித்திரபுத்திரன் விவாதங்கள்
7. பெரியாரின் சுயசரிதை
8. பெரியாரில் பெரியார் - பட்டுக்கோட்டை அழகிரி
9. இராமாயணக் குறிப்புகள்
10. உயர் எண்ணங்கள்

உட்பட 20 சிறு வெளியீடுகள் கழக சார்பில் விற்பனைக்கு வருகின்றன. ஒரு சில நூல்கள் விலை மட்டும் ரூ.10/- ஏனைய நூல்கள் ஒவ்வொன்றின் விலையும் ரூ.5/- மட்டுமே! வாங்கிடுவீர்! பரப்பிடுவீர்!

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

மாநாட்டு நன்கொடை - வழக்கு நிதி வசூல் - கணக்குகளை மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர் தோழர் இராவணனிடம், மாநாட்டு நாள் அன்றே ஒப்படைத்து - கணக்குகளை முடிக்குமாறு தோழர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**– தலைமைக் கழகம்**

# கல்லறைகள் அல்ல; காலத்தின் கட்டளை

முதல் பக்கத் தொடர்ச்சி

உறுதியாய் இருக்கிறான் என்று அந்தப் பேதைப் பெண்ணால் உணர முடியவில்லை. தன்னை உதறிவிட்டான் என்று எண்ணி சித்த பிரமை பிடித்தவர் போல் சில நாள் இருந்து பின்னர் முழுப் பைத்தியமாகவே ஆகிவிட்டாள். ஓராண்டுக்குப் பின்னர் விடுதலையான மாணிக்கம் - மன நோயாளியான மனைவியுடன் வாழ்ந்த - அந்த ஒரே வாரக் கால இனிய நினைவுகளுடனேயே வாழ்ந்து முடிந்து போனார்.

சிறைக்குச் சென்ற பெரியார் தொண்டர்களின் ஒரு சாரார் மட்டுமே வசதியான நில உடைமையாளர்கள். வியாபாரிகள், பலர் நடுத்தர வர்க்கத்தினர். பலர் ஏழை விவசாயிகள். விவசாயக் கூலிகள். ஆண்டுக்கணக்கான சிறைவாசத்தால் அனைத்துத் தரப்பினருமே பாதிக்கப் பட்டார்கள். பலருடைய தொழில்கள் சீர் கெட்டன. குடும்பம் பிழைப்புத் தேடி, பலர் குடி பெயரும் நிலை ஏற்பட்டது. பல குடும்பங்களில் எதிர்பாராது ஏற்பட்ட குடும்பத் தலைவிகளின் சாவால் பல குடும்பங்களின் நிலை நிர்க்கதியானது.

சிறையிலிருந்து 'பரோ'லில் (விடுப்பில்) வருவதைக் கூடக் கோழைத்தனம் என்று பிடிவாதமாய்ச் சிறையிலிருந்த கருஞ்சட்டைத் தொண்டர்கள், குடும்பத்தில் முக்கியானவர்கள் நோய்வாய்ப்பட்ட போதுகூட விடுப்பில் வெளிவர மறுத்தார்கள். திருவாரூரைச் சேர்ந் சிவ சங்கர னும், முத்துக்கிருஷ்ணனும் பழம்பெரும் தொண்டர்கள். தலைவர் கலைஞரின் தோழர்கள். கலைஞரின் வாழ்க்கை வரலாற்று நூலான 'நெஞ்சுக்கு நீதி'யில் இவர்களைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

வேறு வேறு சந்தர்ப்பங்களில் மேலே சொன்ன இருவருடைய மனைவியரும் கடும் நோய்வாய்ப்பட்டார்கள். அவர்களுடைய உறவினர்கள் அவர்களிருவரையும் பரோலில் அழைத்துச் செல்ல விரும்பினார்கள்.

ஆனாலும், இருவருமே 'வெளியே வருவதென்பது விடுதலையானால்தான்' என்று உறுதியோடு கூறி விட்டார்கள். காலம் தான் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே! நோய்வாய்ப்பட்ட அவர்களுடைய மனைவியர்கள் (வேறு வேறு சமயங்களில்) இறந்தே போனார்கள். மொத்த சிறைச்சாலையும் உறைந்தே போய்விட்டது. 'உயிரோடு இருக்கும் போதே பார்க்கவில்லை, பிணத்தைப் போய்ப் பார்த்து என்ன ஆகப் போகிறது' என்று அழுதபடி சொல்லிக் கொண்டு அன்றைய சிறை வேலைக்குப் போய் விட்டார்களாம் இருவரும் இந்தச் சிவசங்கரன் 1976 இல் என்னோடு (செல்வேந்திரன்) மீண்டும் ஓராண்டு 'மிசா' சிறையில் இருந்தார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 'எங்களை விடுதலை செய்ய வேண்டும். நாங்கள் எந்தக் குற்றமும் செய்யாத அமைதி விரும்பும் குடிமக்கள்' என்று அனைத்து 'மிசா' தண்டனை பெற்றவர்களும் ஆய்வு மனு (ரெவ்யூ பெட்டிசன்) எழுதுவார்கள்.

"அவனாகப் பிடித்தான். விடுகிறபோது விடட்டும். நான் யாருக்கும் மனுப் போட மாட்டேன்' என்று கடைசி வரை சிவசங்கரன் மனுப் போடவேயில்லை.

இதே சிறையில் ஒரு இளைஞர் மிசாவில் இருந்தார். அவர் மூன்று மாதத்திற்கு ஒரு முறையல்ல. சிறையைப் பார்வையிட வரும் அதிகாரியிலிருந்து பிரதமர் வரை அனைவருக்கும் 'நான் எந்தக் கட்சியும் சாராதவன். எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. என்னை விடுவிக்க வேண்டும்' என்று மனுப் போட்ட வண்ணம் இருந்தார். பின்னர் அவரே சில மாதங்களில் ஒரு கட்சியில் உறுப்பினராகிப் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் அனுபவித்து ஓய்ந்து விட்டார்.

அமுதமும் நஞ்சும் ஒரே இடத்திலாம்! இதுவும் ஒரேசிறையில் தான். 'இரும்பு மனம் கொண்டவர்களின் கனவுக்குப் பெயர்தான் லட்சியம்' என்றொருவன் சொன்னான். சிவசங்கரன்களுக்கு இரும்பு மனம் இருந்தது. கனவுகள் இல்லவே இல்லை!

### களப்பலி மொத்தம் பதினெட்டு

சிறைக்குள்ளேயே நோய்வாய்ப்பட்டு மாண்ட ஐவரில் இரண்டு பேர் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள். மூவர் நாம் முன்னர் சொன்ன வாளாடி பெரியசாமி (22.12.1958)லும், லால்குடி நன்னிமங்கலம் கணேசன் (30.7.1958)லும், திருச்சி சின்னசாமி (7.9.1958)லும், மணல்மேடு வெள்ளைச்சாமி (9.3.1958)லும், ஓய்வு பெற்ற ஆசிரியரான பட்டுக்கோட்டை ராமசாமி (8.3.1958)லும் அடுத்தடுத்த நாட்களிலும் இறந்து போனார்கள்.

இறந்த அனைவரும் சிறைப்பட்ட ஒரே ஆண்டுக்குள் மறைந்து போனதும் - உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த நிலையில் 1. இடையாற்று மங்கலம் நாகமுத்து, 2. இடையாற்று மங்கலம் தெய்வானை அம்மாள் 3. மாதிரிமங்கலம் ரெத்தினம் 4. கோவில் தேவராயன்பேட்டை நடேசன் 5. திருவையாறு மஜித் 6. காரக்கோட்டை ராமய்யன் 7. புது மணக்குப்பம் கந்தசாமி 8. பொறையாறு தங்கவேலு 9. மணல் மேடு அப்பாதுரை 10. கண்டராதித்தம் சிங்கார வேலு 11. திருச்சி டி.ஆர்.எஸ். வாசன் 12. தாராநல்லூர் மஜீத் 13. கீழவாளாடி பிச்சை ஆகியோர் விடுதலை செய்யப்பட்ட சில நாட்களில் இறந்து போனது கவனிக்கத் தக்கது. அதுவும், அனைவருமே சிறை உணவு, சீதோஷ்ணம் காரணமான வயிறு சம்பந்தப்பட்ட நோய்களாலேயே மாண்டனர் என்பதும் நினைவில் கொள்ள வேண்டியது.

### உயிரோடு அனுப்பினோம்! பிணத்தையாவது கொடுங்கள்!!

பட்டுக்கோட்டை ராமசாமியும், மணல்மேடு வெள்ளைச் சாமியும் அடுத்தடுத்த நாட்களிலேயே மாண்டனர். இருவரும் உறவினர்களும், நண்பர்களும் உடையவர்கள் - அனாதைகள் அல்ல.

இருவரும் சிறையில் மாண்ட செய்தி (அல்லது கொல்லப்பட்ட செய்தி) வெளியே கசிந்து பெரும் பதற்றம் ஏற்பட்டது. நாட்டில் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படலாம் என்று அஞ்சிய பச்சைத் தமிழரின் அரசு - பாவி பக்தவத்சலம் (போலீஸ் அமைச்சர்) வழிகாட்டுதல்படி அவர்களுடைய உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்காமல் சிறைக்குள்ளேயே புதைத்து விட்டது.

திருச்சி நகரம் அமர்க்களமாயிற்று. பெரியார் வெளியில் இல்லை. இப்போது நானே எல்லாம் என்று பரிவட்டம் கட்டிக் கொண்டு ஆடும் வீரமணி - அப்போது சட்டக் கல்லூரியில் படிக்கிறார் - திராவிட மாணவர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளர் பதவி வேறு! சட்ட எரிப்பில் சம்பந்தப்பட்டால் பின்னாளில் வக்கீல் தொழில் உரிமம் கிடைக்காது என்பதால் வழக்கம் போல் பம்மிக் கிடந்தார்.

திருமதி. மணியம்மையார் துணிச்சலோடு பக்தவத்சலத்திடம் போய்ப் போராடினார். "உயிரோடு அனுப்பினோம் - பிணத்தையாவது கொடுங்கள்" என்று வீறு கொண்டு நின்றார். புதைக்கப்பட்ட அவர்களுடைய பிணங்களைத் தோண்டி எடுத்து பாதி அழுகிய நிலையில் கொடுத்தார்கள். எரிமலையாய்க் குமுறிய தொண்டர்களின் தோளில் ராமசாமி, வெள்ளைச்சாமி உடல்கள் பவனி வந்தன. திருச்சியில் பெரியாரின் கோடானுகோடி சொத்துக்கள் இருக்கின்றன. கல்வி வளாகமும் - கனமான வசூலும் நடக்கிறது. ஆனால் இந்த இருவர் நினைவாய் ஒரு கொடிக்கம்பம் கூட இல்லை.

### சாதி ஒழிய கலப்பு மணங்கள்!

இறந்து போன வெள்ளைச்சாமி, இராமசாமியின் உடல்கள் சிறையிலிருந்த கருஞ்சட்டை வீரர்களின் கடுமையான போராட்டத்திற்குப் பின் - அஞ்சலி செய்வதற்காகச் சில நிமிடங்கள் வெளியில் வைக்கப்பட்டன. திருமணமாகாத கருஞ்சட்டைத் தொண்டர்கள் பலர், இந்த சாதி ஒழிப்பு வீரர்கள் நினைவாகத் தாங்கள் சாதி மறுத்த கலப்பு திருமணங்களே செய்து கொள்வோம் என்று - அந்த மாவீரர்கள் உடல்கள் முன்னால் உறுதி எடுத்துக் கொண்டார்கள். பலர் பல ஆண்டுகள் பின்னர் அப்படியே செய்யவும் செய்தார்கள். தந்தை பெரியாரே, பலருக்குத் தானே பெண் பார்த்து திருமணம் முடித்து வைத்தார்.

கடைசி வரை சுயமரியாதை வீரராய், கலப்புத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து - தன்னுடைய எளிய பெட்டிக்கடை வருவாயில் பிள்ளைகளைப் படிக்க வைத்து - நல்ல நிலைக்கு உயர்த்தி - அவர்களுக்கும் சாதி மறுப்புத் திருமணங்களயே செய்து வைத்த மறைந்த மாவீரர் மண்ண நல்லூர் அரங்கராசன் அவர்களில் ஒருவர்.

இதுபோல் சிறையில் உறுதி எடுத்துக் கொண்ட பல நூறு பேர் உண்டானாலும் - ஊரறிந்த சிலரை மட்டும் சொன்னோம்.

இன்னொருவர் பெரும் பணக்காரரும் பட்டதாரியுமான தோழர் மகுடஞ்சாவடி கிள்ளிவளவன்! இவருடைய துணைவியார் தி.மு.க.வின் மத்திய அமைச்சராய் இருந்த திரு.டி.ஜி.வெங்கட்ராமனின் உடன் பிறந்த சகோதரியாவார். இதுவும் ஒரு சாதி மறுப்புத் திருமணமே! மணமகளின் தந்தை கோபால கவுண்டர் தந்தை பெரியாரின் நண்பர்! இந்தத் திருமணத்தை மணமகன் கிள்ளிவளவன். அவருடைய பெற்றோர், அவருடைய மைத்துனர் டி.டி.வீரப்பா இவர்கள் வேண்டுகோள்படி - பெண் பார்த்து முடித்து வைத்தவர் தந்தை பெரியார்.

தன்னுடைய மாமா கிள்ளிவளவன் திருமணத்தைப் பார்த்து, அது போலவே கலப்புத் திருமணம் செய்தவர் திரு. வீரப்பாவின் மகன் ஜனார்த்தனம். இந்தத் திருமணத்தையும் நடத்தி வைத்தவர் பெரியார் தான்". இவ்வாறு தோழர் செல்வேந்திரன் வரலாற்றைப் பதிவு செய்துள்ளார்.

இப்படி சாதி ஒழிப்புப் புரட்சியில் களம் இறங்கியோர் ஏராளம்! சாதி ஒழிப்புக்காக உயிர்த் தியாகம் செய்த அம் மாவீரர்கள் கல்லறைகளாக முடங்கிவிடவில்லை. அவர்கள் காலத்தின் அறைகூவலாக எழுந்து நிற்கிறார்கள்.

பெரியார் பெரும்படையே! அம் மாவீரர்கள் காட்டிய வழியில் பயணிக்க தஞ்சை நோக்கி திரண்டு வா!

**– மாநாட்டு வரவேற்புக் குழு**

### பல்லடம் கருத்தரங்கில் வே.மதிமாறன் உரை

# ‘பெரியார் திராவிடர் கழகம்’ தான் பெரியார் வழியில் செயல்படுகிறது

*15.4.2007 பல்லடத்தில் பெரியார் திராவிடர் கழகத்தால் நடத்தப் பெற்ற ‘நாத்திகர் விழா’வையொட்டி அன்று பகல் 12 மணியளவில் நடைபெற்ற கருத்தரங்கில் வே.மதி மாறன் ஆற்றிய உரையின் சில பகுதிகள்:*

‘நமஸ்காரம்’ என்கிற சமஸ்கிருதத்தையும் ‘கும்புடேறன் சாமி’ என்கிற அடிமைத் தமிழையும் ஒழித்த, ‘வணக்கம்’ என்ற சுயமரியாதை மிக்க சொல்லை அறிமுகப்படுத்தியது திராவிட இயக்கம். ‘வணக்கம்’ என்கிற அந்த கம்பீரமான கலகச் சொல்லோடு என் உரையை துவங்குகிறேன், வணக்கம்.

பெரியார் வழி சிந்திப்பவர்களின் கொள்கை காக்க சிறையில் இருக்கும் பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்களின் அந்தக் கோபத்திற்கு பரம்பரை குணமே காரணம். அந்த பரம்பரை சுயமரியாதை இயக்க பரம்பரை; பெரியாரின் சிந்தனை பரம்பரை. பெரியாரின் மிகப் பெரிய சாதனை, அவரைப் போலவே சிந்திப்பவர்களை உருவாக்கியது. இன்னும் உருவாக்கிக் கொண்டே இருப்பது. அவர் பேச்சை, எழுத்தை தீவிரமாக படித்த ஒருவர் அவர் சாயலில் சிந்திப்பதில் இருந்து தப்பிக்கவே முடியாது. அதுதான் பெரியாரின் பிரமிக்க வைக்கிற ஆளுமை.

காந்தியின் ஆளுமைக்கு நேர் எதிரான ஆளுமை. தன்னை சுற்றியே அரசியல் நிகழ வேண்டும். தன் கருத்துக்கு மாறாக தன்னைத் தாண்டி வேறு ஒரு கருத்தோ, வேறு தலைவரோ அரசியல் நடத்துவதை விரும்பாத காந்தியின் அழுகுனி ஆளுமையைப் போல் சுயநலம் சார்ந்ததல்ல. பெரியாரின் ஆளுமை பொதுநலம் சார்ந்தது. பிரிவினையின் போது காந்தி முஸ்லீம்களுக்கு ஆதரவாக இருந்தார். அவர் செய்த ஒரே நல்ல செயல் அதுதான். அதற்காகத்தான் அவர் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பானால் கொல்லப்பட்டார். அதன் பொருட்டே பெரியார் ‘இந்தியாவிற்கு காந்தி தேசம்’ என்று பெயர் வைக்கச் சொன்னார்.

ஒருவேளை காந்தி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகத்திற்கு ஒரு தாழ்த்தப்பட்டவரால் கொலை செய்யப்பட்டிருந்தால், பெரியார் அதை வரவேற்றிருப்பார் அல்லது காந்தியை ஆதரித்து இருக்க மாட்டார். வட்டமேசை மாநாட்டில் டாக்டர் அம்பேத்கரின் வாதத்தின் முன்னால் தரைமட்டமான காந்தி, ‘இந்திய அரசியலில் தன்னை மீறி ஒரு முக்கிய முடிவெடுக்கப்படுகிறது. தன்னை எதிர்த்து ஒரு தலைவர் உருவாகிறார்’ என்பதை தாங்கிக் கொள்ள முடியாத காந்தி, சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்து, உண்ணாவிரதம் இருக்கிறார்.

“கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையைவிட, காந்தியின் உயிர் முக்கியமானதல்ல. அதனால் உங்கள் நிலையிலிருந்து இறங்கி வராதீர்கள்” என்று டாக்டர் அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தவர் தான் பெரியார்.

‘காந்தி உண்ணாவிரதம் இருந்து இறந்து விடுவாரே’ என்கிற பரிதாப உணர்வு பெரியாரிடம் துளியும் இல்லை. ‘ஆர்.எஸ்.எஸ். பார்ப்பான் கொன்றானே’ என்கிற ஒரே காரணம் தான் காந்தியை பெரியார் அந்த உயர்நிலைக்குப் போய் ஆதரித்ததற்கு. காந்தியவாதம் அல்லது காந்தியின் சிந்தனை என்பது, “பாபுஜி இப்படி சொல்லியிருக்கிறார்” என்று சொல்வதற்கு வேண்டுமானால் பயன்படுமேதவிர, அந்த முறையில் சிந்திக்கவோ செயல்படுத்தவோ முடியாது. நடைமுறைக்கு உதவாது போனதால்தான், காந்தியக் கொள்கை காந்தியாலேயே தோற்கடிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் இருந்தே சாதிக்க முடியும் என்றால், “வெள்ளையன் வெளியேற வேண்டும். இல்லையேல் சாகும்வரை உண்ணாவிரதம்” என்று காந்தி உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால், வெள்ளைக்காரன் டாக்டர் அம்பேத்கரை போல் பெருந்தன்மையிம் இரக்க குணமும் கொண்டு நடந்திருக்க மாட்டான். அவன் முடித்து வைத்திருப்பான். உண்ணாவிரதத்தை அல்ல, காந்தியை. அது தெரிந்ததால்தான் காந்தி அப்படி ஒரு உண்ணாவிரதத்தை இருக்கவில்லை. காந்தியைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், பகத்சிங் கண்களாலும், டாக்டர் அம்பேத்கர் கண்களாலும் பாருங்கள், அப்போதுதான் அந்தப் பச்சைத் துரோகம் புரியும்.

பெரியார் தோற்றுவித்த திராவிடர் கழகம் இன்று காந்திய வழியில் செயல்படுகிறது. **பெரியார் திராவிடர் கழகம் தான் பெரியார் வழியில் செயல்படுகிறது.** பெரியாரின் ஆதரவுடன்தான் பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்கள் சிலை இடிப்பு விவகாரத்தில் தங்கள் எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்கள்.

பெரியார் சிலை உடைப்புக்கான எதிர்ப்பை இதே மாதிரி இன்னும் ஒரு முறை செஞ்சா போதும். அதுக்கப்புறம் பெரியார் சிலைக்கு பெரியார் தொண்டர்களோ, காவல் துறையோ பாதுகாப்புக்கு இருக்க தேவையில்லை. பிராமணர் சங்கமே பாதுகாப்பு கொடுக்கும். அத்திம்பேரும், ஆத்துக்காரரும் நைட் ஷிப்டும், பகல் ஷிப்டுமா மாறி மாறி ஷிப்ட்டு சிஸ்டம் போட்டு பெரியார் சிலையை பாதுகாப்பார்கள்.

1929 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 மற்றும் 18 அம் தேதிகளில் செங்கற்பட்டில் கூடிய சுயமரியாதை மாநாட்டில், “தாய் மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு சம உரிமை அளிக்க வேண்டும். விதவை திருமணத்தை ஊக்குவிக்க வேண்டும். தீண்டாமை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு இவைகளோட யாரும் தன் பெயருக்குப் பின்னால் ஜாதி பெயரை போட்டுக் கொள்ளக் கூடாது. நெற்றியில் திருநீறு, நாமம் போன்ற சமயச் சின்னங்களை அணியக் கூடாது. கலப்பு மணத்தை ஊக்குவிக்க வேண்டும்” என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது. இந்தத் தீர்மானங்கள் சைவ சமயத்தாரையும் நீதிக்கட்சியில் இருந்த சில முக்கியத் தலைவர்களையும் திடுக்கிட வைக்கிறது. நீதிக்கட்சியில் இருந்த சில தலைவர்களைப் பற்றி 2.11.1952 இல் பெரியார் இப்படி சொல்லியிருக்கிறார்.

“ஜஸ்டிஸ் கட்சி என்ற கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களில் 100க்கு 99 பேர் சுயமரியாதைக் கொள்கைக்கு விரோதிகளே.” சுயமரியாதை மாநாட்டுக்கு பதிலடி தரும் வகையில், உடனே சைவ சமய மாநாடு, 1929 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29, 30, 31 ஆகிய தேதிகளில் திருநெல்வேலியில் கூட்டப்பட்டது. சைவ சமயத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்ற கருத்துடையவரும், பெரியார் கொள்கைகளில் ஈடுபாடு உள்ளவரும், பெரியாரின் நண்பருமான கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரத்திற்கு, சைவ மாநாட்டில் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

சைவ மாநாட்டில் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் காரணமாக, ‘எல்லா மக்களும் கோயிலில் நுழைய வேண்டுமானால், அவர்கள் சுத்தமாக இருக்க வேண்டும்’ என்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இந்த தீர்மானத்தை காறி துப்புவதுபோல் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த கோவை அய்யாமுத்து இப்படி எழுதினார்:

“அய்யா, சைவப் பெரியோரே, தாங்கள் கோரும் சுத்தம் அகச் சுத்தமா, புறச் சுத்தமா ? அகச் சுத்தமாயின், அகச் சுத்தமுள்ளவனுக்கு கோயில் எதற்கு ? புறச் சுத்தமாயின், நாளைய தினமிருந்த தங்களை ஒரு அழுக்குள்ள குடிசையில் குடியிருக்கச் செய்து, திருநெல்வேலியிலுள்ள கக்கூசு மலங்களையெல்லாம் வாரியெடுத்து அப்புறப்படுத்துவதைத் தங்களுக்குத் தொழிலாகக் கொடுத்து அதற்காக தங்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளங் கொடுத்து, கிணற்றிலும் அனுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டால் தாங்கள் சுத்தமாக இருக்க முடியுமா ?” கோவை அய்யாமுத்துவின் இந்தக் கேள்விக்கு சைவ சமயத்தைச் சார்ந்தவர்களிடம் இருந்தோ, இல்லை அவர்களை ஆதரிக்கிற தமிழ் உணர்வாளர்களிடமிருந்தோ இன்றுவரை பதில் இல்லை.

அதேபோல், 1934 இல் சென்னையில் தமிழ்ச் சங்க மாநாட்டிற்கான ஆலோசனை கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. கூட்டத்தில் பெரியார் கொள்கையின் தீவிர பற்றாளர்களும், சுயமரியாதை இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களுமான சி.டி.நாயகமும், சாவடி கூத்த நயினாரும் கலந்து கொண்டு சாதி ஒழிப்புப் பற்றி தீர்மானம் கொண்டுவர முயல்கின்றனர்.

“தமிழ்மொழி மாநாட்டில் சாதி பற்றிப் பேசக் கூடாது” என்று அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு தலைமையேற்றுப் பேசுகிற மறைமலையடிகள், தன் பேச்சைக் கடவுள் வாழ்த்தோடு துவங்குகிறார். சி.டி.நாயகம் எழுந்து, “கூட்டத்தில் தமிழைப் பற்றி மட்டுமே பேசப்படுமென்று குறிப்பிட்டு விட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுவது ஒழுங்கல்ல” என்று எதிர்ப்பு தெரிவிக்கிறார்.

உடனே மறைமலையடிகள் “தேவாரம் பாடலாமா ?” என்று கேட்கிறார்.

அதற்கு நாயகம் “இசையென்ற முறையில் பாடலாம்” என்கிறார்.

மீண்டும் மறைமலையடிகள், “தமிழையாவது தெய்வமாக வணங்கலாமா ?” என்று கேட்கிறார்.

“தமிழை மொழியாக போற்றலாம்” என்று நாயகம் சொல்கிறார்.

வேறு வழியின்றி, “பல்லுயிரும் பல உலகும்” என்ற பாட்டுப்பாடி தன் உரையை துவங்கியிருக்கிறார் மறைமலையடிகள்.

இந்த சி.டி. நாயகம்தான் 1938 இல் பெரியார் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்.

பெரியார் தலைமையிலான சுயமரியாதை இயக்கம் இப்படி நெருப்பாகததான் இயங்கியது.

அந்த நெருப்பில் பட்டுக்கோட்டை அழகிரியை ஒரு தீப்பந்தம் என்றே சொல்லலாம். தஞ்சை மாவட்டத்திலும் சென்னையிலும் பெரியார் இயக்கத்தை பெரும் அளவு வளர்த்த பங்கு அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமியையே சேரும். ‘அஞ்சாநெஞ்சன்’ என்கிற பட்டம் ஏதோ, நடிகர் விஜய்க்கு தந்த ‘இளைய தளபதி’ பட்டம் போல் அல்ல. உண்மையில் அழகிரி அஞ்சாநெஞ்சனாகவே வாழ்ந்தார். அழகிரியோடு கைகோர்த்து இயக்கம் கட்டிய எஸ்.வி.லிங்கம் சொல்கிறார்:

“மன்னார்குடியில் ஒரு கூட்டம். அதில் அழகிரியின் பிரசங்கம். கூட்டத்தில் கால் பாகத்தினர் கேள்வியும் கல்லும் வீசுகிறார்கள். இப்படி முக்கால்மணி நேரம் நடந்தது. நிலைமையை உணர்ந்து கொண்ட அழகரிசாமி, பேசிக் கொண்டே வந்து திடீரென்று கற்களை எடுத்துக் கொண்டு மேடை மீது ஏறினார். கற்களை மேஜை மீது வைத்தார். கலகம் செய்து கல் வீசியவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அழகிரிசாமி மேலும் பேசினார்.

“தோழர்களே, இந்த ஊருக்கு நான் புதியவன். இவ்வூர் வழக்கம் எனக்குத் தெரியாது. பெரிய வைஷ்ண ஸ்தலமாக இது இருந்தும், வைஷ்ணவ வகுப்புக்காரனான எனக்கு இவ்வூர்ப் பழக்கம் தெரியாமல் போனது தப்புதான். இனி நான் பேசுகிறேன். நீங்களும் கல் போட்டுக் கொண்டே என் பிரசங்கத்தைக் கேளுங்கள். நானும் உங்கள் மீது கல் வீசிக் கொண்டே பிரசங்கம் செய்கிறேன்” என்றார். இந்த தில்லு, இதுதான் அழகிரிசாமி.

நம்முடைய கொள்கைகளை பரப்புவதற்கு கூட்டம் போட்டு பேசுவது ஒரு முறை. ஆனால் அழகிரிசாமியோட முறை அது மட்டுமல்ல. எதிரிகள் போடுகிற கூட்டத்திற்குப் போய் அந்தக் கூட்டத்தையே நம்ம கூட்டமா மாற்றி அவன் செலவிலேய நம்ம கட்சி தீர்மானத்தைப் போட்டுக் கூட்டத்தை முடிச்சிடுறது. சாதாரண பொதுக் கூட்டங்களில் மட்டுமல்ல, மிகப் பெரிய கனவான்கள் நடத்துகிற மாநாட்டிலேயே போய் அதை செய்திருக்கிறார் அழகிரிசாமி. பூணூலிலேயே பூ கட்டி அதை அவர்கள் காதுகளிலேயே வைத்தவர்தான் அழகிரி. இந்த அஞ்சாநெஞ்சன் அழகிரி பெயரைதான், கலைஞர் தன் மகனுக்கு வைத்திருக்கிறார். பட்டுக்கோட்டை அழகிரி மாதிரியே தைரியமாக செயல்பட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை சிறையிலும் வைத்திருக்கிறார். ‘காந்திக்குப் பிறகு அகிம்சையைப் போதிக்கிற ஒரே தலைவர் கலைஞர் மு.கருணாநிதிதான்’ என்கிற பெயரை எடுப்பதற்காக படாதபாடுபடுகிறார் கலைஞர்.

அழகிரியைப் போலவே பட்டுக்கோட்டையில் பெரியாரின் போர்வாள் ஒருவர் இருந்தார். அந்தப் போர்வாளுக்குப் பெயர் டேவிஸ். கட்சியின் தீவிர தொண்டர். இவரை பெரியாரின் தொண்டர்களுக்கு தெரிந்திருக்கிறதோ இல்லையோ, அந்தப் பகுதி பார்ப்பனர்களுக்கு இவா என்றால் பயம். ஏனென்றால் இவரின் பிரச்சார முறை, பூணூல் அறுப்பது, அடித்து உதைப்பது, ஆறடி உயரத்தில் கம்பீரமான உருவம் கொண்ட டேவிஸ், நல்ல ஆங்கில அறிவு உள்ளவர்.

பூணூல் அறுப்பின் போது, பார்ப்பனர்களிடம் ஆங்கிலத்திலேயே, “நீங்கள் அணிந்திருக்கிற பூணூல் என்னை அவமானப் படுத்துவதாக இருக்கிறது. அதனால் தயவு செய்து நீங்களே கழட்டி தந்துவிடுங்கள்” என்று பணிவோடுதான் கேட்பாராம். பார்ப்பனர்களும் உடனே கழற்றி தந்துவிடுவார்களாம். இல்லையென்றால், ‘யாரு ஒதை வாங்குறது ?’. திராவிடர் கழகத்தைப் பற்றியோ, பெரியாரைப் பற்றியோ யாராவது தவறாகப் பேசினால், அவர்கள் டேவிசின் தர்ம அடியில் இருந்து தப்ப முடியாது.

பெரியார் தொண்டர்கள் என்று சொல்லிக் கொள்கிற சிலர், பெரியார் சிலை இடிப்பின் போது, ‘கலைஞர் ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது’ என்று தங்கள் வீரத்தை அடக்கிக் கொண்டதுபோல் வசனம் பேசினர்.

மதுரை வீரன் திரைப்படத்தில் பாலையா பேசிய, ‘இன்னிக்கு வெள்ளிக்கிழமையா ? அப்போ நான் கத்தியை வெளியே எடுக்க மாட்டேன்’ என்ற வசனத்தையே அது ஞாபகப்படுத்தியது.

என்னமோ இவர்கள் ஜெயலலிதா ஆட்சியில் பெரிய புரட்சிக்காரர்களாக இருந்தா மாதிரியும், கலைஞர் ஆட்சியில் அடக்கி வாசிப்பது மாதிரியும் நடிக்கிறார்கள். ஜெயலலிதா ஆட்சியில், ‘ஜெயலலிதா ஆட்சிக்கு எந்த ஆபத்தும் வராமல் பாதுகாத்தார்கள்’. கலைஞரை மோசமான முறையில் கைது செய்தபோதுகூட, இவர்கள் கலைஞரைத்தான் கண்டித்தார்கள். உண்மையில் இவர்கள், எந்த ஆட்சி வந்தாலும் தங்கள் நலனைப் பாதுகாப்பதில் வல்லவர்கள்.

ஆனால் தந்தை பெரியார், தான் பாடுபட்டு உருவாக்கிய காமராஜர் ஆட்சியில்தான் 26.11.1957 அன்று அரசியல் சட்டத்தையே எரித்தார். இந்திய பிரதமர் நேருவையே நடுநடுங்க வைத்தார். இவர்களோ கேவலம் ராமர் படத்தை எரிப்பதற்கே, கலைஞர் ஆட்சியின் மீது பழி போடுகிறார்கள்.

பெரியார் சிலை இடிப்பு விவகாரத்தில் தங்கள் எதிர்ப்பை சிறப்பான முறையில் வெளிபடுத்திய மக்கள் கலை இலக்கிய கழகத்திற்கு, பெரியார் இயக்க மேடையில் இருந்து நன்றி சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதால், அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ●

**சாதி ஒழிப்பு மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள்**


திருப்பூர் அங்க குமார், திருப்பூர் இராவணன், மன்னை முத்து இராமலிங்கம், பாப்பாநாடு சிவா, பட்டுக்கோட்டை இளவரசன், சீர்காழி பெரியார் செல்வன், மயிலாடுதுறை மகேஷ், மயிலாடுதுறை இளைய ராசா.

*மாநாட்டு அலுவலகப் பொறுப்பாளர் :*

**திருப்பூர் இராவணன்**

*மாநாட்டு அலுவலக முகவரி:*

**எஸ்.பி. இல்லம்,<br>15/8, குஜிலியன் குளம்,<br>வடகரை தெரு,<br>(கரந்தை தமிழ்ச் சங்கம் எதிரில்) கரந்தை, தஞ்சை-2.**



சாதி ஒழிக்க சட்டம் எரித்த 50 ஆவது ஆண்டில் தஞ்சையில்...

# ‘பெரியார் திராவிடர் கழகம்’ நடத்தும் சாதி ஒழிப்பு மாநாடு

**19.5.2007 சனிக் கிழமை காலை 9 மணி**

**தமிழரசி திருமண மண்டபம்**
(இராசாராசன் மணி மண்டபம் அருகில்)

*வரவேற்புரை :*
**பட்டுக்கோட்டை முத்து ராமலிங்கம்**

*எழுச்சி இசை :*
**பள்ளத்தூர் நாவலரசன் - மன்னை தங்கம்** குழுவினர்

**10 மணி கழகக் கொடியேற்றம்:**
**பால். பிரபாகரன்** (கழக ஆட்சிக்குழு உறுப்பினர்)

*தொடங்கி வைத்து உரை :*
**மாண்புமிகு ஈ.வெ.கி.ச. இளங்கோவன்**
(மத்திய வணிகத்துறை இணையமைச்சர்)

**கருத்தரங்கம் : 11 மணி**

தலைமை: **விடுதலை இராசேந்திரன்** (பொதுச்செயலாளர்)

**சாதி ஒழிப்பில்...**

| | |
|---|---|
| புத்தர் | **அழகிய பெரியவன்** (எழுத்தாளர்) |
| புலே | **கவிஞர் வெண்ணிலா** |
| பெரியார் | **புனித பாண்டியன்** (ஆசிரியர், ‘தலித்முரசு’) |
| அம்பேத்கர் | **வழக்குரைஞர் த. பானுமதி** |
| சமகால களப்போராளிகள் | **தலித் சுப்பையா** (‘விடுதலைக் குரல்’) |

**12.30 மணி**

**சட்ட எரிப்பு வீரர்களின் நினைவுப் பகிர்வு**

*தலைமை:* **சட்ட எரிப்பு வீரர் நாகை எஸ்.எஸ். பாட்சா**

*நினைவுப் பகிர்வு:* **சிறைசென்ற சட்ட எரிப்புப் போராளிகள்**

**பகல் 1 மணி**
**சட்ட எரிப்புப் போராளிகளுக்கு சிறப்பு செய்து பாராட்டுரை**
*பாராட்டுபவர் :*
**திருவாரூர் கே. தங்கராசு**
(தலைமைக்குழு உறுப்பினர், பெரியார் திராவிடர் கழகம்)

*நன்றி :*
**இலக்குமணன்,** (பெரம்பலூர் மாவட்டக் கழக அமைப்பாளர்)

**பிற்பகல் 3 மணி**

**சாதி ஒழிப்பு எழுச்சிப் பேரணி**

புறப்படும் இடம்: **ஜூப்பிட்டர் திரையரங்கு அருகிலிருந்து**

*தலைமை :* **க. கருமலையப்பன்**
(கோவை (தெற்கு) மாவட்ட தலைவர்)

*தொடக்கி வைப்பவர் :* **துரை. தாமோதரன்**
(பெரம்பலூர் மாவட்டத் தலைவர்)

**மாலை 6 மணி**

## பொது மாநாடு

**திருவள்ளுவர் திடல் (திலகர் திடல்)**

*வரவேற்புரை :* **இராம. இளங்கோவன்**
(ஈரோடு மாவட்டக் கழகச் செயலாளர்)

*தலைமை :* **கொளத்தூர் தா.செ.மணி** (கழகத் தலைவர்)

**சட்ட எரிப்புக் கிளர்ச்சி வரலாற்றுத் தொகுப்பு நூல் வெளியீடு**
*வெளியிடுபவர் :*
**ஆனூர் செகதீசன்** (கழகத் துணைத் தலைவர்)

*பெறுபவர் :* **தஞ்சை மருதவாணன்**

*நூல் அறிமுக உரை :* **கவிஞர் இளவேனில்**

**தேசியப் பாதுகாப்பு அடக்குமுறை சட்டத்தில் சிறைச் சென்ற கழகத் தோழர்களுக்கு சிறப்பு; பாராட்டு :**
**வழக்கறிஞர் துரைசாமி** (தலைமைக் குழு உறுப்பினர்)

*மாநாட்டு சிறப்புரை :* **திருவாரூர் கே. தங்கராசு**
**முனைவர் பி.டி. சத்யபால்** (ஆந்திர பல்கலைக் கழகம்)
**கோவை இராமகிருட்டிணன்** (பொதுச் செயலாளர்)
**லோகு. அய்யப்பன்** (தலைவர், புதுவை பெரியார் திராவிடர் கழகம்)
**குப்பு. வீரமணி**



*நன்றியுரை :* **திருப்பூர் இராவணன்**

**சாதி ஒழிப்புப் போராளிகளை நினைவுகூர்ந்து - சாதி ஒழிப்புக் களம் நோக்கி பயணமாவோம்.**

**தன்மானத் தமிழர்களே, திரண்டு வாரீர்!**

**- பெரியார் திராவிடர் கழகம்**

தொடர்புக்கு : 9994432187 / 9842725598

## சிறையிலே உயிரிழந்த போராளிகள் நினைவாக....


அரசியல் சட்டத்தை எரித்து - கிரிமினல் குற்றவாளிகளைப்போல் நடத்தப்பட்டு - கடும் தண்டனைக்கு உள்ளாகி - மோசமான உணவால் நோயுற்று - உரிய சிகிச்சை மறுக்கப் பட்டதால் - சிறைக்குள்ளே - 5 கருஞ்சட்டை போராளிகள் மரணத்தைத் தழுவினர். அவர்களின் நினைவாக - மாநாட்டு அரங்குகளுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| *காலை மாநாட்டு நுழைவாயில்* | : **பட்டுக்கோட்டை இராமசாமி நினைவாக** |
| *மாநாட்டுப் பந்தல்* | : **வாளாடி பெரியசாமி நினைவாக** |
| *காலை மாநாட்டு மேடை* | : **லால்குடி நன்னிமங்கலம் கணேசன் நினைவாக** |
| *மாலை மாநாட்டு மேடை* | : **மணல்மேடு வெள்ளைச்சாமி நினைவாக** |
| *பேரணியில் போராளிகள் வரும் ஊர்தி* | : **திருச்சி சின்னசாமி நினைவாக** |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 11th May 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 மே 17, 2007 புரட்சி 4 முழக்கம் 75 விலை : ரூ.2.50


## கோவை–திருச்சியில் உற்சாக வரவேற்பு!

# 155 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு கழகத் தோழர்கள் விடுதலை

*கோவை, திருச்சி சிறையில் 5 மாத காலம் சிறைவாசம் ஏற்று விடுதலையான கழகத் தோழர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 8.12.2006 முதல் சிறையில் அடைக்கப்பட்ட ஈரோடு மாவட்டப் பெரியார் திராவிடர் கழக லட்சிய வீரர்கள் ஈரோடு மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட அமைப்பாளர் குமரகுருபரன் மற்றும் அர்ச்சுனன், முருகானந்தம் ஆகிய நால்வரும் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் ஏப்ரல் 20 இல் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விடுவிக்கப் பட்டனர்.

ஆனால், அவர்கள் மீது இருந்த கிரிமினல் வழக்குத் தொடர்பாக ஈரோடு மாவட்ட விடுமுறை கால செசன்ஸ் நீதிமன்றம் பிணை மறுத்ததால், மீண்டும் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு கொடுக்கப்பட்டு, மே 9 ஆம் தேதி தோழர்கள் அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டது.

முப்பது நாட்களுக்கு தினமும் காலை 10.30 மணிக்கு தோழர்கள் ஈரோடு நீதித் துறை நடுவர் முன் ஆஜர் ஆக வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், மே 9 ஆம் தேதி சனிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு கோவை மத்திய சிறைச் சாலையிலிருந்து 155 நாட்கள் கழித்த அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். சிறையிலிருந்து வெளிவந்த தோழர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சிறைவாயிலில் காத்திருந்து தோழர்களை வரவேற்றுப் பாராட்டி பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். சிறை முன்பு ஈரோடு, கோவை மாவட்டத் தோழர்கள் நூற்றுக் கணக்கில் திரண்டு வந்திருந்தனர். ஏராளமான சால்வைகள் போர்த்தப்பட்டன. அதிர்வேட்டுகள், பட்டாசுகள் முழங்க கோவை சிறைவாயிலில் இருந்து, தாரை தப்பட்டையுடன் ஒரு கிலோ மீட்டருக்கு மேல் கழகப் பொதுச்செயலாளர் மற்றும் பொறுப்பாளர்களுடன் தோழர்கள் அணி வகுத்து ஊர்வலமாகச் சென்று காந்திபுரம் பேருந்து நிலையம்

4 ஆம் பக்கம்

## தஞ்சை தயாராகிறது

மே 19 - பெரியார் திராவிடர் கழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாள். 50 ஆண்டுகளுக்கு முன் சாதி ஒழிப்புக்காக கடும் சிறைத் தண்டனையேற்ற சாதி ஒழிப்புப் போராளிகளுக்கு விருது வழங்கி, அவர்களின் தன்னலமற்ற தொண்டுக்கு தலைவணக்கம் செய்கிறது, கழகம்!

தஞ்சையில் - கழகத் தோழர்கள், பம்பரமாக சுழன்று, பணியாற்றி வருகிறார்கள். திருப்பூர் கழகத் தோழர் இராவணன், கடந்த 10 நாட்களாக தஞ்சையில் தங்கி, அலுவலகப் பணிகளைக் கவனித்து வருகிறார். திரும்புமிடமெல்லாம் மாநாட்டை பறைசாற்றும் சுவரெழுத்துகளை கழகத் தோழர்கள் மேட்டூர் குமரப்பா, சவுந்தர் ஆகியோர் இரவு பகலாக எழுதியுள்ளனர். திருப்பூர் கழகச் செயல் வீரர்கள் சண்முகம், கோபிநாத், மூர்த்தி, சுதாகர், பாண்டியநாதன், பாண்டியன், திண்டுக்கல் அமீர், மேட்டூர் தோழர்கள் குணசேகரன், சவுந்தர், சத்யா, திருப்பூர் ஜெகன் ஆகியோர் தஞ்சையில் முகாமிட்டு, மாநாட்டு வேலைகளைக் கவனித்து வருகின்றனர். கழகப் பொறுப்பாளர்கள் தாமரைக் கண்ணன், அங்ககுமார், அவ்வப்போது தஞ்சை வந்து பணிகளை முடுக்கி விடுகிறார்கள். கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவ்வப்போது தஞ்சை வந்து மாநாட்டுப் பணிகளை கவனித்து வருகிறார். தமிழகம் முழுதுமிருந்தும், தனிப் பேருந்துகளில் தோழர்கள் தஞ்சை வர ஏற்பாடுகள் செய்து வரும் செய்திகள் வந்துள்ளன. மன்னை, பட்டுக்கோட்டை, திருச்சி, தஞ்சை, பாபநாசம் ஆகிய ஊர்களில் தோழர்கள், கடை வீதிகளில், மாநாட்டுத் துண்டறிக்கைகளை வழங்கி, நன்கொடை திரட்டி வருகிறார்கள். மாநாட்டுக்கு வரும் தோழர்களுக்கு, அரங்குக்கு அருகே குறைந்த விலையில் உணவு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறைச் சென்ற தோழர்கள் பேரணியில் பங்கேற்பதும், அவர்களுக்கு விருது வழங்குவதும், மாநாட்டின் தனிச் சிறப்பாகும்.

தமிழகக் கிராமங்களில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் தீண்டாமை சாதிவெறியை எதிர்த்துக் களம் காண உறுதி ஏற்று பெரியார் திராவிடர் கழகம், சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தி, சாதி ஒழிப்புப் போராளிகளுக்கு, மரியாதை செலுத்துகிறது.

கழகத்தின் பெரிய நிகழ்ச்சி ஒன்று தஞ்சையில் முதன்முறையாக நடைபெறுகிறது. பெரியார் கொள்கைக்காக உயிர்த் துடிப்புடன், களமிறங்கும் செயல் மறவர் படை - பெரியார் திராவிடர் கழகம் தான் என்பதைக் காட்டிட, தஞ்சைக்குத் திரளுவோம்! வாரீர்!

**–மாநாட்டு வரவேற்புக் குழு**

# மீனவர் பிரச்சினை: உளவுத் துறையின் குளறுபடிகள்

ஈழத் தமிழர் பிரச்சினையில் - உளவு நிறுவனங்கள் தொடர்ந்து தலையிட்டு, தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு எதிராக அரங்கேற்றி வரும் நாடகங்களின் சில உண்மைக் காட்சிகளை, 'புரட்சி பெரியார் முழக்கம்' வழியாக அம்பலப் படுத்தி வருகிறோம். இந்திய கப்பல் படையும், இலங்கை கப்பல் படையும் இணைந்து, இந்தியக் கடற்பரப்பில் 'கூட்டு ரோந்து' நடத்தும் திட்டத்தை அமுல்படுத்திவிட்டால், ஈழப் போராளிகளின் கடல்வழி நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திவிடலாம் என்ற நோக்கத்தோடு - இந்திய உளவு நிறுவனங்கள் தமிழகத்தில் முகாமடித்து, தமிழகக் காவல்துறையையும் மிரட்டி, செயல்படத் துவங்கியதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். ஆனால், முற்றிலும் இவர்கள் எதிர்பாராத நிலையில், ஈழப் போராளிகள், வான் வழித் தாக்குதலைத் துவக்கியவுடன், உளவுத் துறை அதிர்ச்சியடைந்தது. இதனால் இந்தியாவுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று ஒரு பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு வருகிறார்கள். போராளிகளின் விமானத் தாக்குதல் அந்நாட்டு சிங்கள மக்களையே குறி வைக்கவில்லை. ராணுவ, பொருளாதார நிலைகளை மட்டுமே தாக்கி வருகிறது. இந்த நிலையில், இந்தியாவுக்கு, தமிழ்நாட்டுக்கு ஆபத்து என்று கூக்குரல் போடுவது அப்பட்டமான பொய்ப் பிரச்சாரம் என்பது, தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனுக்கும் நன்றாகவே புரியும் (ஈழப் போராளிகளை தொடர்ந்து எதிர்த்து வரும் துக்ளக் பார்ப்பன ஏடு கூட - இந்த விமானத் தாக்குதலால் தமிழ்நாட்டுக்கோ, இந்தியாவுக்கோ ஆபத்து வரும் என்ற கருத்தை ஏற்க முடியாது என்று எழுதியிருப்பதை நினைவூட்டுகிறோம்).

ஆனாலும் - தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உருவாகி வரும் மக்கள் ஆதரவை - திசை திருப்பிக் குழப்பிடும் முயற்சிகளில் உளவு நிறுவனங்கள், இப்போது தீவிரமாக செயல்படத் துவங்கிவிட்டன. தமிழக மீனவர்கள் 5 பேரை கடந்த மார்ச் 29 ஆம் தேதி சுட்டுக் கொன்றது - விடுதலைப் புலிகளின் கடற்படையினர்தான் என்றும், அதற்கு 25 நாட்களுக்கு முன் மார்ச் 4 ஆம் தேதி மீன் பிடிக்கப் போய் திரும்பி வராத தமிழக மீனவர்கள் 12 பேரை விடுதலைப் புலிகள்தான் சிறை பிடித்து வைத்துள்ளனர் என்றும், உளவுத் துறை பிரச்சாரம் செய்து வருகிறது. தமிழக காவல்துறையும் இது உண்மைதான் என்று உறுதிப்படுத்துகிறது. இதற்கான ஆதாரம் என்ன ?

"விடுதலைப்புலிகளின் கடற்படையினரையே நாங்கள் பிடித்து வைத்துள்ளோம். அவர்களே, இந்த உண்மைகளை ஒப்புக் கொண்டு விட்டார்கள். அவர்கள் தந்த ஒப்புதல் வாக்குமூலத்தை வீடியோவில் பதிவு செய்துள்ளோம்" என்கிறது தமிழக காவல்துறை. தமிழக காவல்துறை இயக்குனராக இருக்கும் முகர்ஜி என்ற பார்ப்பன அதிகாரி - 'சட்டம் ஒழுங்குப் பிரச்சினை' என்ற எல்லைகளைத் தாண்டி இப்படி எல்லாம் அரசியல் பேசிக் கொண்டிருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் குறிப்பிட்டதுபோல், சட்ட மீறலைத் தடுத்து நடவடிக்கை எடுப்பதுதான் காவல்துறையின் கடமையே தவிர, நிகழ்ந்த சம்பவத்தில் அரசியல் யூகங்களைத் தெரிவித்துக் கொண்டிருப்பது அல்ல. இரண்டு அரசியல் கட்சிகளுக்குள் மோதல் நடந்தால், குற்றவாளிகளைக் கைது செய்து வழக்கு தொடருவதுதான் காவல்துறை வேலையாக இருக்க முடியுமே தவிர, கைதானவர், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்தான் என்பதற்கு ஆதாரங்களைத் தேடி - அறிவிப்பது அல்ல; அதைத்தான் தமிழக காவல்துறை இயக்குனர் முகர்ஜியிலிருந்து, கப்பல்படை தளபதி வரை இப்போது செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் நடவடிக்கைகளில் அரசியல்கள் நோக்கம் அடங்கி இருக்கிறது என்பதை, இது அப்பட்டமாக வெளிப்படுத்தி விடுகிறது.

நடந்த சம்பவங்களை உன்னிப்பாகப் பரிசீலித்தால், தமிழக காவல்துறையும், மத்திய உளவுத் துறையும் மக்களை திசை திருப்பிட, திட்டமிட்டு காய்களை நகர்த்தி வருவதாகவே அழுத்தமான சந்தேகங்கள் எழுகின்றன.

மார்ச் 4 ஆம் தேதி கன்யாகுமரியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள் கரை திரும்பவே இல்லை. அவர்களை விடுதலைப்புலிகள் பிடித்து வைத்திருப்பதாக உளவுத் துறையும், காவல்துறையும் கூறுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்துவிட்டது. தமிழக மீனவர்களைப் பிடித்து தமிழர்களோடு முரண்பாட்டை வளர்க்க வேண்டிய அவசியம் விடுதலைப்புலிகளுக்கு என்ன வந்தது என்பது முதல் கேள்வி ? தமிழகத் தமிழர்களின் நட்புக்கும், நேசத்துக்கும் ஆதரவுக்கரம் நீட்டி நிற்பவர்கள் - தமிழ் ஈழப் போராளிகள்.

தற்போது தமிழக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள உளவுத் துறையில் 'கடற்புலிகள்' என்று சுட்டப்படுகின்ற, 6 தமிழர்களும் யார் ? அவர்கள் உண்மையில் கடற்புலிகளா ? அல்லது மீன் பிடிக்க வந்த ஈழத் தமிழர்களா ? யார் இவர்கள் ?

> **நடந்த சம்பவங்களை உன்னிப்பாகப் பரிசீலித்தால், தமிழக காவல்துறையும், மத்திய உளவுத் துறையும் மக்களை திசை திருப்பிட, திட்டமிட்டு காய்களை நகர்த்தி வருவதாகவே அழுத்தமான சந்தேகங்கள் எழுகின்றன.**

இவர்கள் கன்யாகுமரி அருகே நடுக்கடலில் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டவர்கள், இவர்கள் பிடிபடுவதற்கு ஒன்றரை மாதத்துக்கு முன்பு, கடலில் மீன்பிடிக்கப் போன 12 தமிழ்நாட்டின் குமரி மாவட்ட மீனவர்கள் கரை திரும்பவில்லை. அவர்களை சுட்டுக் கொன்றது, இப்போது பிடிப்பட்டவர்கள் தானா என்ற சந்தேகங்களும பத்திரிகைகளால் எழுப்பப்பட்டன.

இது பற்றி - தமிழ் நாளேடுகளான 'தினமணி', 'தினத்தந்தி'யில் வெளியான செய்திகள் என்ன கூறின ?

- மார்ச் மாதம் 4 ஆத் தேதி மீன் பிடிக்கச் சென்ற 12 தமிழ்நாடு மீனவர்கள் கரை திரும்பவில்லை.
- மார்ச் 29 ஆம் தேதி மீன் பிடிக்கச் சென்ற தமிழ்நாடு மீனவர்கள் மீது நடுக்கடலில் சிலர் துப்பாக்கியால் சுட்டதில் 5 தமிழக மீனவர்கள் இறந்து விட்டனர். அதே படகில் இருந்த மற்றவர்கள் காயங்களுடன் உயிர் தப்பி, கரை திரும்பிவிட்டனர். அப்படி, தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் வந்த படகில் 'மரியா' என்று எழுதப்பட்டிருந்தது.
- ஏப்ரல் 11 ஆம் தேதி - இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை கடலில் ரோந்து சென்றபோது, தூத்துக்குடி அருகே தமிழக கடல் பரப்பில் 6 ஈழத் தமிழர்களையும், 6 தமிழக மீனவர்களையும், கைது செய்து அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்தனர். மீன் பிடிக்க வந்தபோது, படகு பழுதாகி, கடலில் தவித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் மீனவர்கள், தங்களிடம் உதவி கேட்டபோது, அவர்களைக் காப்பாற்றி அழைத்து வந்ததாக தமிழக மீனவர்கள் தெரிவித்தனர். ஈழத் தமிழ் மீனவர்களின் படகில் 'மரியா' என்ற பெயர் காணப்பட்டதால், ஒரு சந்தேகம் எழுந்தது. இதே பெயர் எழுதப்பட்ட படகில் வந்தவர்கள்தான் ஏற்கனவே தமிழக மீனவர்கள் 5 பேரை சுட்டுக் கொன்றதாக, அவர்களுடன் சென்று உயிர் தப்பி வந்த மீனவர்கள் கூறியிருந்தனர்.
- இந்த நிலையில் - தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அதிகாரி ஜான் நிக்கல்சன், இவர்களிடம் விசாரணை நடத்தினார். ஏற்கனவே நடந்த துப்பாக்கிச் சூட்டில், உயிர் பிழைத்து கரை திரும்பிய கன்யாகுமரி மீனவர்கள், தூத்தக்குடிக்கு அழைக்கப்பட்டனர். இப்போது மரியா படகில் பிடிப்பட்டுள்ளவர்களைக் காட்டி, "இவர்கள்தான், உங்களைச் சுட்டவர்களா ?" என்று கேட்டபோது, தமிழக மீனவர்கள் அவர்களைப் பார்த்து - "எங்களைச் சுட்டது இவர்கள் இல்லை" என்று கூறிவிட்டனர். அத்தோடு இந்த 'மரியா' படகும் - எங்களைச் சுட்டவர்கள் வந்த படகு அல்ல என்றும் தெரிவித்தனர். பிடிபட்ட ஈழத் தமிழ் மீனவர்களின் பெயர், ஊர்களோடு பத்திகைகளுக்கு செய்தி தரப்பட்டது. தமிழ்நாட்டு மீனவர்களை சுட்டது, பிடிபட்ட, ஈழத் தமிழ் மீனவர்கள் அல்ல என்று காவல்துறை திட்டவட்டமாக அறிவித்தது. கைதானவர்களிட மிருந்து எந்த ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை. எல்லை தாண்டி - தமிழ் நாட்டுக்குள் நுழைந்தார்கள் என்பது மட்டுமே குற்றச்சாட்டு. அந்த வழக்கைப் பதிவு செய்து, சிறையில் அடைக்கப்பட்டார்கள்; பிரச்சினை முடிந்து விட்டது.

இதற்குப் பிறகு நடந்த சம்பவங்கள்தான் பல்வேறு சந்தேகங்களை எழுப்புகின்றன. ஏற்கனவே தமிழகத்தில் முகாமிட்டு, 'கூட்டு ரோந்துக்கு' உரிய அரசியல் சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு, திட்டமிட்டு செயல்பட்டு வரும் மத்திய உளவுத் துறை, தமிழ் ஈழப் போராளிகள் மீது பழி போட்டு, தமிழ் நாட்டுக்கும், ஈழப் போராளிகளுக்குமிடையே முரண்பாட்டை கூர்மைப்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கத் தொடங்கின. இப்படிக் கருதுவதற்கு வலுவான காரணங்களும் இருக்கின்றன.

தமிழக மீனவர்கள் - நடுக்கடலில் சுடப்பட்டது மார்ச் 29, 2007. அடுத்த நாளே - அதாவது மார்ச் 30 ஆம் தேதியே சிறிலங்கா அரசு, தமது கப்பல்படை, சுடவில்லை என்று மறுக்கிறது. அது மட்டுமல்ல, இதில் "விடுதலை புலிகளுக்கு தொடர்பு இருக்கலாம்" என்றும், பழியை விடுதலைப்புலிகள் மீது போடுகிறது. (The Srilanka Government said the complicity regarding the incident must be attributed to the LTTE, March 31, 'Daily Mirror')

சிறீலங்கா அரசு மறுப்பு வெளியிட்ட அதே நாளில், அதே குரலை அப்படியே எதிரொலிக்கிறார். இந்தியாவினுடைய கப்பல் படை தலைமை அதிகாரி அட்மிரல் சுரேஷ் மேத்தா, அதே மார்ச் 31-ல் அவரது பேட்டியை 'இந்து' நாளேடு வெளியிடுகிறது. "இதில் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு உண்டு என்ற கருத்தை புறக்கணித்துவிட முடியாது" என்கிறார், இந்திய கப்பல்படையின் தலைமை அதிகாரி. இன்னும் ஒரு படி மேலே போய், தமிழ்நாடு அரசையும் குற்றம்சாட்டுகிறார். "தமிழ்நாட்டு மீனவர்கள், இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்று மீன் பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகள் பற்றி, தமிழக மீனவர்களுக்கு போதுமான எச்சரிக்கை வழங்க, தமிழ்நாடு அரசு தவறிவிட்டது" என்றும் தமிழக அரசைக் குற்றம் சாட்டினார்.

மீனவர்கள் சுடப்பட்டது மார்ச் 29. உடனே - ஒரே நாள் இடைவெளியில் எந்த விசாரணையுமின்றி விடுதலைப்புலிகள் மீது, இந்திய கப்பல்படை அதிகாரி எப்படிப் பழி போட முடிகிறது ? இப்படி யூகத்தின் அடிப்படையில் ஒரு குற்றச்சாட்டை, பொறுப்புமிக்க அதிகாரி ஏன் பிரச்சாரகாரரைப் போல் பரப்ப வேண்டும் ? சிறீலங்கா அரசின் குரலை அப்படியே ஏன் எதிரொலிக்க வேண்டும் ? தமிழக அரசையும் சேர்த்து, ஏன் குற்றக் கூண்டில் நிறுத்த வேண்டும் ? ஆக, இதற்குப் பின்னால், திட்டமிட்ட உள்நோக்கம் ஒன்று இருக்கிறது என்ற சந்தேகம் எழத் தானே செய்கிறது ?

இந்த நிலையில், அடுத்த நாளே - ஏப். முதல் தேதியன்று, விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் இளந்திரையன், இது திட்டமிட்ட விசமப் பிரச்சாரம் என்று மறுத்து விடுகிறார்.

"தாயகத் தமிழ் உறவுகளும், ஈழத் தமிழர்களும் இணைந்து நல் உறவைப் பேணுவதையும், தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்கள் மீதான அனுதாப அலைகள் உருவாவதையும் விரும்பாத மற்றும் கொச்சைப்படுத்த வேண்டும் என்கிற தீய சக்திகளுடன் இப்படுகொலைகளை மூடி மறைக்க வேண்டும் என்று கருதுகிற சிறீலங்கா அரசும் இணைந்த இச்சம்பவத்தில் எங்களைத் தொடர்புபடுத்தி மிக மோசமான விசமப் பிரச்சாரத்தை செய்து வருகின்றனர். தாய்த் தமிழக உறவுகளும், ஈழத் தமிழ் உறவுகளும் ஒரே ரத்தமாக இருப்பதால் ஒன்றாக இணைந்து நம்முடைய உறவைப் பேணுவதன் மூலம் இத்தகைய தீய சக்திகளுக்கும் நாடு இனபேதமின்றி தமிழ் மக்களைக் குறி வைத்துப் படுகொலை செய்கிற சிறீலங்கா அரசுக்கும் பதிலடி கொடுக்க வேண்டும்"

- என்று அந்த அறிக்கை கூறியது. ஈழத் தமிழர்களுக்கும், தமிழகத் தமிழர்களுக்கும் இடையே நல்லுறவை விரும்பாத தீய சக்திகள், சிறீலங்கா அரசோடு இணைந்து நடத்தும் சதி என்கிறது அந்த அறிக்கை !

இதற்குப் பிறகு - இரண்டு வாரங்கள் ஓடுகின்றன. மீண்டும் ஏப்.17 ஆம் தேதி சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகம், கடலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கும், இலங்கை அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மீண்டும் அறிக்கை விட்டது. அடுத்த நாள் - ஏப். 18 ஆம் தேதி இலங்கை கடற்படை அதிகாரி, கமாண்டி டி.கே.பி. தசநாய்க்கே என்பவர் கொழும்பில் பத்திரிகையாளர்களைக் கூட்டி, தமிழக மீனவர்களை சுட்டது விடுதலைப்புலிகள்தான் என்று கூறினார். அடுத்த இரண்டு நாட்களிலேயே தமிழ் நாட்டில், உளவுத் துறை தீவிரமாக செயல்படத் துவங்குகிறது. ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டு, மீனவர்கள் தான் என்று உறுதி செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட, ஈழத் தமிழ்

3 ஆம் பக்கம்

# மாயாவதியின் ஆபத்தான கூட்டணி

## அமைச்சரவையில் 7 பார்ப்பனர்கள்

உ.பி. முதல்வராக தலித் சமுதாயத்தைச் சார்ந்த மாயாவதி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரிய வரவேற்கப்பட வேண்டிய செய்தியாகும். ஆனால், மனுவாதிகளை எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்து வந்த பகுஜன் சமாஜ் கட்சி, இப்போது மனுவாதிகளுக்கு வலிமையான அதிகாரத்தை வழங்கியிருக்கிறது என்பது வேதனைக் குரியதாகும். 'தலித் - பார்ப்பனர்' கூட்டணியை உருவாக்கிடும் நோக்கத்தில் உ.பி. முழுதும் பார்ப்பனர்களுக்கான மாநாட்டை மாயாவதியே நடத்தி பார்ப்பனர்களின் பாராட்டுகளைப் பெற்றார்.

403 உறுப்பினர்களைக் கொண்ட உ.பி. சட்டமன்றத் தேர்தலில் தனது கட்சியின் சார்பாக 86 பார்ப்பனர்கள் உட்பட, 139 உயர்சாதியினரைப் போட்டியிட வைத்தார். 86 பார்ப்பனர்களில் 56 பேர் இப்போது வெற்றி பெற்றுள்ளனர். 38 தாக்கூர்களும், 14 வைசியர்களும் ஒரு காயஸ்தாவும் நிறுத்தப்பட்டனர். 403 இடங்களில் - 206 இடங்களில் வென்று தனி பெரும்பான்மையுடன் மாயாவதி ஆட்சி அமைத்துள்ளார். அவர் அமைத்துள்ள அமைச்சரவையில், 7 பார்ப்பனர்கள் இடம் பெற்றுள்ளனர். 6 தாக்கூர்களுக்கும், 5 முஸ்லீம் களுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. வெற்றி பெற்ற தலித் வேட்பாளர்களை விட பார்ப்பன வேட்பாளர்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற மாயாவதி உயர்சாதியில் உள்ள ஏழைகளுக்கு பொருளாதார அடிப்படை யில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று குரல் கொடுத்துள்ளார். பார்ப்பனரோடு கைகோர்த்து நிற்கும் மாயாவதி மனு எதிர்ப்பு ஆட்சி நடத்தப் போகிறாரா ? அல்லது மனுவாதிகளுக்கான ஆட்சி நடத்தப் போகிறாரா ? இதுவே இப்போது எழுந்துள்ள கேள்வி.

# உண்மைகள் நீண்டகாலம் உறங்காது

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

மீனவர்களை மீண்டும் தமிழக காவல் துறையின் உளவுப் பிரிவு சிறையிலிருந்து வெளியே எடுத்து விசாரணை நடத்துகிறது. ஏப்.20 ஆம் தேதி காவல்துறை அவர்களை விசாரணைக்கு எடுக்கிறது. அடுத்த இரு நாட்களில் ஏப்.23 இல் உளவுப் பிரிவு, விசாரணைக்கு எடுக்கிறது. அடுத்த நான்கு நாட்களில் ஏப்.27-ல் தமிழக காவல்துறை தலைவர் முகர்ஜி தமிழக மீனவர்களை சுட்டது விடுதலைப்புலிகள் தான் என்று அறிக்கை விடுகிறார். தமிழக முதலமைச்சரும் இதே அறிக்கையை சட்டசபையில் உறுதி செய்கிறார். மீண்டும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இதை மறுத்துள்ளனர்.

உளவு நிறுவனமும், சிங்கள அரசும் இணைந்து தமிழ்நாட்டு மக்களிடமிருந்து போராளிகளை தனிமைப்படுத்த தயாரித்த திட்டம் - தமிழக காவல்துறை வழியாக, அமுலாக்கப்பட்டு, அதையே தமிழக முதல்வரின் அறிக்கையாகவும், சட்டசபை யில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சந்தேகத்திற்கு வலிமையான காரணங்கள் இருக்கின்றன.

தமிழ்நாட்டு மீனவர்களை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்ல வேண்டும் என்பதற்கான காரணங்கள் ஏதுமில்லை. சிங்கள மீனவர்கள்களையே சுட்டுக் கொல்லாத விடுதலைப்புலிகள், தமிழக மீனவர்களையா சுட்டுக் கொல்லப் போகிறார்கள் ?

"கடந்த காலங்களில் அப்படி எந்தத் தொந்தரவும் புலிகளிடமிருந்து வந்தது இல்லை என்பதால், இதனை நம்புவதற்கு சிரமமாக இருக்கிறது. நான் இது பற்றி டி.ஜி.பி., கியுபிராஞ்ச் எஸ்.பி. ஆகியோரிடம் பேசினேன். உயர் அதிகாரிகள் அறுதி யிட்டுச் சொல்லும் போது நம்பித்தான் ஆக வேண்டியுள்ளது" என்கிறார் தெற்காசிய மீனவ தோழமை அமைப்பு அமைப்பாளர் சர்ச்சில்! (பேட்டி - குமுதம் ரிப் போர்ட்டர்)

ஈழப் போராளிகளான விடுதலைப் புலி களுக்கும், தமிழ்நாடு மீனவர்களுக்கும் உள்ள நெருக்கமான உறவை, ஈழத் தமிழ் மீனவரான நாதன் தாமஸ் என்பவர் இணையதளம் ஒன்றில் (www.yarl.com) எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

"தமிழக மீனவர்களை சுட்டது விடுதலைப்புலிகள்தான் என்று கூறிய தமிழக காவல்துறை அதிகாரியை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நான் இரணை தீவு கடல் தொழில் சங்கத்துக்கு தலைவராக இருந்தபோது நடந்த சம்பவத்தைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்தியத் தமிழ் மீனவர்கள் எமது உடன் பிறப்புகள். 1990 ஆம் ஆண்டு ஆடி மாதம் - இரணைத் தீவு கடற்கரையில் தமிழ்நாடு மீனவர்களின் 250 படகுகள் தனித்து நின்றன. அவற்றை சிறீலங்கா அரசு தங்களது வான்கலங்களைக் கொண்டு (விமானங்கள்) அழிக்க முயற்சித்தது. அப்போது - எமது கிராமத்தில்தான், ஆயிரக்கணக்கான இந்தியத் தமிழ் மீனவர்களுக்கு அடைக்கலம் தந்து காப் பாற்றினோம். அவர்களை விடுதலைப்புலி களின் பாதுகாப்போடு தமிழகத்துக்கு பத்திரமாக அனுப்பி வைத்தோம். அது மட்டுமல்ல, அச்சம்பவத்தின்போது, இலங்கை விமானப் படை தாக்குதலால் பல படகுகள் சேதமாக்கப்பட்டன. விடுதலைப் புலிகளின் உதவியால் - அப்படகுகளை சரி செய்து மீண்டும் மீனவர்களிடம் ஒப்படைத் தோம். காயமடைந்த 205க்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு விடுதலைப்புலிகள் உதவியோடு, சிகிச்சைகள் வழங்கினோம். அந்த உறவு தொடர்ந்து நீடித்தது.

மட்டக்களப்பு, யாழ்ப்பாண மாவட்டங் களின் கிராமங்களிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக சென்று எமது மக்களை, நாங்கள் இங்கு செய்த உதவிக்காக, அங்கே இந்திய மீனவர்கள், உணவு, தேவைக்கான பொருள்களை வழங்கி, நன்றாகக் கவனித்தார்கள். எங்களுக்குள் உள்ள இந்த உறவை, தமிழக காவல்துறை அதிகாரி அறிவாரா ? எதற்காக, இப்போது, உண்மைகளை தலைகீழாகப் புரட்டி கூறுகிறார் ? இதனால் உண்மைகளைப் புதைத்து விட்டோம் என்றோ சிங்களவன் தப்பி விட்டான் என்றோ அவர் தப்பாகக் கருதி விடக் கூடாது. அப்படி கருதினால் அது முட்டாள்தனம். எங்களது உறவுகளை சிங்கத்துக்கு (சிங்களருக்கு) காவு கொடுக்க நினைக்கிறாரா, அந்த அதிகாரி ? - என்று, தனது உள்ளக் குமுறலைக் கொட்டியிருக்கிறார் அந்த மீனவர்! உண்மைகள் நீண்டகாலம் உறங்காது. அவைகள் விழித்தெழும்போது பொய்மைகள் வெளிச்சத்துக்கு வரவே செய்யும்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 17.05.2007

# திராவிட இயக்கக் கொள்கைகளை பட்டி தொட்டிகளில் பரப்பியவர்

## கோபியில் பு.கா. பழனியப்பன் படத் திறப்பில் கழகத் தலைவர் உரை

"தமிழ் மொழிக்கும், சமுதாயத்திற்கும் எண்ணற்ற சான்றோர்கள் தமது இன்னுயிரை ஈந்து வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களது வரலாற்றையும், போராட்டங்களையும் இக்கால இளைஞர்கள் அறிந்து கொண்டால், தமிழ்நாடு மேம்பட வழி பிறக்கும் - என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.

11.2.2007 அன்று மாலை கோபி தாய்த்தமிழ்ப் பள்ளியில் நடைபெற்ற, மொழிப்போர் தியாகியும், இறுதிவரை பெரியாரியல்வாதியாகவே வாழ்ந்து மறைந்தவருமான பு.கா. பழனியப்பன் அவர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் கூட்டம் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது...

"ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு மறைந்த தியாகிகளை வருங்கால தலைமுறை நினைவு கூர வேண்டும். சமுதாய சீர்திருத்த வரலாற்றில் திராவிட இயக்கம் மகத்தான பங்காற்றியிருக்கிறது. இந்தி எதிர்ப்பு உணர்வுகளை வளர்த்து, இராமாயணம், மகாபாரதம் உள்ளிட்ட புராணங்களை எல்லாம் விமர்சனம் செய்து மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரம் செய்வதில், பல தலைவர்கள் சமரசம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். தோழர் பு.கா. பழனியப்பன் அவர்களும் அரசியலில் பல்வேறு நிலைகளை மேற் கொண்டாலும் ஆயிரக்கணக்கான கம்பராமாயணம், சிலப்பதிகாரம் வரிகளை மேற்கோள் காட்டி திறம்படப் பேசும் வித்தகராகத் திகழ்ந்தார். திராவிட இயக்கக் கொள்கைகளை பட்டிதொட்டியெல்லாம் பரப்பிய அவர், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் - மாணவராக இருந்தபோது கலந்து கொண்டதால், பார்ப்பன ஆசிரியர் ஒருவரால் தோல்வி யடையச் செய்து, பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டார். கொள்கைக்காக இளம் பருவத்திலேயே பள்ளி வாழ்க்கையை இழந்தாலும், மரணம் தொடும் வரையில் படித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு ஆண்டும் அவரது சொந்தக் கிராமமான வேட்டைக்காரன் கோயிலில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவில் கழகக் கொடியை கருப்புச் சட்டையுடன் வந்து ஏற்றி வைப்பார். அவர் இறுதியாகக் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சி நம் கழகக் கொடியேற்றியதுதான் என்பது பெருமிதத்துடன் கூறத்தக்கதாகும்.

திராவிட இயக்க அரசியல் கட்சியில் தலைவர்களும், உணர்வாளர்களும், கொள்கை யுணர்வுடன் வாழ்ந்து மறைந்ததற்கு நிறைய சான்றுகள் கூற முடியும். தி.மு.க. மாநாடுகளில் அதன் பகுத்தறிவு, வடவர் ஆதிக்க எதிர்ப்பு, மாநில சுயாட்சிக் கொள்கைகளை தொண்டர் களுக்குத் தெரிவிப்பதற்காகவே பல்வேறு தலைப்புகளில் தலைசிறந்த பேச்சாளர்களின் உரைகள் இடம் பெறும். தி.மு.க.வைச் சேர்ந்த விருத்தாசலம் ராசு என்பவர், "திராவிட நாடு பெற்றால்தான் திருமணம் செய்வேன்" என்று இறுதிவரை திருமணமே செய்யாமல் இருந்தார். அதே போல நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், அ.தி.மு.க.வில் இருந்தாலும், இறுதிவரை தனது பகுத்தறிவுக் கருத்துக்களை தனக்கே உரிய நகைச்சுவை ததும்பும் பேச்சுக்களாக ஒலித்துக் கொண்டே இருந்தார்.

எனவே, கொள்கைகளை இடைவிடாது பின்பற்றும் இயக்கங்களும், அந்த இயக்கங்களின் தளபதிகளாகத் திகழும் தலைவர்களும் தான் மக்களுக்கு நீடித்த வெற்றியை ஈட்டித் தர முடியும். அப்படிப்பட்ட தளபதிகளில் ஒருவரான மொழிப்போர் தியாகி பு.கா. பழனியப்பன் அவர்களை நினைவு கூர்ந்து சமுதாயக் கடமையாற்றுவோம்" - இவ்வாறு கழகத் தலைவர் உரை நிகழ்த்தினார். நினைவேந்தல் நிகழ்ச்சியில், பு.கா. பழனியப்பன் உருவப் படத்தை கோபி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கோ.ப. வெங்கிடு திறந்து வைத்தார்.

முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலரும் கழக ஆர்வலருமான கனகராசு, தி.மு.க. பேச்சாளர் திவாகர் கைவல்யம், ம.தி.மு.க. மாவட்டத் துணைச் செயலாளர் மா.கந்தசாமி, காங்கிரஸ் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர் கே.எஸ். பச்சையப்பன், கோபி நகர மன்றத் தலைவர் ரேவதி தேவி (அ.தி.மு.க.), பேராசிரியர் அரங்கசாமி, புலவர் எழில்வேலன், தி.மு.க. மாவட்ட இலக்கிய அணித் தலைவர் வெ.குமணன், பெரியார் தி.க. நிர்வாகிகள் கா.சு.வேலுச்சாமி, சிதம்பரம், நாத்திக ஜோதி, நாகப்பன், செயராமன் உள்ளிட்டோரும், தி.க. பொறுப்பாளர்களும் திரளாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மூன்று திராவிட அரசியல் கட்சிகளிலும் இருந்த பு.கா. பழனியப்பன் நினைவேந்தல் கூட்டத்தை அவர் பகுத்தறிவாளர் என்பதன் அடிப்படையில் கழகம் தான் முன்னின்று நடத்தியது குறிப்பிடத்தக்கது.

**– கதிர்**

# பெரியார் சொன்ன குட்டிக்கதை

சென்னை தியாகராயநகரிலுள்ள உஸ்மான் சாலை, நீதிக்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த முகமது உஸ்மான் நினைவாக வைக்கப்பட்டது. பார்ப்பனர்கள் நிரம்பியிருக்கிற மாம்பலத்திற்கு பார்ப்பன எதிர்ப்பாளரான தியாகராயர் பெயரை வைத்ததும், ஒரு சாலைக்கு உஸ்மான் சாலை என்று பெயர் வைத்ததும் சாதாரண விஷயமல்ல. அது பெரிய கலகம். அதனால்தான் பார்ப்பனர்கள் திட்டமிட்டு தியாகராயர் நகரை, டி.நகராக மாற்றிவிட்டனர்.

1929 ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டப்பேரவையில் சத்தியமூர்த்தி என்கிற பார்ப்பனர், நீதிக்கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.முகமது உஸ்மானை பார்த்து, "உமக்கு சீனிவாச அய்யங்காருடைய கால் பூட்சு கழற்ற யோக்கியதை உண்டா ?" என்று கேட்டிருக்கிறார். அந்த மட்டமான பேச்சுக்கு சட்டப்பேரவையில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. உடனே சத்தியமூர்த்தி தான் பேசியதை வாபஸ் பெற்றுக் கொண்டார். சத்தியமூர்த்தியை கண்டித்து ஒரு குட்டிக் கதையின் மூலமாக பெரியார் குடியரசில் எழுதுகிறார், கதை இதுதான்:

"ஒரு பெரியவர் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஓர் அயோக்கியன் போகும்போதும் வரும்போதும் தனது கால் அவர் மீது படும்படி ஆணவமாக நடப்பதும், உடனே தெரியாமல் கால்பட்டுவிட்டது மன்னிக்கவேண்டும் என்று சொல்லி கால்பட்ட இடத்தை தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்ளவதுமாயிருந்தான். அப்பெரியவர் பார்த்தார், இவன் ஆணவத்தையும் மானம் கெட்ட தன்மையையும் பார்த்து, இவனுக்குச் சரியானபடி புத்தி கற்பிக்க எண்ணி, அவன் உட்கார்ந்திருக்கும்போது பிடரியில் ஒரு சரியான உதைக் கொடுத்துக் கழுத்து முறியும்படி செய்துவிட்டுத், 'தெரியாமல் கால்பட்டுவிட்டது' என்று சொல்லிக் கையால் அவன் கழுத்தைத் தொட்டு இரு கண்களிலும் நன்றாய் ஒத்திக் கொண்டாராம். உடனே உதைப்பட்டவனுக்கு புத்தி வந்து, 'என் கால் அத்தனைமுறை பட்டதற்கும் தங்கள் கால் ஒரு முறை பலமாய் பட்டதற்கும் கணக்குச் சரியாய்விட்டது. ஆதலால் தயவு செய்து மீதி எண்ணிக்கைகளை மறந்துவிடுங்கள்' என்று கேட்டுக் கொண்டானாம். அதைப்போல் சத்தியமூர்த்தி போன்றவர்கள் விழுந்தெழுந்தால் ஏதாவது பேசுவதும், பிறகு மன்னிப்புக் கேட்பதும் கர்வமாய் போய்விட்டது".

இதுதான் பெரியார் சொன்னக் கதை. **பெரியாரே கழுத்து முறியும்படி அடிக்கச் சொல்லியிருக்கார்.** பெரியார் சொன்னதை செய்பவர்களுக்குப் பேருதானே பெரியாரிஸ்ட்.

**பல்லடம் நாத்திகர் விழாவில் தோழர் மதிமாறன் உரையிலிருந்து...**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# கலைஞர் பிறப்பித்த அடக்குமுறைச் சட்டம் தகர்ந்தது!

முதல் பக்கத் தொடர்ச்சி

அருகிலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து கோவை பெரியார் படிப்பகத்தில் அனைவருக்கும் சிறப்பான வரவேற்புடன் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. வரவேற்பில் கழக ஆட்சிக்குழு உறுப்பினர் ஆறுச்சாமி, அலுவலகப் பொறுப்பாளர் கதிரவன், மாநகரச் செயலாளர் கோபால், அமைப்பாளர் சோமசுந்தரம், பொருளாளர் மணிமாறன், பெரியநாயக்கன் பாளையம் ஒன்றிய அமைப்பாளர் சீனிவாசன், மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் அங்ககுமார், கோவை தெற்கு மாவட்ட அமைப்பாளர் வி. குமார், பல்லடம் நகரத் தலைவர் விஜயன், திருமூர்த்தி, திருப்பூர் நகரத் தலைவர் அகிலன், முகில், ராசு, மகளிரணியைச் சேர்ந்த ருக்மணி, சிவகாமி, வழக்குரைஞர்கள் செல்வம், சம்பத்குமார், ஆதித் தமிழர் பேரவை மாநிலப் பொதுச் செயலாளர் வழக்குரைஞர் நீலவேந்தன், மாவட்டச் செயலாளர் வெண்மணி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்து, ஈரோடு மாவட்டத் தலைவர் நாத்திக ஜோதி தலைமையில் வருகை தந்திருந்த ஈரோடு மாவட்டத் தோழர்கள் விடுதலையான தோழர்களை ஏழுக்கும் மேற்பட்ட வாகனங்கள் புடைசூழ வரவேற்று அழைத்து வந்தனர். அவர்களுக்கு பெருந்துறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரைட் சரவணன் தோழர்களுக்கு சிறப்பான உணவு ஏற்பாடுகள் செய்திருந்தார்.

பத்து மாருதி மற்றும் டாட்டா சுமோ ஊர்திகள், பத்துக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் அணி வகுக்க, தோழர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். திங்களூர் அருகிலுள்ள கூதாம்பி என்னும் சின்னஞ்சிறு கிராமத்தைச் சேர்ந்த சிறைத் தோழர் அர்ச்சுனனின் இல்லத்திற்கு ஊர்வலம் சென்று அவரது தாயார் மற்றும் குடும்பத்தாரிடம் நலம் விசாரிக்கப்பட்டது.

பிறகு, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவனின் சொந்த ஊரான கொளப்பளூர் முகப்பில் அதிர்வேட்டுகள் முழங்க வரவேற்பளிக்கப்பட்டது. தோழர்களும், பொது மக்களும், முக்கிய பிரமுகர்களும் ஊர்வலமாக நடந்து வந்து பெரியார் படிப்பகம் சேர்ந்தனர். அங்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டது.

### அரசியல் கட்சியினர் வரவேற்பு

வட்டார காங்கிரஸ் பிரதிநிதி ரத்னம் பழனிசாமி தோழர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். ம.தி.மு.க. ஒன்றியப் பிரதிநிதி முருகேசன், அ.தி.மு.க. முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் கே.சி.மகாதேவன் ஆகியோர் தோழர்களை வரவேற்றனர்.

நீண்ட ஊர்தி ஊர்வலமாக கோபி நகரில் நுழைந்த தோழர்கள், கோபி பேருந்து நிலையத்திலிருந்து, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் இல்லம் வரை ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் நடந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். அதிர்வேட்டுகளும், பட்டாசுகளும் வெடிக்கப்பட்டன.

காங்கிரஸ் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர், கே.எஸ்.பச்சையப்பன், தமிழ் வட்ட அமைப்பாளர் புலவர் எழில்வேலன் ஆகியோர் தோழர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

தேனீர் விருந்துக்குப் பின்பு 37 கி.மீ. தொலைவிலுள்ள ஈரோட்டுக்கு வாகன ஊர்வலம் சென்றது. இரவு 7 மணிக்கு ஈரோட்டை அடைந்த தோழர்கள், ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு அதிர்வேட்டுகள் முழங்க, வாழ்த்து முழக்கங்கள் எதிரொலிக்க மாலை அணிவித்தனர். ஏராளமான பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சி நிருபர்களும் குவிந்திருந்தனர். மேலும் புறப்பட்ட ஊர்வலம், சிறைத் தோழர் முருகானந்தம், மாவட்ட அமைப்பாளர் குமரகுரு ஆகியோரின் இல்லங்களுக்குச் சென்று குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடப்பட்டது. ஈரோடு அ.தி.மு.க. கவுன்சிலரும், சிறந்த பெரியார் பற்றாளருமான தங்கராசு 100க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு தேனீர் விருந்தளித்துக் கவுரவித்தார்.

ஈரோடு, கோவை மாவட்டங்களில் பெரும் எழுச்சியை ஏற்படுத்திய இந்த ஊர்வலத்தில் ஈரோடு மாவட்டத் தோழர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் சதுமுகை பழனிச்சாமி, சண்முகம், புதுரோடு சிதம்பரம், மாநில நிதிக்குழு உறுப்பினர் பொன்னுசாமி, மாவட்டத் துணைத் தலைவர் வேலுச்சாமி, கோபி நகரத் தலைவர் நாகப்பன், இளைஞரணியைச் சேர்ந்த தாமோதரன், செல்வக்குமார், கருப்பண்ணன், ப.க. மாவட்டத் தலைவர் இரா. காளியண்ணன், செயலர் நேதா, ஆசை உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி : 'கதிர்'**

### திருச்சியில்

3.4.07 அன்று மாலை மூன்று மணிக்கு திருச்சி மத்திய சிறையிலிருந்து 5 மாதம் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறைபடுத்தப்பட்ட இரா. லட்சுமணன், துரை. தாமோதரன் விடுதலையாகி வெளியே வந்தனர். சிறை வாசலில் வரவேற்க பெரம்பலூர், திருச்சி, கரூர், திண்டுக்கல், மதுரை தோழர்கள் காலை முதல் காத்திருந்தனர். விடுதலையான தோழர்கள் சிறிதும் சலனமில்லாமல் கொள்கை பிடிப்போடு சிறை வாசலில் கோஷமிட்டனர். விடுதலையான தோழர்களை பொன்னாடை அணிவித்து வரவேற்றனர். ஐந்து கார்கள் அணி வகிக்க திருச்சியில் உள்ள பெரியார் சிலை மற்றும் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தோழர்களை பிரமதேசம் ஊராட்சி மன்றத் தலைவர் சீனிவாசன், லாடபுரம் ரமேஷ், சாக்ரட்டீஸ், துறைமங்கலம் ஜெய்சங்கர், ரோச், செங்குணம் செல்வகுமார், அய்யாக்கண்ணு உள்ளிட்ட பல தோழர்கள் வரவேற்றனர். பெரம்பலூர் வந்த சேர்ந்த தோழர்களை நுழைவ வாயிலான துறைமங்கலத்தில் நூற்றுக்கணக்கான தோழர்களும் பொது மக்களும் வரவேற்றனர். தங்கவேல் ஆசிரியர் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். சரவெடி வெடிக்கப்பட்டது. பெரம்பலூர் பெரியார் சிலைக்கு முன்பு நூற்றுக்கணக்கான தோழர்கள் கூடினர். சாலையில் சென்ற ஆதரவாளர்களும், தோழர்களும் இலட்சுமணன், தாமோதரனை கண்டதும் அருகில் வந்து பாராட்டி வரவேற்றனர். பெரியார்சிலைக்கு மாலை அணிவித்ததும் பாரதிதாசன் இலக்கியப் பேரவை செயலாளர் ஓவியர் கி. முகுந்தன் சிறை மீண்ட தோழர்களுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி பாராட்டினார். தாமோதரன் சொந்த ஊரான லாடபுரத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தார். உறவினர்களும், தோழர்களும் கூடி நின்றனர். தோழர்கள் தாமோதரனை ஊர்வலமாக அழைத்துச் சென்று வீட்டில்



விட்டனர். தாமோதரன் துணைவியார் வினோதினி ஐந்து மாத காலமாக கணவர் சிறைபட்டதை எண்ணி வருந்தினாலும், தாமோதரனுடைய துணிவையும் தியாகத்தையும் தோழர்கள் பாராட்டியதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து தாமோதரனுக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார். தோழர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டது. பிறகு லட்சுமணன் ஊரான கிருட்டிணாபுரத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து வீட்டிற்குச் சென்ற லட்சுமணனை அவரது பாட்டி சின்னம்மாள் கைகளைப் பற்றிக் கொண்டு அழுதார். அழ வேண்டாம், நான் திருடிய குற்றத்திற்காக சிறைக்குச் செல்லவில்லை, நம்மை மனிதர்களாக்கிய பெரியார் கொள்கைக்காகத்தான் சிறைக்குப் போனேன் அழ வேண்டாம் என்று லட்சுமணன் தெரிவித்தார். பிறகு வெங்கலத்திலுள்ள அவரது வீட்டுக்கு கார்களில் அணிவகுக்க லட்சுமணன் சென்றார். அவரை அழைத்துச் சென்று தோழர் ரோச் மற்றும் தோழர்கள் பொன்னாடை போர்த்தி வீட்டில் விட்டனர். தோழர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டது. சிறை சென்று வந்த தோழர்களை நேரிலும் தொலைபேசியிலும் பல தோழர்கள் பாராட்டி வருகின்றனர். ●

## வழக்கு நிதி!

| | ரூபாய் |
|---|---|
| கடந்த இதழில் | 2,06,802 |
| கவிஞர் தமிழேந்தி | 200 |
| கவிஞர் காளமேகம் | 1,000 |
| மும்பையிலிருந்து முதல் தவணையாக (ரூ.3000) | |
| 1. ஆ. வெள்ளைத்துரை (ரேரோடு) | 100 |
| 2. ரா. பாலாஜி (ரேரோடு) | 100 |
| 3. அ. ஆறுமுகம் (ரேரோடு) | 100 |
| 4. எம்.ஏ. ஜலீல் (செம்பூர்) | 100 |
| 5. பி.ஏ. தாஸ் (ரேரோடு) | 100 |
| 6. கணேசன் (ரேரோடு) | 100 |
| 7. கரூர் இரா. பழனிசாமி (பாந்திரா) | 100 |
| 8. மா. கதிரவன் (சீத்தா கேம்ப்) | 300 |
| 9. இரா. மோகன் (செயலாளர், மும்பை அருந்ததியர் சங்கம்) | 500 |
| 10. கோ. சந்திரசேகரன் (மும்பை தலைவர் பி.எஸ்.பி.) | 500 |
| 11. நாடோடி தமிழன் (தாராவி) | 1,000 |
| | 2,11,002 |

**குறிப்பு: வழக்கு நிதி திரட்டல் இத்துடன் நிறுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

### நன்கொடை


'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு கவிஞர் தமிழேந்தி ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
பேசி: 2451 2857, 2461 6233

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 18th May 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் **www.puratchiperiyarmuzhakkam.com** திருவள்ளுவர் ஆண்டு 2038 மே 24, 2007 புரட்சி 4 முழக்கம் 76 **விலை : ரூ.2.50**

## உணர்ச்சிக் கடலில் தஞ்சை மாநாடு

# போராளிகளுக்கு விருது!







*மே 19, 2007 இல் தஞ்சையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய சாதி ஒழிப்பு மாநாடு உணர்ச்சிப் பிழம்பாக நடைபெற்றது. 1957 இல் சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் பங்கேற்ற போராளிகளுக்கு கழகம் விருதுகளை வழங்கி, பெருமையுற்றது. விருது வழங்கும் நிகழ்ச்சிப் பற்றிய செய்தித் தொகுப்பு:*

சாதி ஒழிப்புப் போரில் பங்கேற்றவர்களும், 50 ஆண்டுகள் கடந்தும் அவர்களை மறக்காமல் நினைவு கூர்ந்து - பெரியார் திராவிடர் கழகம், இங்கே மரியாதை செய்கிறதே, இதற்கு ஈடான மரியாதை எங்களுக்கு வேறு கிடையாது என்று, சட்ட எரிப்புப் போராளி, மூத்த பெரியார் தொண்டர் நாகை எஸ்.எஸ். பாட்சா, தஞ்சை மாநாட்டில் பலத்த கரவொலிக் கிடையே பெருமிதத் துடன் குறிப்பிட்டார். மாநாட்டு அரங்கை உணர்ச்சிப் பிழம்பாக்கிய சட்ட எரிப்புப் போராளிகளின் நினைவுப் பகிர்வு நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று, சட்ட எரிப்புப் போராட்டத்தில் 27வது வயதில் 9 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற நாகை பாட்சா ஆற்றிய உரை:



சட்ட எரிப்புப் போராட்டம் என்பது சாதி ஒழிப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். வயது வந்த அனைவருக்கும் ஓட்டுரிமை தரப்பட்டு, அவர்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளு மன்றம், நமக்கு அரசியல் சட்டத்தை உருவாக்கவில்லை. படித்தவர்கள் - பணக்காரர்கள் - பதவிக்காரர்கள் மட்டுமே வாக்களிக்கக்கூடிய பிரிட்டிஷாரின் நிர்வாகக் கட்டுப் பாட்டுக்குள் இருந்த அரசியல் நிர்ணய சபைதான் அரசியல் சட்டத்தை உருவாக்கியது. அதன் தலைவராக டாக்டர் அம்பேத்கர் இருந்தார். மற்றொரு உறுப்பினர் ஒரு முஸ்லீம். மற்ற உறுப்பினர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள். எனவே, இந்த அரசியல் சட்டத்தை அப்போதே பெரியார் மறுத்தார். இதனால் ஏற்பட்ட விளைவுகள் என்று பார்க்கும்போது - அரசியல் சட்டத்தின் ஜீவாதார உரிமை என்ற அடிப்படை உரிமைகளுக்குள் மதம், சாதி, கலாச்சாரம், பணம் ஆகிய வற்றுக்கான உரிமை கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இந்த அடிப்படை உரிமைகளுக்கு எதிராக, எந்த சட்டமன்றமும், சட்டம் இயற்ற முடியாது. அப்படி சட்டம் இயற்றப்படுமானால், அது பற்றி உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தன்னிச்சையாக முடிவு செய்யும் உரிமை, இந்த நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணத்துக்கு சொல்ல வேண்டுமானால்,

கலைஞர் அரசு, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் இயற்றியதை எதிர்த்து, உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அது நிலுவையில் உள்ளது. இதை முடிவுசெய்யும் உரிமை உச்சநீதிமன்றத்துக்கே இருக்கிறது. மதத்தையும், சாதியையும், அது தொடர்பான சட்டங்களையும் அரசியல் சட்டம் உறுதி செய்வதால், அந்தப் பிரிவுகளை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி பெரியார் அரசியல் சட்டத்தை எரிக்கச் சொன்னார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றங்களை நீதிமன்றங்கள் கட்டுப்படுத்துவதை எதிர்த்து பெரியார் ‘சுப்ரீம் கோர்ட் கண்டன நாள்’ கூட்டங்கள் நடத்தி நாட்டை ஆள்வது சட்டமன்றங்களா, நீதிமன்றங்களா என்று கேட்டார். அவ்வளவு துணிவோடு பேசக்கூடிய தலைவர் அவர் ஒருவர்தான். நமது பிரதமர் மன்மோகன் சிங், உச்சநீதிமன்றம் எல்லை தாண்டிடக் கூடாது என்றுதான் கூறினார். உடனே அதே மேடையில் இருந்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பாலகிருட்டிணன் நீதிமன்றம், சட்டப்படி தான் செயல்படுகிறது என்று பிரதமர் முகத்தில் அடிப்பது போல் பதில் கூறினார். ஆக, நீதிமன்றங்கள்தான் எதையும் நிர்ணயிக்கிறது என்றால், பார்ப்பனர்களிடம் தான் அதிகாரம் இருக்கிறது என்பதுதான் அதன் அர்த்தம். பெரியார் இப்படிக் கூறினார் என்று தான் என்னைப் போன்றவர்களால் பேச முடியுமே தவிர, பெரியார் பேசுவது போல் என்னால் பேச முடியாது. அந்தத் துணிவு எனக்குக் கிடையாது. சுப்ரீம் கோர்ட் கண்டன நாள் கூட்டம் நடத்திய பெரியார், “3 கோடி வாக்காளர்கள் ஓட்டளித்து, தங்களுக்கு வேண்டிய அரசாங்கத்தை தேர்வு செய்கிறார்கள். அந்த அரசாங்கம் செய்யும் சட்டத்தைத் தடுக்க உனக்கு ஏது உரிமை ?” என்று கேட்டார் பெரியார். இந்த எல்லை வரை நாமும் பேசலாம். ஆனால் பெரியார் அடுத்த எல்லைக்குப் போய் - “யார் இந்த நீதிபதிகள் ? பிச்சை எடுத்துப் படித்தவன், பந்தக்காலைப் பிடித்து மேலே வந்தவன்; இவர்கள்தான் இந்த நாட்டை ஆள்வதா ? இதற்கு ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும் என்று கேட்டார். இப்படிக் கேட்கும் துணிவு கொண்ட தலைவர் வேறு யாராவது உண்டா ? அவர்தான் பெரியார்; அவருக்கு தொண்டராக இருந்தோம் என்பதுதான் எங்களுக்கு உள்ள பெருமை. *(கைதட்டல்)*

சட்டத்தைக் கொளுத்தி, சிறைக்கு - இளையோர், முதியோர் வரை சென்றார்கள். மன்னிப்புக் கேட்கிறாயா, உடனே விடுதலை என்று சொல்லப்பட்டது. மன்னிப்புக் கேட்டால் சிறைத் தண்டனையை முழுமையாக அனுபவிக்கத் தேவையில்லை. விடுதலை கிடைக்கும் என்றார்கள். ஆனால், ஒருவர்கூட, மன்னிப்புக் கேட்டு வெளியே வரவில்லை. அதுதான் இந்தப் போராட்டத்தின் வெற்றி. *(கைதட்டல்)*

சாதியை ஒழிக்க போராடினோம்; ஆனால் சாதி ஒழியவில்லை. ஆனால் அதற்கான போராட்டத்தில் பங்கு பெற்றோம் என்பதுதான் எங்களுக்குள்ள மகிழ்ச்சி. 3000 ஆண்டுகளாக நிலை பெற்றுள்ள சாதியை 50 ஆண்டில் ஒழித்துவிட முடியாது. அண்ணா, திராவிடர் கழகப் பொதுச்செயலாளராக இருந்தபோது, உழைக்க வாருங்கள் ! பிழைக்க என்ன வழி என்று கேட்காதீர்கள் ! போராட வாருங்கள் ! அது எப்போது முடியும் என்று கேட்காதீர்கள் !” என்றார். இதே கருத்தை பெரியார், “உன் வீட்டுச் சோற்றைத் தின்றுவிட்டு என் வீட்டு வேலைக்கு வா” என்று அவரது மொழியில் சொன்னார். “உன்னுடைய குடும்ப சூழ்நிலை சரியாக இருந்தால் வா ! இல்லாவிட்டால் வரவேண்டாம். போராட்டத்துக்கு வராதவர்களை கட்சியில் இரண்டாம் பிரஜையாக நான் நினைப்பது கிடையாது” என்றார்.

2 ஆம் பக்கம்

# "பாராட்டுகளை எதிர்பார்த்து போராடவில்லை!"

*முதல் பக்கத் தொடர்ச்சி*

*இன்னொரு கேள்வி கேட்கப்படுகிறது. நான் பிறப்பால் ஒரு முஸ்லீம். "உனக்கு எதற்கு சாதி எதிர்ப்புப் போராட்டம் ?" என்று கேட்கப்படுகிறது. பெரியார் ராமன் பட எரிப்பு, விநாயகன் சிலை உடைப்புப் போராட்டங்களை நடத்தியபோது, முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் வர வேண்டாம் என்றார். ஆனால் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் அப்படிக் கூறவில்லை. திருச்சியிலேயே இருந்த பிரான்சிஸ் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும் போராட்டத்தில் கலந்து கொண்டார். எந்த மதத்தவராக இருந்தாலும், அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் அனைவரையும் கட்டுப்படுத்துகிறது. எனவே இந்த நாட்டின் குடிமகன் என்ற உரிமையில் சாதியைப் பாதுகாப்பதை அடிப்படை உரிமையாக்கும் அரசியல் சட்டப் பிரிவை எரிக்கும் போராட்டத்தில் பங்கேற்றேன்.*

*இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு தி.மு.க. அரசு உதவித் தொகை வழங்கக் கூடாதா என்று கேட்கப்படுகிறது. அந்த எதிர்பார்ப்பும் இருக்கிறது. அரசியல் சட்டத்தைப் பாதுகாப்பேன் என்று உறுதி ஏற்று, ஆட்சிக்கு வருகிறவர்களால், அரசியல் சட்டத்தை எரித்தவர்களுக்கு எப்படி, அரசு உதவித் தொகை வழங்க முடியும் ? நாம் எப்படி அதை எதிர்பார்க்க முடியும் ? ஈ.வெ.கி. சம்பத் அழகாகச் சொன்னார். பெரியாருடைய பேச்சு மூன்று மணி நேரம் நிகழுகிறது என்றால், "தாய்மார்களே, பெரியோர்களே, தோழர்களே" என்ற முதல் வாக்கியமும், "நான் சொல்வது உங்களுக்கு சரியானது என்று தோன்றினால், ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நிராகரித்து விடுங்கள்" என்ற இறுதி வாக்கியமும் தான், சட்டத்துக்கு உட்பட்டதாக இருக்கும். மற்ற மூன்று மணி நேர உரை முழுதும், அரசியல் சட்டத்துக்கு எதிராகவே இருக்கும் (பலத்த கைதட்டல்) என்று சம்பத் குறிப்பிட்டார். நாம், விலைவாசி உயர்வை எதிர்த்து புளி, மிளகாய் விலை ஏற்றத்தை எதிர்த்து சிறைக்குப் போகவில்லை. நாட்டின் அமைப்பையே தலைகீழாக மாற்றுவதற்காக போராட்டம் நடத்தி சிறை சென்றவர்கள். எனவே நாம் அரசு மான்யத்தை, உதவியை, போனசை எதிர்பார்க்கக் கூடாது. அந்த மரியாதையை எதிர்பார்த்து நாம் போராடவில்லை.*

*நானும், என்னுடைய தோழர்களும், உடல் தளர்ந்து, பிணி, மூப்பு என்று வந்து விட்டோம். நமக்குப் பிறகு, இந்தக் கொள்கைகளைத் திருப்பிச் சொல்ல யார் இருக்கப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். உங்களைப் பார்க்கும்போது நம்பிக்கை ஏற்படுகிறது. நான் உங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், பெரியார் கருத்தை, குழப்பாமல் நேரடியாகச் சொல்லுங்கள்.*

*நாம் போராட்டம் நடத்தி 50 ஆண்டுகளுக்குப் பிறகும், பெரியார் திராவிடர் கழகம், நம்மை நினைவு கூர்ந்து, நமக்கு மரியாதைசெய்ய இந்த மாநாட்டை நடத்துகிறதே; இந்த மரியாதையைவிட வேறு மரியாதை நமக்குத் தேவை இல்லை (கைதட்டல்) என்றார் எஸ்.எஸ். பாட்சா.*

## அந்தூர் பொன்னுச்சாமி



பெரம்பலூர் மாவட்டம் அந்தூர் பொன்னுச்சாமி - சட்டத்தை எரித்து 18 மாத சிறைத் தண்டனை பெற்றவர். அவர் தனது உரையில்:

*அன்பார்ந்த தமிழ்க்குல சான்றோர்களே ! சாதி ஒழிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஒரு பாராட்டு நடத்துவது போன்ற ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்கள். பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்த லெட்சுமணன் என்ற தோழர், என்னிடம் வந்து அழைத்தார். ஏற்கனவே எனக்கு அறிமுகமான தோழர். அவர் சொன்னார் என்பதற்காக வந்தேன். நான் செய்தது, போராட்டத்தில் கலந்து கொண்டது, ஒரு மனிதன் செய்ய வேண்டிய கடமையே தவிர, அதற்காக பாராட்டு, அது இது என்று வேண்டிய தில்லை ! (கைதட்டல்) ஒவ்வொரு மனிதனுக்குரிய கடமை. உலகத்திலே எந்த நாட்டிலும், இப்படி ஒரு சாதி இழிவு கிடையாது. மனிதனுக்குள் நிற பேதம் இருக்கலாம். ஆனால் சாதி என்பது இந்தியாவில் மட்டும் தான் இருக்கு. அப்படி பாராட்டுகளை எதிர்பார்த்து, நாங்க, அந்த நிகழ்ச்சியில, போராட்டத்துல கலந்து கொள்ளவில்லை. தஞ்சை அரண்மனைத் திடலில் தான் ஸ்பெஷல் மாநாடு நடந்தது. போராட்டத்துல கலந்துகிறவங்கள பெரியார் கைதூக்கச் சொன்னார். நிறைய பேர் கைதூக்கினாங்க. ஜெயிலுக்குப் போறவங்க மட்டும் கைதூக்குங்கன்னு பெரியார் அப்புறம் சொன்னார். ஏற்கனவே கைதூக்கி யவர்களிலே பாதியளவு குறைஞ்சிடுச்சு. அது ஒரு கடமை. ஆனால், அந்த சாதி இன்னும் ஒழியல; நீண்டுக்கிட்டே போகுது.* **இதுக்காக நாட்டில் பலாத்காரம் நடந்து, அழிவு ஏற்பட்டால் கூட, நான் ஆதரிக்கிறேன்!** *(கைதட்டல்) எவ்வளவோ அழிவு, பூகம்பத்தால, பலாத்காரத்தினால ஏற்படுதுல்ல ! இந்த நாட்டில், எல்லாக் கொடுமையையும்விட, இந்த சாதிக் கொடுமைதான் மிகக் கேடானது என்று நான் உணர்வு பூர்வமாகக் கருதுகிறேன். எனக்கு 18 மாதம் தண்டனை வழங்கினார்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டோம். ஆனாலும், அதை கஷ்டங்களாக நாங்க நினைக்கவில்லை. மேற் கொண்டு இன்னொரு வாய்ப்பு அதே போல் கிடைக்கு மென்றால், இறுதிக் காலத்தை, சிறையிலே கழிக்கலாம் என்றே ஆசைப்படுகிறேன் (கைதட்டல்) என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.*

## சோழபுரம் முருகேசன்

சட்டத்தை எரித்து, 9 மாத சிறைத் தண்டனை பெற்ற தஞ்சை மாவட்டம் சோழபுரம் முருகேசன், தனது உரையில்:

*"நாங்கள் சட்டத்தை எரித்த போது, சட்டத்தைக் கொளுத்தினால் விட்டுவிடுவார்கள் என்று கருதி, இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. பல மாதங்களுக்கு முன்பாகவே பெரியாரை சிறைக்குள்ளே பிடித்துப் போட்டுவிட அப்போதிருந்த சர்க்கார் திட்டம் போட்டாங்க. பெரியார் ஒரே ஒரு கேள்வி கேட்டார். சட்டத்தைக் கொளுத்தினா, என்னைக் கைது செய்வதற்கு உனது சட்டத்தில் இடமிருக்குதா ? முதலில் உனது சட்டத்தைப் பார் என்று கேட்டார். அதற்குப் பிறகுதான், சர்க்கார் சட்டத்தைப் பார்த்து, தண்டிக்க சட்டத்தைப் போட்டான் ! உடனடியாக சட்டமன்றத்தைக் கூட்டி, சட்டத்தை எரித்தால் தண்டனை என்று சட்டம் செய்தார்கள்.*



*அதற்குப் பிறகுதான் சர்க்காருக்கு சொரணை வந்துச்சு. சட்டத்தைக் கொளுத்தினால் மூன்று ஆண்டு தண்டனை என்று சட்டம் போட்டார்கள். நாங்கள் எல்லாம், இதைத் தெரிந்து கொண்டு, அதற்காக சிறைச் செல்ல வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டுதான், போராட்டத்துக்கு போனோம். இந்த சாதியினால, அன்றாடம் கேவலப்பட்டுக் கிடப்பதைவிட, செத்தாலும் சரி என்று துணிந்து தான் சென்றோம். (கைதட்டல்)*

*சோழபுரத்தில் - துரைசாமி தலைமையிலும், குமாரசாமி முன்னிலையிலும் போராட்டம் நடக்க இருந்தது. இவர்கள் இருவரும் சென்னைக்குப் போயிருந்தபோது, 'முரளி கபே' ஓட்டல் மறியலில் கலந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்டுவிட்டார்கள். சோழபுரத்தில், தலைமை வகிக்க ஆள் இல்லை. முன்னிலை வகிக்க ஆள் இல்லை. அப்போது எனக்கு 20 வயது. இப்போது 71 வயது. அப்போது நானே, எனது சுற்று வட்டாரத்திலுள்ள 21 பேருடன் தொடர்பு கொண்டு, முதல் நாள் இரவே, அவசர அவசரமாக எல்லாரிடமும் போய் சொல்லிட்டு வந்து, சட்டத்தை எரித்தோம். அந்தச் சட்டத்தை எரிக்கின்றபோது, கொஞ்சம் கூட எங்களுக்கு சங்கடம் கிடையாது. அவ்வளவு சித்திரவதை தினம் தினம் படுவதைவிட, இப்படி சட்டத்தை எரித்து சிறைக்குப் போய்விடுவது நல்லது என்ற முடிவுக்கு வந்தோம்.*

*இப்போ ஜெயிலுக்கு போவது எளிது. காலையிலே, மதியத்திலே டிபன், சாப்பாடு என்றெல்லாம் தருகிறார்கள். அப்போ இருந்த நிலை வேறு; அதை எல்லாம் சொல்ல வேண்டியதில்லை; மண் சட்டியிலேதான் சோறு வாங்க வேண்டும். சோறு வாங்கும்போதே பல நேரங்களில் சட்டி உடைந்துவிடும். மிகப் பெரிய சங்கடங்கள் இருந்தாலும், அவற்றை நாங்கள் பொருட்படுத்தவில்லை. எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் சொன்னதைப் போல், இதே போன்ற போராட்டங்கள் நடக்குமானால்,* **உயிர் போனாலும் பரவாயில்லை; சிறை செல்லத் தயாராக இருக்கிறோம்** *(கைதட்டல்) என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.*

## திருமங்கலக்குடி கோவிந்தராசன்

திருமங்கலக்குடி கோவிந்தராசன் சட்ட எரிப்பில் 6 மாதம் சிறைபட்டவர்; அவர் மாநாட்டில் பங்கேற்றுப் பேசியதாவது:



*நாங்கள் திருவிடை மருதூர் - திருப்பனந்தாள் பகுதியில், 5000 பேர் திரண்டு சட்டத்தைக் கொளுத்தினோம். அப்போது காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் இராமாமிர்தத் தொண்டைமானும் எங்களோடு சட்டத்தைக் கொளுத்தினார். போலீசார் எங்கள் எல்லோரையும் கைது செய்யாமல், கிராமத்துக்கு 10 பேர் வீதம், 20 கிராமத்தில் கைது செய்தார்கள். நாங்கள் 200க்கும் அதிகமானோர் ஒரே பகுதியில் சிறைக்குச் சென்றோம். 6 மாதம், 9 மாதம், 1 வருடம் என்று தண்டனை தரப்பட்டது. இம்மாதிரி பாராட்டு நடக்கும் என்றெல்லாம் நினைத்து நாங்கள் போராட்டத்துக்குப் போகவில்லை. நானும் 13 முறை கழகத்துக்காகப் போராட்டம் நடத்தி சிறைக்குப் போயிருக்கிறேன். பாராட்டுகளை எதிர்பார்க்காமல், எங்களுக்குள்ள சாதி இழிவை போக்கிக் கொள்வதற்காக தந்தை பெரியாருடைய கட்டளைக்காக நாங்கள் சிறைக்குச் சென்றோம். சாக்கோட்டை கணபதியும் நானும் சிறை சென்றோம். மாஜிஸ்திரேட் கேட்டபோது, எதிர்த்து வழக்காட மாட்டோம்; எந்தத் தண்டனை வேண்டுமானாலும் தாருங்கள் என்று தான் வாக்குமூலம் கொடுத்தோம். என் குடும்பத்தின் அந்தஸ்து கண்டு எனக்கு 'பி கிளாஸ்' கொடுத்தார்கள். நாங்கள் ஏற்க மறுத்து விட்டோம். சிறையிலிருந்து வெளியேறி தொடர்ந்து கழகப்பணிகளைச் செய்தோம். தஞ்சை மாவட்டத்தில் திராவிட விவசாய தொழிலாளர் சங்கம் இப்போது உயிரில்லாமல் இருக்கிறது. அந்த சங்கத்தை உருவாக்கியவர்கள் பாபா நவநீத கிருட்டிணன், எஸ்.எஸ். பாட்சா, குடந்தை ஜோசப், திருமங்கலக்குடி கோவிந்தராசு ஆகியோர் சேர்ந்து கட்டிக் காத்தோம். திராவிடர் கழகம் அதை வளர்க்க உதவி செய்யாமல் உதறிவிட்டது. திராவிட விவசாய சங்கம் கழகத்துக்கு உயிர்நாடியான அமைப்பு. அதை ஏற்படுத்தியது தந்தை பெரியார்.* **அந்த விவசாய சங்கத்தை பெரியார் திராவிடர் கழகம் கையில் எடுத்து அதற்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.** *விவசாயத் தொழிலாளர் நலனுக்கு சட்டம் இயற்ற வேண்டும் என்பதே நமது கோரிக்கை. பொதுத் தொழிலாளருக்கு, அவர்களின் நலனுக்கு வாரியம் அனுப்ப வேண்டும். எனக்கு 88 வயதாகிறது. அப்படி விவசாய சங்கத்தை பெரியார் திராவிடர் கழகம் அமைக்குமானால், என்னால் முடிந்த உதவிகளை நான் செய்வேன். பெரியார் திராவிடர் கழகம் - என்னை முன்பே அணுகி இருந்தால், இன்னும் 50 சாதி ஒழிப்பு வீரர்கள் இங்கே வந்திருப்பார்கள் என்றார்.*

## சீர்காழி லாலா

*தஞ்சை மாவட்டம் சீர்காழி லாலா சட்ட எரிப்பில் 9 மாதம் சிறைபட்டவர். அவர் தனது உரையில்:*

*"நான் நீண்டகாலமாக பெரியார் இயக்கத்தில் தொண்டு செய்து வருகிறேன். எனது திருமணம் கூட குத்தூசி குருசாமி தலைமையில் கொழுத்த ராகு காலத்தில் தான்*

3 ஆம் பக்கம்

# அரங்கை சூடேற்றிய திருச்சி தியாகுவின் வீர உரை!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

நடந்தது. அதற்கு சம்மதித்தால் தான் திருமணம் என்றேன். பல போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறேன். நான் சட்டத்தை எரித்து 9 மாத சிறைத்தண்டனை பெற்றேன். சிறையில் அரிசி சாப்பாடு கிடையாது. காக்கா சோளம், கேழ்வரகும் தான் சாப்பாடு. தஞ்சையிலிருந்து வந்த தோழர்களுக்கு, சிறை சாப்பாடு உடலை பாதித்து, ரத்தப் போக்கு ஏற்பட்டு விட்டது. நீடாமங்கலம் ஆறுமுகம் தலைமையில் தான் நாங்கள் போராட்டத்துக்குப் போனோம். என்னுடைய மகனுக்கும், மகளுக்கும் சாதி மறுப்புத் திருமணம் செய்தேன். இனியும் என் வீட்டில் சாதி மறுப்புத் திருமணங்கள் தான் நடக்கும்'' என்றார்.

### திருச்சி தியாகராசன்

தந்தை பெரியாருக்கு - 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்ததால் ஆத்திரமடைந்த பெரியார் தொண்டர் ஒருவர், அரசு வழக்கறிஞரான பார்ப்பனர் முகத்தில் 'ஆசிட்' வீசினார். விளம்பர வெளிச்சம் ஏதுமின்றி, பெரியாரை அவமதித்தவர்களுக்கு எல்லாம் பதிலடி தந்து, 'பகத் சிங்காக' வாழ்ந்து கொண்டிருக்கும் 78 வயது தோழரின் பெயர் திருச்சி தியாகராசன். மேடையில் ஏறி தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல், கொள்கைக் குன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவரை, பெரியார் திராவிடர் கழகம் அடையாளம் கண்டு, சாதி ஒழிப்பு மாநாட்டுக்கு அழைத்து வந்தது. சாதி ஒழிப்பு மாநாட்டில் அவரது உரை, மின்சாரத்தைப் பாய்ச்சியது. ஆழமான உணர்வுகளைத் தூண்டி, என்றும் நினைவில் நிற்கும் முத்திரை பதித்த திருச்சி தியாகராசன் உரையிலிருந்து:

என்னருமை உணர்வாளர்களே! நான் அதிகம் பேச முன்வரவில்லை. உண்மையைச் சொன்னால் - எனது 78 வயதில் நான் ஏறியுள்ள முதல் மேடை இது தான். புரட்சிகர இயக்கங்களுக்கு தனித் தனிப் படைகள் தேவை. நீங்கள் பிரச்சாரப் பீரங்கிகள்; பிரச்சாரப் படை. நான் தீவிர வாதத்தில் தான் இருப்பேன் *(கைதட்டல்)*. பெரியார் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் போராட்டங்களில் நான் கலந்து கொள்வது இல்லை. நான் கருப்புச் சட்டையும் போடமாட்டேன். என்னுடைய நடவடிக்கைகளால் கழகம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்று கருதுபவன். என்னுடைய போராட்டங்களை நான் தனிப்பட்ட முறையில் எனக்கு நானே பொறுப்பாக்கிக் கொண்டுதான் நடத்துவேன். சுருக்கமாகச் சொல்கிறேன். பெரியாரின் பிள்ளையார் உடைப்புப் போராட்டத்துக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் விபூதி வீரமுத்து என்பவன், பெரியார் படத்தை செருப்பால் அடித்து ஊர்வலம் போவதாகச் சொன்னான். திருச்சி திராவிடர் கழகத் தலைவர் டி.டி.வீரப்பா, எந்தத் தோழரும், விபூதி வீரமுத்து பக்கம் போக வேண்டாம் என்று கண்டிப்பாக உத்தரவிட்டார், அறிக்கையும் விட்டார். நான் வீட்டில் இருந்து கொண்டு, எனது சகாக்களை அழைத்துப் பேசினேன். டி.டி.வீரப்பா, கட்சியின் கட்டுப்பாடு படி நடக்கட்டும். ஆனால், நாம் நமது 'சட்டத்திட்டப்படி' அதை சந்திப்போம் என்று கலந்து பேசினேன். அன்று எனக்கு டைபாயிடு காய்ச்சலே வந்துட்டுதுங்க. கடும் காய்ச்சலில் கிடந்த நான் கண்விழித்துப் பார்த்தபோது - என் கையில் கத்தி இருந்தது. அப்போது மணி மாலை 7. அய்யோ, இந்நேரம் பெரியார் படத்தை செருப்பால் அடித்திருப்பானே யென்று, தலைதெறிக்க ஓடினேன். திருச்சி டவுன் ஆலை நோக்கி, கூட்டத்தைக் கலைக்க, போலீசார் தடியடி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். ஆனால், விபூதி வீரமுத்துவிடம் எத்தனை பேர் இருந்தார்கள் தெரியுமா? 25 பேர்



மட்டும்தான். ஆனால் போலீஸ் பட்டாளம் அதிகமாக இருந்தது. நம்முடைய தோழர்கள் சாலையின் மறு பக்கத்தில் நின்று கொண்டு, பயங்கரமாக எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். என்னுடைய சகாக்களுக்கு நான் செய்ய வேண்டியதை எல்லாம் முன் கூட்டியே சொல்லி விட்டேன்; நான் சோடா விற்பவனாக மாறு வேடத்தில் போலீஸ் தடையை மீறி உள்ளே நுழைந்துவிடுவேன்; நான் சைகை காட்டியதும், நீங்கள் கற்களை வீச வேண்டும்; கல் விழுந்தவுடன் நான் செய்ய வேண்டியதை செய்வேன் என்று கூறி விட்டேன்; அப்போதெல்லாம் என்னிடம் காசு கிடையாது; ஒருவரிடம் கடன் வாங்கி, அதில் 'சோடா கிரேடு'களை வாங்கி, அதைத் தூக்கிக் கொண்டு, தலையில் துண்டு கட்டிக் கொண்டு, சோடா விற்பவனைப் போல் உள்ளே நுழைந்தேன். விபூதி வீரமுத்துவின் ஆள் கண்ணன் என்பவர், யார் நீ என்று கேட்டார். தலைவருக்கு சோடா தர வந்திருக்கிறேன் என்றேன்; உள்ளே போனதும், விபூதி வீரமுத்துவை நோக்கி எனது தோழர்கள் மலத்தை வீசினார்கள்; நான் டவுன் ஆல் கதவை உடைத்து, டவுன் ஆல் கோபுரத்தின் மீது ஏறி விட்டேன்; விபூதி வீரமுத்து என்பவன் பெரியார் ரஷ்யாவுக்குப் போன போது எடுத்த படத்தை ஒரு மூட்டையில் ஒட்டி, அந்தப் படத்தை செருப்பால் அடிக்கத் திட்டமிட்டிருந்தான். 'வெள்ளைக்காரனுக்கு காட்டிக் கொடுத்த நாயை செருப்பால் அடிக்கிறேன்' என்று கூறி - பெரிய செருப்பை, விபூதி வீரமுத்து தூக்கினான். அவ்வளவுதான், டவுன் ஆல் கோபுரத்திலிருந்து சோடா பாட்டிலையும், கற்களையும் விபூதி வீரமுத்து தலையை இலக்கு வைத்து அடித்தேன்; முதல் அடியில் அவன் தலை கிழிந்தது. பெரியார் படம் கீழே விழுந்தது. என்னைக் கெட்ட வார்த்தை பேசி திட்டினான். மீண்டும் விட்டேன் எனது 'அஸ்திரத்தை'; பிறகு 7 பேர் மொட்டை அடித்துக் கொண்டு பெரியார் படத்தை வைத்துப் பாடை கட்டி தூக்கி வந்தனர். அத்தனை பேரையும் இலக்கு வைத்து அஸ்திரத்தை வீசினேன்; அப்படியே ஓட்டம் பிடிச்சானுங்க; மேலே இருந்த என்னைப் பார்த்து, போலீசார் வெறிக் கூச்சல் போட்டு, என்னை சுற்றி வளைக்க வந்தாங்க; நான் மேலே இருந்து அப்படியே கீழே குதித்தேன்; எனக்கும் சில 'ஸ்டண்ட்' வேலைகள் தெரியும். ஆனால் உங்களை எல்லாம் ஒன்று கேட்டுக் கொள்கிறேன்; யாரும், டி.வி., சினிமாக்களைப் பார்க்காதீங்க. அதெல்லாம் 'விசிலடிச்சான் குஞ்சு' சமாச்சாரம்; நடைமுறைக்கு வாங்க. நான் ஃபால் ஆப் பெர்லின், பகத்சிங், உலக யுத்தத்தில் - உடம்பில் குண்டைக் கட்டிக் கொண்டு கப்பலைத் தகர்ப்பானே, அது போன்ற படங்களைத்தான் பார்த்திருக்கிறேன். கூட்டத்தையே கலைத்தேன். என்னுடைய திட்டம் முழு வெற்றிப் பெற்றது. என்னுடைய வாழ்நாளில் எவ்வளவோ போராட்டம் செய்திருக்கிறேன். சொல்ல நேரமில்லை.

பெரியாருக்கு 3 ஆண்டு தண்டனை தரப்பட்டபோது, முதல் நாளே என்னைக் கைது செய்து விட்டார்கள். கைது செய்த என்னை அடுத்த நாள் நீதிமன்றம் கொண்டு வந்தார்கள். இரண்டாவது மாஜிஸ்திரேட் நீதிமன்றம் முன் என்னை நிறுத்தி வைத்திருந்தார்கள். மாவட்ட நீதிமன்றத்தில் அய்யாவுக்கு 3 வருட தண்டனை கொடுத்து, மற்றொரு பக்கம் அய்யாவைக் கொண்டு போகிறார்கள். தண்டனை அறிவித்தவுடன் எனது சகாக்கள் கடும் அமளியில் இறங்கி விட்டார்கள். அய்யாவுக்குத் தண்டனை தந்த பிறகு என்னால் சும்மா இருக்க முடியுங்களா? சீனிவாசாச்சாரி என்ற வெறி பிடித்த அய்யங்கார் பார்ப்பனன்தான் அரசு வழக்கறிஞர். நமது இனத்துக்கு மிகப் பெரும் கேடு செய்தவன். அவனது கடந்த கால சரித்திரம் முழுமையும் நான் தெரிந்து கொண்டேன். அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என்னிடம் கழக முக்கியஸ்தர்கள் எல்லாம் வந்து, நீங்கள் தயவுசெய்து பொறுமையாக இருங்கள் என்று மன்றாடி கேட்டுக் கொண்டார்கள். ஜனவரி 26 ஆம் தேதி அய்யாவை விட்டு விடுவார்கள் என்றார்கள். அது வரை பொறுமையாகக் காத்திருந்தேன். ஜன.26 மாலை ஒரு முடிவுக்கு வந்தேன்.

என்னுடைய அருமையான தோழர் சின்னச்சாமி. ஒரு பெரிய திட்டத்துக்கு தயாராகி நின்ற எங்களிடம் இருந்த பணம் எவ்வளவு தெரியுமா? நான்கு அணா. வெறும் நான்கு அணா தான்! ரேடியோ செய்தி கேட்டேன். பெரியார் விடுதலைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. குடியரசு நாள் நிகழ்ச்சியில், அரசு வழக்கறிஞர் கலந்து கொள்கிறார் என்ற சேதி கிடைத்தது. என்னுடைய நண்பன் சின்னச்சாமியிடம் கூறினேன். நான் முடிவு செய்து விட்டேன்; நீ போய்விடு என்று கூறினேன். பெரியார் வாழ்க என்று கூறி இருவரும் கை குலுக்கினோம். என்னுடைய நண்பன் சின்னச்சாமி பற்றி சொல்ல வேண்டும். அற்புதமான நண்பன். பீடி சுற்றித்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். ஒரு நாள் பீடி சுற்றினால் 75 காசு கிடைக்கும். அதை வைத்துத்தான் குடும்பம் நடத்த வேண்டிய நிலை. நான் அழைக்கும்போது, பீடி சுற்றுவதை அப்படியே நிறுத்திவிட்டு என்னோடு

6 ஆம் பக்கம்

## 'இழி தொழிலைச் செய்ய மாட்டோம்'
## பறைகளை எரித்த காளி மனோகரன்!



*சட்டத்தை எரித்து - ஓராண்டு சிறைச் சென்றவர் காளி. மனோகரன். சட்டத்தை எரிப்பதற்கு முன் - சாதித் தொழிலை செய்ய மாட்டோம் என்று, பறைகளைக் கொண்டு வந்து மாயவரம் நகரில் பொதுவிடங்களில் தீயிட்டுப் பொசுக்கிவிட்டு, பிறகு சட்டத்தை எரிக்கும் போராட்டத்தில் மணல்மேடு எனும் கிராமத்தில் பங்கேற்றவர். சாதித் தொழிலின் அடையாளமான பறை அடிக்கும் தொழிலைச் செய்ய, பெரியார் தொண்டர்கள் மறுத்து பலவிடங்களில் போராடியிருக் 1கிறார்கள். மயிலாடுதுறைக்கு அருகே - பார்ப்பனர்களின் கோட்டையாக விளங்கிய மாதிரி மங்கலம் எனும் கிராமத்தில் பறையடிக்கும் தொழிலை செய்ய மறுத்ததால் பெருந் தகராறு நடந்தது. மாதிரிமங்கலத்தில் சாதி இழி தொழில்களை செய்ய மறுக்கும் கிளர்ச்சிகளுக்கு தலைமை தாங்கி வழி நடத்தியவர் என்.டி.சாமி என்ற பெரியார் தொண்டர். குடியாத்தத்தில் பெரியார் பேசிய கூட்ட மேடையிலேயே இழி தொழிலை செய்ய மறுத்து, பறையடிக்க மாட்டோம் என்று பறையை எரித்த சம்பவங்களும் உண்டு.*

*இதே போல், பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்த்து, பெரியார் தொண்டர்கள் நடத்திய சலவைக் கடைகளில் பார்ப்பனர்களுக்கு துணி வெளுக்க மாட்டோம் என்றும், பெரியார் தொண்டர்கள் நடத்திய முடிதிருத்தகங்களில் பார்ப்பனர்களுக்கு முடிவெட்ட மாட்டோம் என்றும் அறிவிப்புப் பலகைகளைப் போட்டு, பெரியார் தொண்டர்கள் எதிர்ப்புக் காட்டினார்கள். கும்பகோணம் அருகே நரசிங்கன் பேட்டைக்கு அருகே உள்ள கஞ்சனூர் கிராமத்தில் மாணிக்கம் என்ற சலவைத் தொழிலாளி, பார்ப்பனருக்கு துணி வெளுக்க மாட்டோம் என்று அறிவிப்புப் பலகை எழுதிப் போட்டதால், ஊரில் கடும் எதிர்ப்புகள் எழுந்தன. இப்படி சாதி இழி தொழில்களுக்கு எதிரான கலவரத்தில் இறங்கியவர்தான் காளி மனோகரன். அவர் தனது உரையில் பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம், சேரன்மாதேவி குருகுலப் போராட்டம், அம்பேத்கர் நடத்திய மகர் போராட்டங்களை நினைவு கூர்ந்தார். உடல்நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய அடுத்த நாளே தஞ்சை மாநாட்டுக்கு வந்திருந்தார். மணல்மேடு கிராமத்தில் சட்டத்தை எரித்துவிட்டு, நீதிமன்றம் முன் அவர் நிறுத்தப்பட்டபோது, அங்கு நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார். சட்டத்தைக் கொளுத்தியவர்களை நீதிபதிக்கு முன் அழைத்தபோது, "மனோகரன் சாம்பான்; கந்தசாமி சாம்பான்" என்று சாதியைச் சொல்லி இழிவுபடுத்தி அழைத்திருக்கிறார்கள். ஆத்திரமுற்றத் தோழர்கள் - பார்ப்பன நீதிபதியிடம், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, "நாங்கள் சாம்பான்கள் அல்ல; தமிழர்கள்" என்று கூறினர். இதனால் கோபமுற்ற பார்ப்பன நீதிபதி - தண்டனையைக் கூடுதலாக்கி, ஓராண்டு சிறைத் தண்டனையை விதித்துள்ளார். சட்ட எரிப்பு வீரர் காளி மனோகரன் இதைத் தனது உரையில் சுட்டிக் காட்டினார்.*

# தஞ்சையைக் குலுக்கிய பேரணி


















# மாநாட்டுக் காட்சிகள்









# மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுவின் நினைவலைகள்!

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

வந்துவிடுவான். என்னால் மறக்கவே முடியாத காட்சிகள் அவை. அந்த நண்பன் சின்னச்சாமி, இப்போது காச நோய்க்கு உள்ளாகி மருந்து வாங்குவதற்குக்கூட காசு இல்லாமல் இருக்கிறான். அப்போது, சின்னச்சாமி, என்னைத் தனியே விட்டுப் போக மறுத்துவிட்டான். நானும் சேர்ந்து கொள்கிறேன் என்றான். “வேண்டாம் சின்னச்சாமி, தயவு செய்து நீ போய்விடு. என்னுடைய தாயை மறந்துவிட்டு நான் இந்த இடத்தில் நிற்கிறேன்; எனக்கு அய்யா தான் முக்கியம்” என்று சொன்னேன்.

சீனிவாசாச்சாரி குடியரசு நாள் விழாவில் பங்கேற்றுவிட்டு வந்தான். போலீசுக்கு எதிரேயே போய் கழுத்தைப் பிடித்து சுழற்றி முகத்தில் ‘ராஸ்கல்’ என்று கூறி ‘ஆசிட்’ வீசினேன். அவன் கீழே விழும்போது 8 மணி சங்கு ஊதியது. தோளிலும், முகத்திலும் குத்தினேன். 300 பேர் விரட்டி வந்தனர். முடியுமா ? என்னிடம் யாரும் நெருங்க முடியவில்லை. அதற்குப் பிறகு காவல்நிலையத்தில் - என்னை அழைத்துப் போய் விசாரித்தார்கள். இன்ஸ்பெக்டர் என்னை மிகவும் மதித்து சமமாக உட்கார வைத்து தோளில் கைபோட்டுப் பேசினார். அப்போது என்னிடம் கேட்டார். “எவ்வளவோ பெரியார் தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இல்லாத கவலை உனக்கு மட்டும் ஏன் ? நீ மட்டும் ஏன் இத்தகைய தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறாய் ?” என்று கேட்டார், நான் சொன்னேன்.

“நீங்கள் சேர்வை சமூகத்தைச் சார்ந்தவர்; நான் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவன்; என்னை சமமாக உட்கார வைத்து, நீங்கள் எனது தோளில் கை போட்டுப் பேசுகிறீர்கள். 25 ஆண்டுகளுக்கு முன், எனது சமூகம் தீண்டப்படாத சமூகம்; இன்று எனக்கு இந்த சம உரிமையைப் பெற்றுத் தந்தது பெரியார். அந்த உணர்வுதான் என்னை இயக்குகிறது. ஏதோ ஒரு நாள் - இதே திருச்சியில் பெரியாரின் இறுதி ஊர்வலம் போகும். அப்போது எல்லோரும் கண்ணீர் விட்டு அழுவார்கள்; அப்போது நான் மட்டும் அழமாட்டேன். காரணம், பெரியாரை தண்டித்தவர்களுக்கு எல்லாம், சரியான பாடம் புகட்டி விட்டேன் என்ற மனநிறைவில் நான் மகிழ்ந்து நிற்பேன்” என்று கூறி விட்டு, நான் குலுங்கி குலுங்கி அழுதேன். எனக்கு முன்னாள் புகைப்பிடித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், சிகரெட்டை தூக்கி வீசி விட்டு அவரும் கண்ணீர் விட்டார்.

சுருக்கமாகச் சொல்கிறேன். உங்களிடம் கழகத்தின் பணம் இருக்கிறதா ? அய்யா தேடித் தந்த பணம் உங்களிடம் இருக்கிறதா ? சொல்லுங்க. உங்களிடம் எதுவும் இல்லை; நீங்கள் உணர்வுகளை வைச்சிருக்கீங்க; பணம் இருந்து என்ன பயன் ? செயல் தான் முக்கியம். அப்படி செயல்படுகிற கூட்டம் தான் நீங்கள். இங்கே திரண்டிருக்கிறீர்கள். பணம் யாரிடமோ இருக்கிறது; ஆனால் கொள்கை உங்களிடம் தான் இருக்கிறது. *(கைதட்டல்)*

நிறைய பேச வேண்டியிருக்கு; என்னால் இதற்கு மேல் பேச முடியவில்லை; மன்னிக்கவும்.

### திருவாரூர் தங்கராசு

சட்ட எரிப்புப் போராளிகளுக்கு விருது வழங்கி மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு பேசினார். அவர் தனது உரையில்:

சட்டத்தை எரித்த தோழர்களை எல்லாம் தேடிப் பிடித்து, அவர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், இரவு பகல் பாராது கடுமையாக உழைத்து, இந்த மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். 1946 இல் இந்தியாவில் டொமினியன் அந்தஸ்துள்ள இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்பட்டது. அப்போது பிரதமர் நேரு, பாகிஸ்தானைச் சார்ந்த லியாகத் அலிகான், நிதியமைச்சர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் 1947 இல் கூடிய அரசியல் நிர்ணயசபை சட்டத்தை வகுத்தது. டி.டி. கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி, கோபால்சாமி அய்யங்கார், கே.எம். முன்ஷி ஆகிய பார்ப்பனர்களும், அசாம் மாநிலத்தைச் சார்ந்த முகம்மது சாதுல்லா என்ற முஸ்லீமும், அரசியல் சட்டத்தை உருவாக்கிய குழுவில் இடம் பெற்றிருந்தனர். குழுவின் தலைவர் டாக்டர் அம்பேத்கர். பிறகு அம்பேத்கர் அமைச்சரவையிலிருந்து வெளியே வந்து - பார்ப்பனர்கள் தன்னை ஏமாற்றி விட்டனர் என்று கூறினார். நானே அரசியல் சட்டத்தை எரிப்பேன் என்றார். அதைத்தான் நமது தோழர்களும் செய்தார்கள். நமது தோழர்கள் எந்த சலுகையையும் எதிர்பார்த்து இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை. சிறையேகவில்லை. ஆனாலும் வயதே ஏறாதவர்கள் எல்லாம் காங்கிரஸ்




தியாகிகள் என்ற பெயரிலே மான்யம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி கடைசியாக நடத்திய போராட்டமே 1942 இல் நடத்திய ஆகஸ்டு கிளர்ச்சிதான். ஆனால் வயதுக்கும் வரலாறுக்கும் சம்பந்தமில்லாதவர்கள் எல்லாம் மான்யம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் - எம்.ஜி.ஆர். ஆட்சி நடந்தபோது பெரியார் பொன்மொழிகளைத் தொகுத்து புரட்சி மொழிகள் என்ற நூலை வெளியிட்டார். பெரியாரின் - 144 வண்ணப் படங்கள் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டது. அப்போதுதான் சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறைச் சென்ற தோழர்களுக்கும் எதையாவது செய்ய வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. சட்டத்தை எரித்தவர்களுக்கு அரசு மான்யம் தர முடியாது என்று அதிகாரிகள் கூறினார்கள். அரசு மான்யத்தை இப்போது வாங்கிக் கொண்டு, பிறகு திருப்பித் தரவேண்டும் என்ற நிலை வந்து விட்டால் என்னவாகும் என்று, பலர் அரசு மான்யம் வழங்க தயங்கினர். ஒரு பிரிவினர் பெரியார் உருவம் பொறித்த கேடயம் வழங் கினால் போதும் என்றனர். அவர்களுக்கு கடற்கரையில் நடந்த விழாவில் கேடயம் வழங்கப்பட்டது. மற்றொரு பிரிவினர் நிதி உதவி பெற்றனர். இந்த நிதி உதவி திரும்பப் பெற முடியாத - முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து முதல்வர் எம்.ஜி.ஆர். வழங்கினார்.

சட்ட எரிப்புப் போராட்டம் நடந்தபோது காமராசர் முதல்வராக இருந்தாலும், காவல்துறை அமைச்சராக இருந்தவர் பக்தவத்சலம். சட்ட எரிப்புப் போராளிகளால் திருச்சி சிறை நிரம்பி வழிந்தது. சிறைக்குள்ளே மோசமான கழிப்பிடம்; மோசமான உணவு; குடிக்கத் தண்ணீர்கூட மோசம். அதனால், பள்ளித் தலைமை ஆசிரியராக இருந்த பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி இருவரும் சிறைக்குள்ளே மாண்டார்கள். இறந்தவர்களின் பிணத்தை சட்டப்படி உறவினர்களுக்குத் தரவேண்டும். அதைக் கூடச் செய்யாமல், சிறைக்குள்ளே குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள். அப்போதுதான் மரியாதைக்குரிய மணியம்மையார் வீராங்கனையாக எழுந்தார். திருச்சி நகரமே கொந்தளித்தது. சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் நான் கலந்து கொள்ளவில்லை. அதற்கு முன்பு தான் - பார்ப்பன உணவு விடுதி மறியல், வடநாட்டு சுரண்டல் மறியலில் ஈடுபட்டு, இரண்டு மாதம் சிறையிலிருந்து, வெளியே வந்திருந்தேன். பெரியாரும், சட்ட எரிப்புக் கிளர்ச்சியில் சிறைச் செல்லவில்லை. தமிழ்நாடு முழுதும் சிறையில் தோழர்கள் அடைக்கப்பட்டிருந்த நிலையில், மணியம்மையாரின் தம்பி தியாகராசனிடம் வேனைக் கொடுத்து, என் வீட்டுக்கு அனுப்பி, பெரியார் அழைத்து வரச் சொன்னார்.

“வெளியே வேலை நிறைய இருக்கு; போராட்டத்துக்குப் போவது மட்டும் தான் வேலை என்று இல்லை; சிறைக்குச் சென்று, தோழர்களைப் பார்த்து வருவோம் என்று பெரியார் அழைத்தார். முதலில் வேலூர் சிறைக்குச் சென்றபோது, அங்கே பாட்சா, மரியாதைக்குரிய பெரியவர் ஆனைமுத்து, பராசக்தி படத்துக்கு திரைக்கதை எழுதிய பாவலர் பாலசுந்தரத்தின் மனைவி பட்டுப்பாவலர் ஆகியோர் கடுமையான சிறைத் தண்டனைக்கு உள்ளாகி இருந்தனர். பிறகு திருப்பத்தூர், சேலம் என்று ஒவ்வொரு சிறையாகப் பார்த்து வந்த போது, பெரியாருக்கு கரூர் பசுபதிபாளையம் கூட்டத்தில் பேசிய பேச்சுக்காக மூன்று மாத கடுங்காவல் தண்டனையை சிவசுப்பிரமணிய நாடார் என்ற செஷன்ஸ் நீதிபதி வழங்கியிருந்தார். அதுபற்றித் தான் திருச்சி தியாகு இங்கே பேசினார். அதிலே கடுமையாக நடந்து கொண்டதை விளக்கினார். தியாகுவின் வீரம் பகத்சிங் வீரத்துக்கு சமமானது. பகத்சிங் வரலாற்றில் இடம் பிடித்து விட்டான். ஆனால், தியாகுவை எப்படியோ தேடிப் பிடித்து, இங்கே கொண்டு வந்து விட்டார்கள், நமது பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள். பெரியார், கைது செய்யப்பட்ட நிலையில், நான் சென்னைக்குத் திரும்பி விட்டேன்.

மணல்மேடு வெள்ளைச்சாமியும், பட்டுக்கோட்டை இராமசாமியும், சிறைக்குள்ளே புதைக்கப்பட்டதை மணியம்மையார் எதிர்த்தார். நாகம்மையாரை நாம் பார்த்தது இல்லை. ஆனால் மணியம்மையார் அவ்வளவு ஆவேசமாக எழுந்து, அரசே ஆட்டிப் படைக்கிற அளவுக்கு, திருச்சியிலிருந்து தொலைபேசி வழியாக செய்திகளை அனுப்பினார். அதற்குப் பிறகு தான் சிறையிலே புதைக்கப்பட்ட சடலங்களைத் தோண்டி எடுத்து, கழுவி குளிப்பாட்டி ஒப்படைத்தனர். திருச்சியிலே அன்று நடந்த புரட்சிகர ஊர்வலத்தைப் போல், அப்படி ஒரு ஊர்வலம் நடைபெற்றதே இல்லை. மணியம்மையார் தான் ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார். அந்த ஊர்வலத்திலே வந்த பல்லாயிரக்கணக்கான தொண்டர்களில் நானும் ஒருவன். கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. வீதிகளில் மக்கள் கையெடுத்து வணங்கினார்கள். அவையெல்லாம் வரலாறு. வேலூரிலே பெரியார் மறைந்தபோது, அவரது உடல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டபோது, வழி நெடுக மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அப்போதுகூட - இன்று தமிழர் தலைவர் என்று கூறிக் கொண்டு, கட்சி நடத்திக் கொண்டிருப்பவர், என்னை வேனில் ஏற்ற மறுத்துவிட்டார். அதன் பிறகு, முதல்வர் கலைஞர், அமைச்சர் மன்னைக்கு தகவல் அனுப்பி அன்று அமைச்சராக இருந்த மன்னை நாராயணசாமி அவரது காரை எங்களுக்குத் தந்தார். நானும், டி.எம்.சண்முகமும், அந்தக் காரில் சென்னைக்கு வந்தோம். இல்லாவிட்டால் நாங்கள் சென்னை வந்து சேர்ந்திருக்க முடியாது. அய்யாவோடு நெருங்கிப் பழகிய நெ.து. சுந்தரவடிவேலு, டார்பிடோ ஏ.பி. ஜனார்த்தனம் ஆகியோர் சேர்ந்து தொகுத்த, பெரியார் வண்ணப்படத் தொகுப்பு நூல் வெளியிடப்படாமலே போய்விட்டது. அதை வெளியிடுவது பற்றி பெரியார் திராவிடர் கழகம் பரிசீலிக்க வேண்டும் என்றார். ●

## பட்டியல் தயாரிப்பீர்! – தோழர்களுக்கு வேண்டுகோள்!

*தஞ்சையில் சாதி ஒழிப்பு மாநாடு – பெரியார் திராவிடர் கழகத்தின் லட்சியப் பயணத்தில் வரலாற்றுத் தடத்தைப் பதித்துள்ளது என்றால் அது மிகையல்ல. பெரியார் இயக்கத்தின் தனித்துவமான போர்க் குண பண்பாட்டை – மூத்த பெரியார் போராளிகள் – இளம் கருஞ்சட்டைப் படையிடம் ஊட்டியிருக்கிறார்கள். 1957 இல் சிறை ஏகிய சாதி ஒழிப்பு களப் போராளிகள் தங்களின் உணர்வுகளையும், அனுபவங்களையும், உளம் திறந்து பகிர்ந்து கொண்ட நிகழ்வு கழகத்தினரின் உள்ளங்களில் பசுமரத்தாணிப் போல் பதிந்து விட்டது. சமுதாயப் பயன் கருதி தன்னலம் மறுத்து – சுயமரியாதை வீரர்கள் நடை போட்ட அந்தப் பாதையில் – அவர்கள் தந்த ஒளி விளக்கைக் கரங்களில் ஏந்தி, 1957 நினைவுகளை சுமந்து கொண்டு, பெரியார் திராவிடர் கழகம், தனது சாதி ஒழிப்புப் பணிகளைத் தொடர திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அதுவே மாநாட்டின் நிறைவுரையில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி முன்மொழிந்த தீர்மானம்.*

*தோழர்களே! தீர்மானத்துக்கு செயல்வடிவம் கொடுக்கும் செயல்திட்டங்களை உடனடியாகத் தொடங்கிடுவோம்!*

*கழகத்தின் மாவட்டப் பொறுப்பாளர்கள் உடனடியாக – தங்கள் மாவட்டங்களில் –*

- *இரட்டைக் குவளை – இரட்டை இருக்கைகள் கொண்ட தேனீர்க் கடைகள்*
- *தலித் மக்களுக்கான பஞ்சமி நிலங்கள் ஆக்கிரமிப்புப் பற்றிய தகவல்கள்*
- *தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளே அனுமதிக்காத பொதுக் கோயில்கள்*

*– ஆகியன பற்றி முழு விவரங்களை சேகரித்து, பட்டியல் தயாரியுங்கள்.*

*அந்தப் பட்டியலை ஜூன் 20 ஆம் தேதிக்குள் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்!* **– தலைமை கழகம்**

*பட்டியல் அனுப்ப வேண்டிய முகவரி:*

**தா. செ. மணி, தலைவர், பெரியார் திராவிடர் கழகம்,**
**பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை – 636 401. (மேட்டூர் பேருந்து நிலையம் அருகில்)**

## இரட்டைக் குவளை தீண்டாமைகளுக்கு எதிராக

# களம் இறங்குகிறது கழகம்!

கிராமங்களில் – இன்னும் தொடரும் இரட்டைக் குவளை, இரட்டை இருக்கைகளை அகற்றக் கெடு விதிப்பது என்றும், அகற்றாவிடில் ஆக.15–இல் உடைக்கும் போராட்டத்தை நடத்துவது என்றும், தஞ்சை மாநாட்டில் பெரியார் திராவிடர் கழகம் அறிவித்துள்ளது. மாநாட்டின் இறுதியில் இத் தீர்மானத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன் மொழிந்து பேசினார். கழகத் தலைவர் முன் மொழிந்த தீர்மானம்:

- தமிழ்நாட்டின் பல்வேறு கிராமப் பகுதிகளில் இப்போதும் தீண்டாமை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் ‘நாடு’ என்ற அமைப்பு முறை சாதியத்தைப் பாது காப்பதுபோல், மேற்கு மாவட்டங்களில் ஒடுக்குமுறையின் நவீன வடிவமாய் ‘பண்டு கிராமங்கள்’ என்ற முறையால் பெரும்பான்மை ஆதிக்க சாதிகளால் சாதிய ஒடுக்குமுறையைத் தொடர்ந்து நிலைநிறுத்த கட்டாய நிதி திரட்டும் முறை நிலவி வருகிறது. அம்முறையைப் பயன்படுத்தி இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை, பஞ்சமி நில அபகரிப்பு எனும் சட்டவிரோத, ஜன நாயக விரோத முறையைக் கடுமையாகத் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைமுறைப்படுத்துகின்றன.

  தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களில் நிலவும் இந்தத் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் - தோழமை சக்திகளின் துணையோடு போராட முடிவு செய்துள்ளது.

  முதல் கட்டமாக - தமிழ்நாடு முழுவதும் இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை உள்ள கடைகள், கிராமங்களின் பட்டியலையும், ஒடுக்கப்பட்ட மக்களின் குறைந்தபட்ச வாழ்வாதாரமாக, ஆங்கிலேயர் ஆட்சியில் வழங்கப்பட்டிருந்த பஞ்சமி நிலங்கள் ‘சுதந்திர’ இந்தியாவில் பிற சாதியினரால் வஞ்சகத்தாலும், மிரட்டியும் அபகரிக்கப்பட்டுள்ள விவரங்களையும், தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்காத கோவில்கள் பற்றிய விவரங்களையும் தயாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது காவல்துறை, வருவாய்த் துறை, ஆதி திராவிடர் நலத் துறை அதிகாரிகளிடமும் அரசிடமும் புகார் தருவது எனவும்,

  இரண்டாம் கட்டமாக காலக்கெடுவுக் குப்பின் இந்தத் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக ஒரு மாத காலம் தமிழ்நாடு முழுவதும் கிராமம் கிராமமாக பரப்புரை செய்து தீண்டாமையைக் கைவிடுமாறு வலியுறுத்துவது எனவும்,

  மூன்றாவது கட்டமாக விடுதலை வந்ததாகச் சொல்லப்படும் ஆகஸ்டு 15 ஆம் நாளன்று முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை முறைகளைச் சட்டவிரோதமாகக் கடைபிடிக்கும் கடைகளில் தீண்டாமை வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்தை வலியுறுத்தி, ‘இரட்டைக் குவளை, இரட்டை இருக்கைகளை உடைத்தெறிவது’ எனவும், பெரியார் திராவிடர் கழகம் இந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் அறிவிக்கிறது.

  சாதி ஒழிப்பிற்காகச் சட்டம் எரிக்கப்பட்ட நாளும், சட்ட தினமுமான நவம்பர் 26 அன்று ஒத்த கருத்துள்ள அனைத்து சக்திகளையும் இணைத்துக் கொண்டு பஞ்சமி நில மீட்புப் போரை நடத்துவது எனவும் அறிவிக்கிறது.

  சாதி ஒழிப்பிற்காக - மகத்தான தியாகங்கள் செய்த சட்ட எரிப்புப் போராளிகளின் தியாகத்திற்கு நாம் காட்டும் உண்மையான மரியாதையும், பெரியார் தொண்டர்கள் செல்ல வேண்டிய திசை வழியும் இதுவே என்று பெரியார் திராவிடர் கழகம் கருதுகிறது.

- பெரியாரின் ஆணையை ஏற்று, கடும் அச்சுறுத்தல் சட்டங்கள் அவசர அவசரமாக இயற்றப்பட்ட நிலையிலும், அரசியல் சட்டத்தில் சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளைக் கொளுத்தி, நீதிமன்றத்தில் எதிர் வழக்காடாமல் 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை, கடும் சிறைத் தண்டனை ஏற்ற, ஆயிரமாயிரம் பெரியார் தொண்டர்களின் இலட்சிய உறுதிக்கு, இம்மாநாடு தலைதாழ்த்தி வணங்கி, அவர்கள் போட்டுத் தந்த பாதையில் - சாதி ஒழிப்பு இலட்சியப் பயணத்தைத் தொடர உறுதி ஏற்கிறது. சமூக மாற்றத்திலும், சாதி ஒழிப்பிலும் அக்கறையுள்ள அனைத்து இயக்கங்களும் சாதியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று இம்மாநாடு அறைகூவி அழைக்கிறது. **முன்மொழிந்தவர் : ஆனைமலை ருக்மணி**

- சாதியத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளான சமூகங்களுக்கு சுயமரியாதையும், சம உரிமையும் என்ற நோக்கோடு கல்வி, வேலை வாய்ப்புகளில் மட்டுமே பிற்பற்றப்பட வேண்டிய சாதியின் அடையாளத்தை, அதிலிருந்து திசை திருப்பி, அரசியல் கட்சிகள் ஓட்டு வங்கிகளை உருவாக்குவதற்கும், சுயநல சக்திகள் தங்கள் சுரண்டலுக்கும், சுயநலனுக்கும் பயன்படுத்துவது அதிகரித்து வருவதும், இந்த சாதிய உணர்வுகளுக்குத் தீனி போடக்கூடிய திரைப்படங்களும், கலை வடிவங்களும் பெருகி வருவதும், சமூகத்தை மீண்டும் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஆபத்தான போக்கு என்று இம்மாநாடு கவலையோடு சுட்டிக் காட்டுகிறது. சாதி அமைப்பின் ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்குப் பதிலாக, சாதிக்குப் புத்துயிர் ஊட்டும் அரசியல் கட்சிகள், சுயநல சக்திகள், திரைப்படங்கள், கலைவடிவங்களுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று சாதி எதிர்ப்பாளர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. **முன்மொழிந்தவர் : திண்டுக்கல் துரை. சம்பத்**

- தலித் மக்களின் மேம்பாட்டிற்காக - மத்திய அரசு சிறப்புக்கூறு திட்டம் ஒன்றின் வழியாக மாநில அரசுகளுக்கு நிதி வழங்கி வருகிறது. இதன்படி தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறையிலும் 19 சதவீத நிதியை தலித் மக்கள் மேம்பாட்டிற்காக ஒதுக்கிட தமிழக அரசு கடமைப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் 12,000 கோடி ரூபாய் மறுக்கப்பட்டுள்ளதோடு, 7143 கோடி ரூபாய் வேறு செலவினங்களுக்கு திருப்பிவிடப்பட்டுள்ளது என்பது அதிர்ச்சி தருவதாகும். இந்த முறைகேடுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்திடவும், ஒதுக்கப்பட்ட நிதியை முறையாகச் செலவிடவும் தலித் உரிமையில் ஈடுபாடு கொண்ட, உயர்மட்டக் கண்காணிப்புக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று தமிழக அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது. **முன்மொழிந்தவர்: மதுரை விடுதலை சேகர்**

- வடநாட்டில் மண்டல் அலை உருவாக்கிய தாக்கத்தால் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களின் கூட்டணி உருவாகி, பார்ப்பன ஆதிக்கத்தை அரசியலில் ஓரம் கட்டியது. மனுவாத எதிர்ப்பை முன்வைத்து, வெகு மக்கள் உரிமைக்காக தொடங்கப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சி இன்று பார்ப்பன மனுவாத சக்திகளோடு கைகோர்த்து ஆட்சிக்கு வந்திருப்பது ஆபத்தான அரசியலாகும். முதல்வராகப் பதவியேற்றவுடன், முதலமைச்சர் மாயாவதி இடஒதுக்கீட்டைப் பொருளாதார அடிப்படையிலும், அதுவும் உயர்சாதி ஏழைகளுக்கு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று கூறியிருப்பது அவரது கொள்கைத் தடுமாற்றத்தையே உணர்த்துகிறது. தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மறுத்து சமூகச் சுரண்டலுக்கும் மூல ஊற்றாக இருக்கும், பகை சக்திகளான பார்ப்பனர்களை, நட்பு சக்திகளாக்கிடும் பேராபத்தை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் புரிந்து, இந்தப் போக்கு பரவாமல் முறியடிக்க முன்வரவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. **முன்மொழிந்தவர் : மேட்டூர் கனகரத்தினம்**

- சாதிமதமற்ற சமூகத்தை உருவாக்கிட - சாதி மறுப்புத் திருமணங்கள் பெருக வேண்டியதும், அதை ஊக்கப்படுத்தும் திட்டங்களை அரசு மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். சாதி மதத்தைக் கடந்து திருமணம் புரிந்தோருக்கு கல்வி, வேலை வாய்ப்புகளில் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும். சாதி மத மறுப்பாளர்களுக்கென சாதி மத மறுப்புக் குடியிருப்புகளை உருவாக்குவதோடு சமத்துவபுரத்திலும் முன்னுரிமை தரப்பட வேண்டும். சாதி மத மறுப்பாளர்கள் தங்களது வாரிசுகளை, தங்களது பிறவி அடையாளங்களைக் கடந்து, புதிய உறவுகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துவது அவசியம் என்பதையும் இம்மாநாடு சுட்டிக்காட்ட விரும்புகிறது. **முன்மொழிந்தவர் : கொடையூர் தமிழ்தாசன்**

- இந்து சாதி அமைப்பு - தொழிலையும், வாழ்க்கைத் துணையையும் தேர்வு செய்வதில் சாதியைப் புகுத்தி சமூகத்தைத் தேக்கமடையச் செய்துவிட்டதோடு மனித உணர்வுகளையும், உரிமைகளையும் நசுக்கி வருகிறது. இந்தச் சாதித் தடைகளை மீறி வயது வந்த பெண்ணும், வயது வந்த ஆணும், வாழ்க்கைத் துணைவர்களாக விரும்பும்போது, குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் முதலில் பாசத்தைக் காட்டியும், அது பலிக்காமல் போனால் அச்சுறுத்தல், வன்முறைகளைப் பயன்படுத்தியும் சாதி வெறியோடு தடுக்கப் பார்க்கிறார்கள். இப்படித் தடுக்க முனைவதைத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதி, கடும் சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும், இவர்களில் தலித் பெண்ணோ, ஆணோ இருப்பார்களானால் தீண்டாமை வன் கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இதனைக் குற்றமாகக் கருத வேண்டும் என்றும் இம்மாநாடு தமிழக அரசை வற்புறுத்துகிறது. **முன்மொழிந்தவர் : நெடுமானூர் வ. நடராசன்**

- உயர்கல்வியில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு - நாடாளுமன்றமே சட்ட திருத்தம் செய்து ஒப்புதல் தந்த பிறகு பார்ப்பன ஆதிக்க பீடமான உச்சநீதி மன்றம், தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு இவ்வாண்டு 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு இடைக்காலத்தடை விதித்துள்ளது - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைத்துள்ள மிகப் பெரிய அநீதியாகும். இந்தத் தடையை நீக்குவதற்கான சட்டப்படியான நடவடிக்கைகளை மத்திய அரசு உடன் எடுக்க வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. **முன்மொழிந்தவர்: சீர்காழி பெரியார்செல்வன்**

- இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி போல இந்திய நீதிப்பணி ஏற்படுத்த தற்போதுள்ள அரசியல் சட்டத்தின் பிரிவு 312 அனுமதிக்கிறது. அவ்வாறு நியமிக்கப்பட்டால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் இடஒதுக்கீட்டின் வழியே நீதிபதிகளாகும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு உருவாக்குவதுதான் வெகு மக்கள் நலனுக்காக இயற்றப்படும் சட்டங்களை எளிதில் நடைமுறைப் படுத்த உதவும். எனவே இந்திய நீதிப்பணியை உருவாக்குமாறு மத்திய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது. **முன்மொழிந்தவர்: மதுரை அகராதி**

- அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாகும் சட்டத்தை அமுல்படுத்தி, அர்ச்சகர் பயிற்சிக்கான வகுப்புகளைத் துவக்கி, திட்டத்தை அமுல்படுத்தத் தொடங்கியுள்ள தி.மு.க. அரசை இம்மாநாடு பாராட்டி வரவேற்கிறது. **முன்மொழிந்தவர் : நெல்லை காசிராசன்** ●

### நடிகவேள் எம்.ஆர்.இராதா நூற்றாண்டு

1907 ஆம் ஆண்டில் பிறந்த நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்களின் நூற்றாண்டு இது!

பெரியார் இயக்கத்தின் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ள நடிகவேளின் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டங்களை சென்னை – கோவை – சேலம் உள்ளிட்ட நகரங்களில் பெரியார் திராவிடர் கழகம் நடத்த இருக்கிறது என்பதைத் தோழர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

## 1957 நினைவலைகளில் மூழ்கச் செய்த தஞ்சை மாநாடு

# அரங்கிலிருந்து - வள்ளுவர் திடல் வரை...

சாதி ஒழிக்கச் சட்டம் எரித்த 50வது ஆண்டில், சாதி ஒழிப்பு மாநாட்டை பெரியார் திராவிடர் கழகம் மே 19, 2007, தஞ்சையில் நடத்தி புதிய வரலாறு படைத்தது. இந்தியாவில் சாதி ஒழிப்புக்காக இவ்வளவு பெரும் போராட்டத்தை நடத்திய வரலாற்றுப் பெருமை பெரியார் இயக்கத்துக்கு மட்டுமே உண்டு. 1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளுக்கு தீ வைக்கும் போராட்டத்தை அறிவித்தார். நவம்பர் 3 ஆம் தேதி தஞ்சையில் பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி நாணயம் வழங்கும் நிகழ்ச்சியும் திராவிடர் கழக தனி மாநாடும் சிறப்பாக நடைபெற்றது. எடைக்கு எடை வெள்ளி நாணயம் வழங்கும் நிகழ்ச்சிக்கு தி.பொ. வேதாசலம், பி.ஏ., தலைமை தாங்கினார். திராவிடர் கழக தனி மாநாட்டுக்கு தலைவர் தந்தை பெரியார்; மாநாட்டு திறப்பாளர் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் குத்தூசி குருசாமி. அன்று காலை 9 மணிக்கு தஞ்சையில் நடந்த ஊர்வலத்தில் 4 லட்சம் மக்கள் திரண்டார்கள் என்று 'விடுதலை' நாளேடு கூறுகிறது. நடிகவேள் எம்.ஆர். ராதா, திருச்சி வீ.அ. பழனி ஆகிய இருவரும் குதிரை மீது அமர்ந்து ஊர்வலத்தை ஒழுங்குபடுத்திவர, பெரியார் இரட்டைக் குதிரைகள் பூட்டிய அலங்கரிக்கப்பட்ட வண்டியில் உணர்ச்சி முழக்கங்களுக்கிடையே அழைத்து வரப்பட்டார். மாநாடு பற்றி 'விடுதலை' நாளேடு வெளியிட்ட செய்தி (5.11.1957) இவ்வாறு கூறியது.

"சுயமரியாதை இயக்கக் காலம் முதல் நடைபெற்ற பல பெரிய மாநாடுகளையும்விட இதுவே மிகப் பெரிய மாநாடாக விளங்கியதென பெரியார் தமது உரையில் குறிப்பிட்டார்".... பெரியார் அவர்களே ! என்ன செய்யச் சொல்கிறீர்கள் ? அதன் படியே முடிப்பதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறி ஆணை பெற்றுச் செயலாற்றத் துடிக்கும் கடமை வீரர்கள் ! போர் முரசு கேட்டதும் ஏன் ? என்ன ? என்று கேட்காமல் அணி வகுத்து நின்று கடமையாற்றும் செயல்வீரர்கள் ! உயிரைப் பணயம் வைக்கத் துணிந்துவிட்டோம், உத்தரவு தாருங்கள் என்று இலட்சக்கணக்கில் கூடிய இலட்சிய வீரர்கள் ! கூடினோம், கலைந்தோம் என்றிராமல், கொள்கைக்காக வாழ்கிறோம் என்று உறுதி பூண்டுள்ள போர் வீரர்கள் நிறைந்த பாடி வீடாக அமைந்தது மாநாடு" என்று எழுதியது விடுதலை. - 79 வயதையும் மறந்து 20 வயது இளைஞரைப் போன்று பெரியார் வீர கர்ச்சனை செய்தார். இறுதியில் -

"நவம்பர் மாதம் 26 ஆம் தேதியன்று மாலையில், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாத திராவிடராலும், இச் சட்டம் நெருப்பிலிட்டுக் கொளுத்தத்தக்கது என்று இம்மாநாடு பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறது" என்று மாநாட்டில் தீர்மானம் அறிவிக்கப்பட்டது. அடுத்த 8 நாள்களில் அரசியல் சட்டத்தை எரித்தவர்களுக்கு மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கும் மசோதா உள்துறை அமைச்சர் பக்தவச் சலத்தால் கொண்டு வரப்பட்டு, அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது. 10,000 பேர் சட்டத்தைக் கொளுத்தினார்கள். 'விடுதலை'யில் வெளியிட்ட பட்டியலின்படி, 3000க்கும் அதிகமாகக் கைது செய்யப்பட்டார்கள். 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை தண்டிக்கப்பட்டார்கள். சிறைக்குள்ளே 5 பேர் பலியானார்கள். விடுதலையானவுடன் அடுத்த சில நாள்களிலே 13 பேர் மரணமடைந்தார்கள். இந்த மகத்தான போராட்டம் இருட்டடிக்கப் பட்டது. போராளிகளின் தியாகங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த நிலையில் தான் பெரியார் திராவிடர் கழகம் இந்தப் போராட்டத்தின் வரலாறுகளை வெளியே கொண்டு வந்து சாதி ஒழிப்புப் போராட்டத்தைத் தொடர முடிவெடுத்து, தஞ்சையில் சாதி ஒழிப்பு மாநாட்டைக் கூட்டியது.

சாதி ஒழிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, சிறையிலேயே மரணமடைந்த போராளி பட்டுக்கோட்டை இராமசாமி நுழைவாயிலில் அமைந்த தமிழரசி திருமண மண்டபத்தை நோக்கி, காலை 9 மணியிலிருந்து, பெரியார் திராவிடர் கழகத்தின் தோழர்கள், திரளத் தொடங்கினர். காலை 10 மணியளவில் அரங்கம் முழுதும் நிரம்பி வழிந்தது. சாதி ஒழிப்புப் போராட்டத்தில் உயிரிழந்த வாளாடி பெரியசாமி நினைவுப் பந்தலில், உயிரிழந்த மற்றொரு போராளி லால்குடி நன்னிமங்கலம் கணேசன், மேடையில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பறை முழக்கத்தோடு நிகழ்ச்சிகள் துவங்கின. தொடர்ந்து மேட்டூர் டி.கே.ஆர். மன்னை தங்கம் குழுவினர் இணைந்து வழங்கிய எழுச்சி இசை நிகழ்ச்சி நடந்தது. கழகச் செயல்வீரர் கா.சு. நாகராசன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் கழகக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். பெரியார் திராவிடர் கழகத்தின் இந்தப் புதியக் கொடி, 1996 ஆம் ஆண்டிலேயே தாங்கள் உருவாக்கிய பெரியார் பாசறையின் கொடியாக இருந்தது என்பதை பெருமையுடன் நினைவுகூர்ந்தார்.

பகல் 12 மணியளவில் சாதி ஒழிப்பு கருத்தரங்கம் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் தொடங்கியது. சாதி ஒழிப்பும் புத்தரும் எனும் தலைப்பில் எழுத்தாளர் அழகிய பெரியவன், சாதி ஒழிப்பும் அம்பேத்கரும் எனும் தலைப்பில் வழக்குரைஞர் த. பானுமதி, சாதி ஒழிப்பும் புலேயும் எனும் தலைப்பில் கவிஞர் வெண்ணிலா, சாதி ஒழிப்பும் பெரியாரும் எனும் தலைப்பில் 'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியன், சாதி ஒழிப்பில் சமகால களப்போராளிகள் எனும் தலைப்பில் தோழர் தலித் சுப்பையா ஆகியோர் கருத்தாழமிக்க உரை நிகழ்த்தினர்.

பகல் 1.30 மணியளவில் சட்ட எரிப்பு வீரர்களின் நினைவுப் பகிர்வு நிகழ்ச்சி தொடங்கியது. 1957 ஆம் ஆண்டு நடந்த சட்ட எரிப்புப் போரில் சிறைச் சென்ற 40 போராளிகள் - தஞ்சை, பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்தும், ஆனைமலையிலிருந்தும் வந்து பங்கேற்றனர். முதுமை வாட்டிய நிலையிலும், கொள்கை உறுதியில் இளமையும், துடிப்பும் நிறைந்த அந்தப் போராளிகளின் பங்கேற்பும், வெளியிட்ட கருத்துகளும், கூடியிருந்த பெரியாரின் கருஞ்சட்டைத் தோழர்களை உணர்ச்சி வயப்படுத்தி, 'மின்காந்த வீச்சை' உருவாக்கியது என்றே கூறலாம். உணர்ச்சிப் பிழம்பான அந்த நிகழ்வில் ஒவ்வொருவரின் கண்களிலும் கண்ணீர். பெரியார் கொள்கைக்காக மகத்தான தியாகங்களைப் புரிந்து விட்டு, விளம்பர வெளிச்சங்களைத் தேடாத, உண்மையான கருப்பு மெழுகுவர்த்திகளை சந்தித்தபோது, ஏற்பட்ட உணர்வுகளை வடிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. இதுவே, அரங்கம் முழுதுமிருந்தும் நிறைந்திருந்த உணர்வாக இருந்தது. சட்ட எரிப்பில் சிறை சென்று வயது முதிர்ந்த நிலையில் உடல்நலப் பாதிப்புக்குள்ளாகியுள்ள நாகை எஸ்.எஸ். பாட்சா, தலைமை ஏற்று, தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து சட்ட எரிப்புப் போராளிகள் அந்தூர் பொன்னுச்சாமி, சோழபுரம் முருகேசன், காளி. மனோகரன், சீர்காழி லாலா, திருமங்கலக்குடி சோவிந்தராசன் ஆகியோர் தங்களது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். 'பெரியாரை இழிவுபடுத்தும் எவனையும் விடேன்' என்ற உறுதியோடு களத்தில் தாக்குதல் போராளியாகவே வாழ்ந்த லட்சிய வீரர், திருச்சி தியாகு நிகழ்ச்சியில் பங்கேற்று, தனது அனுபவங்களை உள்ளம் திறந்து வெளிப்படுத்தியது, கழகச் செயல்வீரர்களை மிகுந்த உணர்ச்சி வயப்படுத்தியது. உள்ளத்தில் ஆணி அடித்ததுபோல் அவரது உரை வீச்சு ஒவ்வொன்றும் பதிந்துவிட்டது என்றே கூறவேண்டும். கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர் திருவாரூர் தங்கராசு வரலாறுகளை நினைவுகூர்ந்து, நெகிழ்ச்சியான உரை நிகழ்த்தி, சட்ட எரிப்புப் போராளிகளுக்கு, கழக சார்பில் நினைவுப் பரிசுகளை வழங்கினார். பெரம்பலூர் மாவட்டக் கழக அமைப்பாளர் இலட்சுமணன் நன்றி கூற பகல் 3 மணி அளவில் காலை நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

### தஞ்சையைக் குலுக்கிய பேரணி

பிற்பகல் 4 மணியளவில், ஜூபிடர் திரையரங்கம் அருகிலிருந்து கோவை தெற்கு மாவட்டத் தலைவர் க.கருமலையப்பன் தலைமையில், சாதி ஒழிப்புப் பேரணி புறப்பட்டது. பெரம்பலூர் மாவட்டக் கழகத் தலைவர் துரை. தாமோதரன் தொடங்கி வைத்தார். சீருடையுடன் கழகக் கொடி ஏந்தி, பெரியார் திராவிடர் கழகத் தோழியர்களும், தோழர்களும், குழந்தைகளும், சாதி ஒழிப்பு முழக்கங்களை எழுப்பி கட்டுப்பாடாக அணி வகுத்து வந்த நீண்ட பேரணியைக் கண்டு, தஞ்சை நகரமே வியந்தது. "பெரியார் திராவிடர் கழகத்தில் இத்தனை ஆயிரம் இளைஞர்களா ?" என்று பார்த்தவர்கள் புருவத்தை உயர்த்தியது பேரணி.

சட்டத்தை எரித்து சிறைச் சென்ற சாதி ஒழிப்புப் போராளிகள் தீரன் சின்னச்சாமி நினைவு ஊர்திகளில் அழைத்து வரப்பட்டனர்.

6.30 மணியளவில் பேரணி திருவள்ளுவர் திடலை (திலகர் திடல்) வந்தடைந்தது. மன்னை தங்கம் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து திருப்பூர் தந்தை பெரியார் சிறுவர் கலைக்குழு சார்பில் திருப்பூர் தியாகு ஒருங்கிணைத்த பகுத்தறிவுப் பிரச்சார நாடகம் அனைவரின் பாராட்டுகளையும் பெற்றது. தொடர்ந்து, ஈரோடு மாவட்டக் கழகச் செயலாளர் இராம. இளங்கோவன் எழுச்சிமிகு வரவேற்புரையாற்றினார்.

சாதியை ஒழிக்க அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் (வரலாற்று ஆவணம்) நூலை பெரியாரிய எழுத்தாளர் தோழர் சங்கமித்ரா வெளியிட தஞ்சை மருதவாணன் பெற்றுக் கொண்டார். நூலை அறிமுகம் செய்து தஞ்சை குப்பு வீரமணி உரையாற்றினார். தொடர்ந்து பிற்படுத்தப்பட்ட மைனாரிட்டி சமூகங்களின் பணியாளர் கூட்டமைப்பு என்ற மறைந்த கன்ஷிராம் தொடங்கிய அமைப்பின் தமிழ்நாடு பொதுச்செயலாளர் மராட்டியத்தைச் சார்ந்த தனோஜ்மேஷ் ராம் ஆங்கிலத்தில் உரையாற்றினார். விடுதலை இராசேந்திரன் தமிழில் மொழி பெயர்த்தார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் துரைசாமி, திருவரங்கம் பெரியார் சிலை உடைப்புக்கு எதிர்வினையாற்றிய கழகத் தோழர்களுக்கு விருது வழங்கி பாராராட்டி உரை நிகழ்த்தினார். தொடர்ந்து பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், திருவாரூர் தங்கராசு ஆகியோர் சிறப்புரைக்குப் பிறகு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத்தின் போராட்ட அறிவிப்பை வெளியிட்டு உரையாற்றினார். மாநாட்டின் இறுதியில் பெரியார் இயக்கத்தோடு, பொது வாழ்க்கையில் நுழைந்து, தலித்தியப் போராளிகளின் வரலாறுகளைப் பதிவு செய்த வரலாற்று எழுத்தாளர் தோழர் வள்ளிநாயகம் திடீர் மறைவுக்கு வருந்தி, ஒரு நிமிடம் மவுனம் பின்பற்றப்பட்டது. மாநாடு அலுவலகப் பொறுப்பாளராக பொறுப்பேற்று செயல்பட்ட தோழர் திருப்பூர் இராவணன் நன்றி கூற, 10.45 மணியளவில் மாநாடு நிறைவடைந்தது.

**– நமது செய்தியாளர்**

### தோழர் வள்ளிநாயகம் முடிவெய்தினார்

பெரியாரிய - அம்பேத்கரிய சிந்தனையாளரும், சீரிய சமநீதி எழுத்தாளருமாகிய குடந்தை வள்ளிநாயகம் (54) மாரடைப்பால், மே 19 ஆம் தேதி மாலை சென்னையில் முடிவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். திராவிடர் கழகத்தின் இளைஞரணியில் 1970களில் தீவிரப் பங்கெடுத்து களப்பணியாற்றிய செயல்வீரர் வள்ளிநாயகம் இருட்டடிக்கப்பட்ட தலித் தலைவர்களின் வரலாறுகளைத் தேடித் தேடி சேகரித்து, அவற்றைத் தொடர்ந்து 'தலித் முரசு' ஏட்டில் ஆவணமாக்கிய மிகச் சிறந்த பணியை அண்மைக் காலமாக செய்து வந்தார். அம்பேத்கர், புத்தர், தலித் போராளிகள் பற்றிய பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். பெரியார் குடும்பத்தைச் சார்ந்த தோழர் ஓவியாவை சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். ஜீவ சகாப்தன் என்ற மகன் இருக்கிறார்.

சென்னையில் திடீரென மறைவடைந்த தோழர் வள்ளிநாயகம் உடல், மதுரையில் அவரது இல்லத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. 20 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தாமரைக் கண்ணன், மதுரைத் தோழர்கள் தமிழ்ப் பித்தன், வெண்மணி, முருகேசன், வாசுகி ஆகியோர், வள்ளிநாயகம் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

துணைவரை இழந்து துயருற்றுள்ள, நமது பெரியார் குடும்பத்தின் தோழர் ஓவியாவுக்கும், அவரது மகனுக்கும் கழக சார்பில் இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 25th May 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.